# உதயன்


சுடர் 30 | கதிர் 205 | வள்ளுவர் ஆண்டு 2046 | ஆனி 05, சனிக்கிழமை 20.06.2015


## மின்னல் குழுவை கைது செய்ய நேற்று உத்தரவு

வடமராட்சி, ஜூன் 20
வடமராட்சி வதிரிச் சந்தியில் குளிர் பான நிலையம் ஒன்றுக்கு முன்னால் காவாலித்தனமான முறையில் பெண்களுடன் சேட்டை புரிவதாகக் குற்றம் சாட்டப்படும் மின்னல் குழுவைக் கைது செய்து பக்.21

# தேர்தலில் ஐ.தே.க. தனி வழி

### யானைச் சின்னத்திலேயே போட்டி செயற் குழுவில் நேற்றுத் தீர்மானம்



கொழும்பு, ஜூன் 20
ஜனாதிபதித் தேர்தலின்போது கூட்டணி அமைத்து அன்னம் சின்னத்தில் போட்டியிட்ட பிரதான அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தனித்து யானைச் சின்னத்தில் களமிறங்குவதற்கு முடிவெடுத்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட செயற்குழுக் கூட்டம் நேற்றுக் காலை அக்கட்சியின் தலை மையகமான சிறிகொத்தவில் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. இதன்போதே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. பக்.21

## மாவை-முதலமைச்சர் இடையே இணக்கம்

### நேற்றுக் காலை திடீர் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 20
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், வடக்கு மாகாண சபையும் இணைந்து ஒற்றுமையாகச் செயற்பட இணக்கம் எட்டப்பட்டுள்ளது. மேலும், தான் பணம் பெற்றுக்கொண்டதாக வெளிவந்த செய்திகளை முற்றாக மறுத்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பக்.24

## அரசு – புலம்பெயர் தமிழர்கள் பேச்சை கவனிக்கும் ராணுவம்

கொழும்பு, ஜூன் 20
புலம்பெயர் தமிழர்களுடன் இலங்கை அரசு நடத்திய பேச்சுக்களை வெளியில் இருந்து கவனித்து வருவதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
இது குறித்து கொழும்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடந்த செய்தியாளர் சந்திப்பில், கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர, பக்.21

## யாழ்.பல்கலை முறைகேடுகளை விசாரிக்கத் தனிக்குழு வேண்டும்

### ஆசிரியர், ஊழியர் சங்கங்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 20
யாழ்.பல்கலைக்கழகக் கற்கை மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளில் ஏற்பட்ட சீரழிவுகளைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கு – நியமனம் மற்றும் நிதி முறை கேடுகளை விசாரிப்பதற்கு முழுவதும் வெளிவாரிப் பேரவை உறுப்பினர்களைக் கொண்டமைந்த தனி விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்படவேண்டும். இந்தக் குழு வெளிவாரி பேரவை உறுப்பினர்களால் மட்டுமே தெரிவு செய்யப்பட்டதாகவும் அமைய வேண்டும் பக்.24

## 18 நாள்களுக்குள் 13 துஷ்பிரயோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 20
தான் பொறுப்பேற்ற 18 நாள்களில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 13 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக யாழ்.பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி கே.வூட்லர் தெரிவித்தார்.
இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.
யாழ்.வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் யாழ்.பொலிஸ் நிலையத் தலைமைப் பொறுப்பதிகாரிக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று யாழ்.வர்த்தகர் சங்கத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் கருத்துரைக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்; பக்.24

## எனக்குப் பணம் தரப்படவில்லை

### சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 20
எனக்குப் பணம் தரப்படவில்லை. அத்துடன் கூட்டமைப்பில் வேறு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பணம் கொடுக்கப்பட்டதாகவும் எனக்குத் தெரிய வில்லை.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட பக்.21

## வல்லைச் சந்தியில் பொலிஸ் சாவடி

### சுகாதார வைத்திய அதிகாரி கேட்டதால்

யாழ்ப்பாணம், ஜூன் 20
வல்லைச் சந்தியில் பொலிஸ் சோதனைச் சாவடி (பொலிஸ் போஸ்ட்) அமைக்கப்பட்டு வாகனங்கள் சோதனை செய்யப்பட வேண்டும் என்று பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி செந்தூரன் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், உடனடியாக வல் லைச் சந்தியில் சோதனைச் சாவடி அமைக்கப்படும் என்று தெரிவித்தார்.
யாழ்.மாவட்டச் செயலகத் பக்.24

## ஊர்காவற்றுறை பொலிஸில் எமக்கு நம்பிக்கை இல்லை

### மணல் கொள்ளையரை பிடிப்பதுபோல் நடிக்கிறார்கள் அவர்கள் எனப் பிரதேச செயலர் பகிரங்கக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 20
ஊர்காவற்றுறைப் பொலிஸார் மணல் கொள்ளையில் ஈடுபடுபவர்களைப் பிடிப்பது போல் நடிக்கின்றார்கள். ஆனால் பிடிப்பதில்லை. நாங்கள் மணல் கொள்ளையர்களையும், பொலிஸாரையும் கண்காணிக்க வேண்டியிருக்கின்றது. எங்களுக்கு ஊர்காவற்றுறைப் பொலிஸாரில் நம்பிக்கையில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள பக்.24

## மாணவரின் போதைப் பாவனையை கட்டுப்படுத்த ஒத்துழைப்பு இல்லை

### அதிபர்கள் மீது உளசமூக உத்தியோகத்தர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 20
பாடசாலைகளில் மாணவர்கள் போதைப் பொருள் பாவிப்பதைக் கட்டுப்படுத்துவதற்கும், அது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதற்கும் பாடசாலை அதிபர்கள் ஒத்துழைப்புத் தருவதற்குத் தயங்குகின்றார்கள். இதனால் இந்த விடயங்களில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுப்பதில் சிரமங்கள் இருக்கின்றன.
இவ்வாறு யாழ்.மாவட்டச் செயலக உள சமூக உத்தியோகத்தர் கே.கௌதமன் பக்.24

## வீடுகளில் குடிக்கவிட்டால் வீதிகளில் குடி குறையுமாம்

### கொடிகாமம் பொலிஸ் அதிகாரியின் விளக்கம் இது

யாழ்ப்பாணம், ஜூன் 20
யாழ்.குடாநாட்டில் வீடுகளில் குடிப்பதற்குத் தடை செய்யப்பட்ட கலா சாரம் இருப்பதனால் தான், வீதிகளிலும் – சந்திகளிலும் நின்று குடிக்கின்றார்கள். பணக்காரர்கள் ஹோட்டலிலும் – விடுதிகளிலும் குடிக்கின்றனர். அன்றாடம் கூலி வேலை செய்பவர்கள்தான் வீதிகளில் நின்று குடிக்கின்றார்கள். வீடுகளில் குடிக்க அனுமதித்தால் இந்தப் பிரச்சினை வராது என்று, கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டார தெரிவித்தார்.
யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில், அதிகரித்த மதுப்பாவனை மற்றும் பக்.24


தேனிசை இராகங்கள்

நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும்
தேனிசை இராகங்கள் (இசை நிகழ்ச்சி)

[illegible] (27.06.2015) சனிக்கிழமை [illegible] யாழ்ப்பாணம் [illegible] மாலை 6.00 மணிக்கு

நுழைவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளும் இடங்கள் (இருக்கை வசதி உண்டு)

* யாழ்ப்பாணம் - வெல்கோ பார்மசி
* யாழ்ப்பாணம் - ஹொண்டா வேல்ட்
* யாழ்ப்பாணம் - கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்
* வல்வெட்டித்துறை - வி.கே.விடியோ
* யாழ்ப்பாணம் - டயல் லக் போன் சொப்
* நாவாந்துறை - தயா விடியோ சென்ரர்
* கன்னாகம் - மெடிகெயார்
* உடுப்பிட்டி - துளசி மலர்
* சங்கானை - ஆசைப்பிள்ளை அன் சன்ஸ்
* சித்தங்கேணி - பான் பார்மசி
* அச்சுவேலி - எஸ்.எ.மொபைல்
* நெல்லியடி - ஈமொபைல்
* சாவகச்சேரி - குகன் ஸ்ருடியோ
* கொடிகாமம் - சன் விபூ
* பருத்தித்துறை - ராஜன் சைக்கிள் வேக்ஸ்
* நெல்லியடி - த போன் சொப்

0771013235

பிரதான அனுசரணை: Rio Ice Cream, Hari Engineers,

ஊடக அனுசரணை: உதயன்


Digitized by Noolaham Foundation.

# தமிழர்களின் துன்பத்தையே கொண்டாடியது மஹிந்த அரசு

## நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஜூன் 20

போரின் இறுதிக்கட்டத்தில் ஆயிரமாயிரம் மக்கள் கொல்லப்பட்டனர். சிறுவர்களும் பெண்களும் கொடுமையான சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். இந்தத் துன்பங்களையே ராஜபக்ஷ அரசு போர் வெற்றியென்று விழா வெடுத்துக் கொண்டாடியது. – இவ்வாறு தெரிவித்தார் நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன.

யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் அந்தக் கட்சியால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கடந்த பத்து வருடங்களாக பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம் அல்லாமல் ஒரு பாசிச ஆட்சிக்குள் நாம் முடங்கிக் கிடந்தோம். தனிநபர் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், அமைப்புக்களுக்கான சுதந்திரம் என்று எதுக்கும் மஹிந்த அரசு இடமளிக்கவில்லை. இவை மாற்றம்பெற வேண்டும் என்று சிந்தித்து அனைவரும் இணைந்து மைத்திரி அரசை தெரிந்தெடுத்தோம். தற்பொழுது நிலைமை சிறிது மாற்றம்பெற்றுள்ளது.

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொலையையடுத்து வெடித்த மக்கள் போராட்டங்கள் மைத்திரி அரசு மக்களுக்கான சுதந்திரங்களை (போராடுவதுக்கானதும், கருத்துத் தெரிவிப்பதுக்கானதுமான சுதந்திரம்) ஓரளவு வழங்கியுள்ளது என்று தெரிகிறது. ஆனபோதும் திருப்தியாக இல்லை. இன்னமும் எட்டப்படவேண்டிய இலக்கு எவ்வளவோ உண்டு. அந்த இலக்கை அடைவதுக்காகவும் சிறுபான்மையின் இருப்பைப் பாதுகாக்கவும் சிறுபான்மைக் கட்சிகள் ஒன்றுதிரண்டு ஒற்றுமையாகச் செயற்பட்டு சிறுபான்மை மக்களின் வலிமையையும் அவர்களின் இருப்பையும் உறுதிசெய்ய வேண்டும்.

கடந்தகால அரசியல் போக்கால் அரசியல் என்றாலே தூர நிற்கும் அளவுக்கு இளைஞர்கள் விரக்தியடைந்துபோய் உள்ளனர். இந்த எண்ணங்கள் படிப்படியாக மாற்றப்பட்டு இளைஞர்கள் சமுதாயத்துக்காகவும் தமது மக்களுக் காகவும் குரல்கொடுக்கும் உணர்வை அவர்களுக்குள் ஏற்படுத்த வேண்டும்.– என்றார்.

குறித்த நிகழ்வில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான அமைப்பின் தலைவர் பூமிநாதன், பேராசிரியர் சிவச்சந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம)



# நீதிமன்ற தாக்குதல் சம்பவம்; 30 பேருக்கு பிணை அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 20

கடந்த மாதம் 20ம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 30 சந்தேகநபர்களை ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணையாளிகளின் பிணையில் விடுவிக்குமாறு யாழ்.நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 47 சந்தேகநபர்கள் கடந்த மாதம் 21ஆம் திகதி யாழ்.நீதிவான் நீதிமன்றில் இரண்டு வழக்குகளின் கீழ் முற்படுத்தப்பட்டிருந்தனர். கடந்த தவணை இவ்வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது 17 சந்தேகநபர்களுக்கு நீதிமன்றினால் பிணை வழங்கப்பட்டது. ஏனைய சந்தேகநபர்களை நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் அனுராதபுரம் சிறைச்சாலை அதிகாரிகளால் பொலிஸாரின் பாதுகாப்புடன் சந்தேகநபர்கள் மன்றில் முற்படுத்தப் பட்டிருந்தனர். சந்தேகநபர்களுக்காக முற்பட்ட சட்டத்தரணிகள் கைது செய்யப்பட்டவர்களை பிணையில் விடுவிக்குமாறு கோரினர்.

அதற்கு பதிலளித்த பொலிஸார் சந்தேகநபர்களுக்கெதிரான விசாரணைகள் முடிவுறவில்லையெனவும் எனினும் மன்று பொருத்தமான பிணையில் சந்தேகநபர்களை விடுவிக்கலாம் என்றும் தெரிவித்தனர். அதனையடுத்து நீதிவான் பெ.சிவகுமார் சந்தேகநபர்கள் எதிர்காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது எனவும், நன்நடத்தை பேணவேண்டும் எனவும் ஏதாவது குற்றச் செயல்களில் ஈடுபட்டால் வழக்கு நடவடிக்கைகள் முடிவடையும் வரை விளக்கமறியலில் இருக்க வேண்டுமென எச்சரித்து தலா ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான கிராமசேவகரினதும் ,பிரதேச செயலகரினதும் சான்றிதழை முற்படுத்தும் இரண்டு பிணையாளிகளின் பிணையில் சந்தேகநபர்களை விடுவித்ததுடன் மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் அவர்கள் அனைவரையும் ஒன்பது மணிக்கும் பன்னிரண்டு மணிக்கும் இடையில் யாழ்ப்பாண தலைமைப் பொலிஸ்நிலையத்தில் கையொப்பம் இடுமாறும் உத்தரவிட்டார். வழக்குகள் ஜூலை மாதம் 27ஆம் திகதி மற்றும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதிகளில் மேலதிக விசாரணைகளுக்கு நியமிக்கப்பட்டன.

இதேவேளை இவ்வழக்கில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் நீதிமன்றால் இரண்டு லட்சம் ரூபா பிணை முறியில் விடுவிக்கப்பட்டன. (ற–103)

## வரவேற்பு நிகழ்வும் வழிபாடும்

யாழ்ப்பாணம், ஜூன் 20

இலங்கை மெதடிஸ்த திருச்சபை, பருத்தித்துறை கட்டைவேலி சேகரம் நடத்தும் வடக்கு, கிழக்கு திருமாவட்ட அவைத் தலைவர் அருட்திரு எஸ்.எஸ்.றெரன்ஸின் வரவேற்பு நிகழ்வும் வழிபாடும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த ஆலயத்தில் நடைபெறும்.

திருமுழுக்கு திடப்படுத்தல் வழிபாடு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கட்டைவேலி மெதடிஸ்த ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (ற–35)

## இணையம் மூலம் பாலியல் அழுத்தம்; கட்டுப்படுத்த விசேட செயற்றிட்டம்

கொழும்பு, ஜூன் 20

முகப்புத்தகம் போன்ற சமூக வலைத்தளங்கள் உள்ளிட்ட சர்வதேச இணையத்தளங்கள் மூலமாக மற்றும் தொலை பேசி கள் மூலம் இளையோருக்கு ஏற்படுத்தப்படும் பாலியல் அழுத்தங்கள் மற்றும் தொந்தரவுகளை மேற்கொள்ளும் நபர்களுக்கு எதிரான சட்டத்தை கடுமையாக நடை முறைப்படுத்துவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை விசேட செயற்றிட்டம் ஒன்றை கட்டமைத்துள்ளது.


அது தொடர்பாக விசேட செயலணியொன்று நியமிக்கப்படவுள்ளதோடு அச் செயலணியில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, சட்டமா அதிபர் திணைக்களம் பொலிஸ் திணைக்களம் நீதி அமைச்சின் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்கள் உள்ளடங்கியிருப் பார்கள் எனவும் மேற்படி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன் பிரகாரம் சிறார்களுக்கு மற்றும் இளையோருக் தொந்தரவுகளைச் செய்வதற்கு, துன்புறுத்தல்களை மேற்கொள்வதற்கு அச்சுறுத்தல் விடுப்பதற்கு மற்றும் பணத் தொகைகளை பெற்றுக்கொள்வதற்கு இணையத்தளங்களை பயன்படுத்தி கொள்ளும் நபர்களுக்கு இனிமேல் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவிக்கிறது. (ற–22)

# முதியோர் கொடுப்பனவு 25ஆம் திகதிக்கு முன்னர்

## சமூக சேவைகள் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க உறுதி

கொழும்பு, ஜூன் 20



70வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கு வழங்கப்படும் இம்மாதத்துக்குரிய மக்கள் உதவிப்பணம் இம் மாதம் 25ம் திகதிக்கு முன்னர் வழங்கப்படவுள்ளது என்று பிரதியமைச்சர் ரஞ்ஜன் ராமநாயக்க உறுதியளித்துள்ளார்.

முதியோருக்கான இந்தக் கொடுப்பனவு கடந்த 15ஆம் திகதி வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் திறைசேரியில் இருந்து உரிய காலத்துக்குப் பணம் வழங்கப்படாததன் காரணமாக தபால் அலுவலகங்களில் அந்தக் கொடுப்பனவை வழங்குவது இடைநிறுத்தப்பட்டிருந்தது. தற்போது அந்த நிதிகிடைத்திருப்பதால் அறிவிக்கப்பட்டிருப்பதற்கு அமைய கொடுப்பனவுகள் வழங்கப்படுமெனவும் பிரதியமைச்சர் தெரிவித்தார்.

நாடு முழுவதிலுமாக 386ஆயிரம் பேர் வரையிலான மூத்த பிரஜைகள் இந்த கொடுப்பவை பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளனர்.(ற–22)

## நாகபூசணி அம்மன் திருவிழாவை முன்னிட்டு அன்னதானம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

புங்குடுதீவு மேற்கு குறிகாட்டுவன் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் அன்னதான சபையின் ஸ்தாபகரால், நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் திருவிழாவை முன்னிட்டு அன்னதானம் இன்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை வழங்கப்படவுள்ளது. (ஐ)

## வருடாந்த திருவிழா

அளவெட்டி, ஜூன் 20

கந்தரோடை வற்றாக்கைப்பதி ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமிகள் திருக்கோவில் வருடாந்த பிரம்மோற்சவப் பெருவிழா கடந்த 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன ஆரம்பமாகி தொடர்ந்து 12நாள்கள் திருவிழா நடைபெறும். (ற–36)

# 12 கர்ப்பிணிகள் உட்பட 30 பேருக்கு இம்புளுவன்சா தாக்கம்

## மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று வவு.வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் அறிவுறுத்து

வவுனியா, ஜூன் 20

இன்புளுவன்சா வைரஸ் தாக்கம் காரணமாக 12 கர்ப்பிணிப் பெண்கள் உட்பட 30 பேர் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் என்று வவுனியா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் சுதர்சினி விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் இன்புளுவன்சா வைரஸ் தாக்கம் வேகமாக பரவி வருகிறது. முல்லைத்தீவில் இருந்து கடந்த முதலாம் திகதி கர்ப்பிணிப் பெண் ஒருவர் எமது வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார். அவருக்கு இன்புளுவன்சா வைரஸ் தாக்கம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். அதன் பின் இன்று வரை 12 கர்ப்பிணிப் பெண்கள் உட்பட 30 பேர் இந்த நோய் தாக்கம் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.– என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இவர்கள் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் அதிக மானவர்கள் முல்லைத்தீவில் இருந்தே மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டவர்களாவர். இந்த வைரஸ் தாக்கம் கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்கள், சிறுநீரக பாதிப்புக்குள்ளானோர் ஆகியோர் மீது வேகமாக தொற்றுகின்றது.

வைத்தியசாலையில் இந் நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளமையால் சிறுவர்கள், முதியவர்கள், கர்ப்பிணிப் பெண்களை தேவையற்ற வகையில் வைத்தியசாலைக்கு அழைத்து வருவதை தவிர்க்கவும். இந் நோய்க்குரிய மருந்து அரச வைத்திய சாலைகளில் மட்டுமே உள்ளது. எனவே, காய்ச்சல், தடிமன், தலையிடி போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். பொதுமக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும்.– என் றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதீனியத்தை அழிக்காவிடில் இனி நீதிமன்றூடாக தண்டனை

## அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரிகளாக மூவர் நியமிப்பு

அச்சுவேலி, ஜூன் 20
பாதீனியத்தை அழிக்கத் தவறுவோருக்கு இனிமேல் நீதிமன்று ஊடாகத் தண்டனை விதிக்கப்படவுள்ளது. இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரிகளாக மூவர் யாழ். மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர்.
யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த விவசாய பாடவிதான அதிகாரிகளான ஏ.சிவபாலன், திருமதி ஜெ. கவிதா, திருமதி பெ.ஜனகன் மூவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் உதவி விவசாயப் பணிப்பாளர் நாயகத்தால் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டுள்ளது.
1990ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தாவரப் பாதுகாப்பு சட்டத்தின் படி பாதீனியம் விளை நிலங்களில் அல்லது வீட்டு வளவுகளில் காணப்படின் அதனை அழிப்பது உரிமையாளர்களின் கடமையா கும்.



அழிக்கத் தவறின் குற்றமிழைத்தவராகக் கருதப்பட்டு ஆறு மாதங்கள் வரை சிறைவாசமும் ஒரு லட்சம் ரூபா வரை தண்டப் பணமும் அறவிடப்படும்.
அமெரிக்காவில் இருந்து கோதுமையுடன் இந்தியாவுக்கு 1980 ஆம் ஆண்டு வந்து சேர்ந்த பாதீனியம் 1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தின் வருகையை அடுத்து அவர்களின் உணவுக்காக கொண்டு வரப்பட்ட ஆடுகளுடன் இலங்கைக்கு வந்து சேர்ந்தது.
ஆக்கிரமிப்புக் களையான பாதீனியம் செடி வருடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் பூத்து காய்ப்பதோடு ஒரு செடி அதன் வாழ்நாளில் 15 ஆயிரம் விதைகளை உருவாக்கி பல்கிப் பெருகும்.
அண்மைக்காலத்தில் பாதீனியச் செடியை அழிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு காணி உரிமையாளர்களின் ஒத்துழைப்பு பொருத்தமான அளவு கிடைக்கத் தவறியமையால் சட்ட நடவடிக்கைமூலம் காணி உரிமையாளர்களை வற்புறுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-11)

# ஆணைக்குழு விசாரணை திருமலையில் 27ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜூன் 20
காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு, இந்த மாத இறுதியில் திருகோணமலை மாவட்டத்தில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது. எதிர்வரும் 27 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரையில் விசாரணைகள் இடம் பெறவுள்ளன.
மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மூதூர், சேருவல, ஈச்சலம்பற்று, கிண்ணியா, தம்பலகாமம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கான விசாரணை மூதூர் பிரதேச செயலகத்தில் 27 ஆம் மற்றும் 28 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையில் இடம்பெறவுள்ளது.
திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் 29 ஆம் மற்றும் 30 ஆம் திகதிகளில் விசாரணை இடம்பெறவுள்ளது. இதன்போது திருகோணமலை நகரம், படவிசிரிபுர, குமரன்கடவெல, கந்தளாய், மொரவெளி, குச்சவெளி ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனர். (ற-5)

# பெண்ணின் தலைமுடியை பிடித்திழுத்தவர் சிறைக்குள்

*எந்தக் குற்றம் நடந்தாலும் அறிவுக்குமாறு பொலிஸார் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜூன் 20
பெண்ணின் தலைமுடியைப் பிடித்து இழுத்தவர் உட்பட யாழ். பொலிஸ் பிரிவில் 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே. வூட்லர் தெரிவித்தார்.
யாழ். வர்த்தக சங்கப் பிரதிநிதிகளுக்கும் யாழ்.பொலிஸ் நிலைய தலைமைப்பொறுப்பதிகாரிக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று யாழ்.வர்த்தக சங்கத்தில் நேற்று இடம்பெற்றது.
அதில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
குறித்த பெண் வீதியால் சென்று கொண்டிருந்தபோது வீதியில் நின்றிருந்த குழுவில் ஒருவர் குறித்த பெண்ணின் தலைமுடியைப் பிடித்து இழுத்துள்ளார். அது பற்றி முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டார். அவர் விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளார். அவரைப் பிணையில் விட பொலிஸார் சம்மதிக்க மாட் டார்கள். அவர் உட்பட அவ்வாறான குற்ற சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் சிறையில் தள்ளப்பட்டுள்ளனர்.
பொலிஸார் கடமைக்கு வந்தால் சுமாராக 40 நாள்கள் வரையில் பணியில் இருப்பார்கள். பின்னர் தான் வீடு போவார்கள். அவ்வாறு இருக்கும் பொலிஸாருக்கு வேலை கொடுக்க வேண்டியது பொதுமக்கள் தான். எனவே எதுபற்றிய குற்றச் செயல்களாக இருப்பினும் சரி, சாதாரண குற்றங்களாகினும் சரி பொலிஸாருக்கு முறையிடுங்கள். பொலிஸாருக்கு மது, மாது, போத்தல் என எந்தப் பொருள்களும் வாங்கிக் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. அப்படி யாராவது கேட்டால் தனக்கு அறிவியுங்கள் - என்று அங்கு அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# இளைஞர் குழுக்களிடையே மல்லாகத்தில் முறுகல் நிலை

## மோட்டார் சைக்கிள் எரிப்பு: இருவர் கைது

வலி.வடக்கு, ஜூன் 20
இரு இளைஞர் குழுக்களுக்கு இடையே நீண்ட நாள்களாக நிலவிய பகைமையால் சுமார் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்று தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.
அதையடுத்து குழு மோதல் ஒன்று ஏற்படவிருந்த நிலையில் தெல்லிப்பழைப் பொலிஸாரின் உடனடி நடவடிக்கையால் தவிர்க்கப்பட்டது.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.
மல்லாகம் - ஏழாலைப் பகுதியில் உள்ள குறித்த இரண்டு இளைஞர் குழுக்களுக்கிடையே நீண்ட நாள்களாகப் பகைமை நிலவி வருகின்றது என்றும் அதனால் பல தடவைகள் வாள்வெட்டு, அடிதடி என்பன நடைபெற்று வருகின்றது என்றும் பொதுமக்கள் தெரிவித் தனர்.
கடந்த சில நாள்களாக இரு குழுவினரும் அமைதி காத்து வந்துள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு ஒன்பது மணிக்கு மீண்டும் இரு குழுக்களுக் கிடையே அடிதடி ஏற்பட் டுள்ளது. ஒரு குழுவைச் சேர்ந்த இருவரை மற்றைய குழுவினர் ஆபத்தான ஆயுதங்கள் சகிதம் துரத்திச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
மோட்டார் சைக்கிளில் மல்லாகம் காங்கேசன்துறை வீதியால் தப்பியோடிய இருவர் அங்குள்ள ஒழுங்கையால் ஒன்றினூடாகத் தப்பிச் செல்ல முயன்றுள்ளனர். ஆனால் அந்த ஒழுங்கை ஒரு வீட்டுடன் முடிவடைந்துள்ளது. அதையடுத்து அவர்கள் மோட்டார் சைக்கிளை அங்கேயே கைவிட்டு மதில் பாய்ந்து வீட்டு வளவுகள் ஊடாக ஓடித் தப்பினர் என்று கூறப்படுகின்றது.
அவர்களைத் துரத்தி வந்தவர்கள் கைவிடப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை தீயிட்டுக் கொளுத்தி யுள்ளனர். சுமார் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான அந்த மோட்டார் முற்றாக எரிந்து நாசமா கியுள்ளது.
சம்பவ இடத்துக்கு தெல்லிபழைப் பொலிஸார் விரைந்து வந்த போதும், குறித்த குழு அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டது. ஆயினும் வீடு ஒன்றுக்குள் பதுங்கி இருந்த இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப் பட்டவர்கள் மயிலணி பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக் கப்பட்டது.
பொலிஸார் இந்தச் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ற-86)

# குருநகரில் 20 கிலோ டைனமைட் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20
குருநகரில் வீடு ஒன்றிலிருந்து 20 கிலோகிராம் டைனமைட் வெடிபொருள்களை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
போலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார் குறித்த டைனமைட் வெடிபொருள்களைக் கைப்பற்றிய தாகத் தெரிவித்தனர். குறித்த வீட்டில் இருந்தார் என்றுகூறிப் பெண் ஒருவரையும் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-4)




# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

மன்னார், ஜூன் 20
தலை மன்னார் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 14 தமிழக மீனவர்களையும் மீண்டும் எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.
குறித்த 14 பேரும் தலைமன்னார் கடற்பரப்பினுள் அத்து மீறி நுழைந்து மீன்பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு கடந்த 2 ஆம் திகதி மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளினூடாக மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பட்டிருந்தனர். விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் குறித்த அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.
இந்த நிலையில் குறித்த 14 தமிழக மீனவர்களும்நேற்று வெள்ளிக் கிழமை மீண்டும் மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். அதன் போது குறித்த மீனவர்களை மீண்டும் எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற-56)

# எம்மிடம் கெஞ்சுவதால் பயனில்லை பிள்ளைகளிடம் கண்டிப்பாக இருங்கள்

## பெற்றோருக்குப் பொலிஸார் அறிவுரை

யாழ்ப்பாணம், ஜூன் 20
யாழ்.நகருக்கு அண்மையில் 'மாவா' போதைப் பொருள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மாணவனது குடும் பத்தினரிடம் விசாரணைக்குச் சென்ற போது 'சொறி சேர்' 'சொறி சேர்' எனக் கெஞ்சுகின்றனர். அதனால் பயன் ஏதும் ஏற்படப்போவதில்லை. அந்த மாணவர்கள் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். - இவ்வாறு யாழ்.பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகர் கே.வூட்லர் தெரிவித்தார்.
யாழ்.வர்த்தக சங்கத்தினருடனான கலந்துரையாடலின்போதே அவர் இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டார்.
பாடசாலையில் கற்கும் மாணவர் சக மாணவருக்குக் கத்தியால் குத்தியுள்ளார். மற்றொரு மாணவர் சக மாணவர்களுக்கு 'மாவா' என்கின்ற போதைப் பொருளை விற்பனை செய்துள்ளார். மாணவர்களிடையே அந்த போதைப் பொருள்கள் பயன்பாட்டிலிருப்பது பெற்றோருக்கு எந்தளவு தெரியும்? அது பற்றி பெற்றோராகிய நீங்கள் அக்கறை கொண்டுள்ளீர்களா?- என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.
மாவா போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட மாணவனது விசாரணை முன்னெடுக்கப்படுகிறது. அது பற்றி அந்த மாணவரது வீட்டுக்குச் சென்றபோதே குறித்த மாணவனின் பெற்றோர் 'சொறி சேர்' 'சொறி சேர்' என்கின்றனர் என்று வூட்லர் தெரிவித்தார். எனினும் விசாரணை தொடர்கிறது.- என்று குறிப்பிட்ட அவர் - பெற்றோர் பிள்ளைகளிடம் கண்டிப்புடனும் அக்கறையுடனும் இருக்க வேண்டும். பெற்றோர் தமது பிள்ளைகள் தொடர்பில் எந்தள வுக்கு அக்கறை கொண்டுள்ளனர் என்பது இந்தச் சம்பவத்தில் இருந்து புலனாகின்றது. ஒவ்வொரு பெற்றோரும் இதை உணர்ந்து அதற்கேற்ப செயற்பட வேண்டும்.- என்றும் தெரிவித்தார். (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்ம சங்கமம்

யாழ்.இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தின் ஏற்பாட்டில் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் ஆன்ம சங்கமம் நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நல்லூர் வடக்கு, அருளம்பலம் வீதியில் அமைந்துள்ள கருவி மாற்றுத்தி னாளிகளின் சமூக வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

கருவி அமைப்பின் தலைவர் க.தர்ம சேகரம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு இராமகிருஸ்ண மிஷனிலிருந்து சுவாமி ரிதமயானந்தஜி மகராஜ் கலந்து கொள்வார். நிகழ்வில் ஆன்மிக உரை, நாடகம், தீபாரதனை என்பன இடம்பெறும். (ஐ)

## வருடாந்த பெரும் திருவிழா

நீர்வேலி ஸ்ரீ செல்லக் கதிர்காம சுவாமி திருக்கோயிலின் வருடாந்த மகோற்சவம் இன்று சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாள்கள் திருவிழா இடம்பெறும்.

எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை காலை குமாரபுஷ்கரணியில் தீர்த்தோற்சவம் இடம்பெறும். 2ஆம் திகதி வியாழக்கிழமை மாலை திருக்கல்யாண திருவிழா இடம்பெறும்.

தேவஸ்தான குரு சிவஸ்ரீ தியாக மயூரகிரி குருக்கள் மகோற்சவத்தை நடத்திவைப்பார். (ந-17)

# வடக்கின் வசந்தத்தின் இலவச மின்னிணைப்பு இனிமேல் இல்லை

### உடனடியாக நிறுத்துமாறு உத்தரவு

கிளிநொச்சி, ஜூன் 20

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இதுவரை வழங்கப்பட்டு வந்த இலவச மின் இணைப்பை உடனடியாக நிறுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவால் பெரும் எண்ணிக்கையான மக்கள் பாதிப்படைவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

போரில் அதிகம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். அங்குள்ள கிராமங்கள் 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மின் சாரம் அற்றநிலையிலேயேகாணப்பட்டன. போர் முடிவடைந்த பின்னர் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் அங்குள்ள வீடுகளுக்கு மின் சார இணைப்புகள் இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இருப்பினும் பின்னர் அந்தத் திட்டம் மட்டுப்படுத்தப்பட்டு பிரதான மார்க்கத்தில் இருந்து 500 மீற்றர் தூரத்துக்கு உட்பட்ட வீடுகளுக்கே இலவச மின்னிணைப்பு வழங்கப்பட்டது.

இந்தநிலையில் இந்தத் திட்டத்தை உடன் நடைமுறைக்கு வரும்வகையில் முடிவுறுத்த அமைச்சு மட்டத்தில் கடந்தமாதம் முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி மின் பொறியிலாளர் தெரிவித்தார். இது தொடர்பான மேலதிக விவரங்களை அமைச்சுடன் தொடர்புகொண்டே பெறமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த முடிவால் இலவச மின் இணைப்புக்கு பதிவு செய்துவிட்டுக் காத்திருக்கும் பெரும் எண்ணிக்கையான மக்கள் ஏமாற்றத்துக்குள்ளாகியுள்ளனர். போரால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்துக்குப் பெரிதும் சிரமப்படும் நிலையில் பணம் செலுத்தி மின் இணைப்புப் பெற்றுக் கொள்வது தம்மால் இயலாத காரியமாகவுள்ளது என்றும் பொது மக்கள் தெரிவித்தனர்.

அதேவேளை, வடக்கின் வசந்தம் திட்டங்கள் நிறுத்தப்பட்டு வரும் நிலையில் சமுர்த்தித் திட்டத்தின் ஊடாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வாய்ப்புகள் உள்ளது என்று சில தகவல் வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன. (ந-21,105)



# திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குழு கைது

### திருட்டுப் பொருள்கள் பலவும் சிக்கின வவுனியா பொலிஸார் அதிரடி நடவடிக்கை

வவுனியா, ஜூன் 20

வவுனியா பிரதேசத்தில் பல பகுதிகளில் கொலை, கொள்ளையில் ஈடுபட்டு வந்த மூவர் கொண்ட குழு நேற்றுமுன்தினம் பொலிஸாரிடம் சிக்கியது. அவர்களிடமிருந்து வாள் மற்றும் கொள்ளையிடப்பட்ட பொருள்கள் சிலவும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா நொச்சி மோட்டை, புதுக்குளம், நெளுக்குளம், மற்றும் குருமன்காட்டுப் பகுதிகளில் வீடுகள் மற்றும் கடைகளை உடைத்து கொள்ளையிட்ட சம்பவங்களுடன் கைது செய்யப்பட்டவர்களுக்கு தொடர்புண்டு என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர்களிடம் இருந்து அவர்களால் திருடப்பட்ட சில பொருள்கள் மீட்கப்பட்டன என்றும் அவர்களால் கொள்ளையிடப்பட்ட நகைகள் சில நகைக்கடை ஒன்றில் விற்பனைக்கு தயாராகவிருந்த



போது மீட்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் யாழ்ப்பாணத்தில் நடந்த கொள்ளைகளில் ஈடுபட்ட கும்பலுடன் தொடர்புடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இது குறித்து விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ந-21)



ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் அமரர் தோழர் க. பத்மநாபாவின் 25ஆவது நினைவு தினம் நேற்று வவுனியாவில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் நடைபெற்றது. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தலைமையில் நினைவஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. இதில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள். ஆதரவாளர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த லொறியுடன் மோதியது 'பட்டா'

### ஒருவர் சாவு: மற்றொருவர் படுகாயம்

வவுனியா, ஜூன் 20

நேற்று அதிகாலை வவுனியா கனகராயன்குளம் பகுதியில் இடம்பெற்றவாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாயைச் சேர்ந்த சிவராசா தனுசியன் (வயது -18) என்வரே விபத்தில் உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிச் சென்ற டிமோ பட்டா ரக வாகனமே விபத்துக்குள்ளானது. கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் வீதியோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றில் பட்டா மோதியுள்ளது. குறித்த வாகனத்தை ஓட்டிச் சென்ற சாரதியே படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் கனகராயன்குளம் பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந-21,421)

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுக்கக் கோரி அடுத்தமாதம் பெருமெடுப்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

### வடக்கின் ஐந்து மாவட்ட மீனவர்கள் கலந்து கொள்வர் என மன்னார் மாவட்ட மீனவ சங்க சமாச தலைவர் என்.எம்.ஆலம் தெரிவிப்பு

மன்னார், ஜூன் 20

வடமாகாண கடற்தொழிலாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என்று கோரி வடக்கு மாகாண மீனவர்கள் ஒன்றிணைந்து யாழ்ப்பாணத்தில் பெரும் அளவில் கண்டன ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளனர். - இவ்வாறு வடக்கு மாகாண கடற்தொழிலாளர் இணையத்தின் தலைவரும், மன்னார் மாவட்ட மீனவ சங்க சமாச தலைவருமான என்.எம். ஆலம் தெரிவித்தார்.

மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக கடந்த வாரம் மன்னாரில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பல கருத்துக்களை முன் வைத்தனர். அவற்றின் அடிப்படையில் அடுத்த மாதம் வடக்கு மாகாண ரீதியில் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களை ஒன்றிணைத்துப் பெருமெடுப்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய மீனவர்கள் தொடர்ச்சியாக இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். அதனால் இலங்கை மீனவர்கள் குறிப்பாக வடமாகாண மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கை கடற்பரப்பினுள் நுழைந்து மீன் பிடிப்பது தொடர்பில் இந்திய அரசும் இலங்கை அரசும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளாது மௌனம் காத்து வருகின்றன.

அதையடுத்தே நாம் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். ஆர்ப்பாட்டத்தை யாழ்.



அரச அலுவலகத்திற்கு முன் அல்லது யாழ்.இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு முன்பாக நடத்துவதற்குத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

வடமாகாண கடற்தொழிலாளர் இணையம் நிர்ணயிக்கும் திகதியில் பெருமெடுப்பில் மக்களையும், மீனவர்களையும் ஒன்றிணைத்து குறித்த கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படும்.

இலங்கையில் உள்ள தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைமைகளை முழுமையாக கைவிட வேண்டும் என்றால் ஒட்டு மொத்த மீனவர்களின் ஒருமித்த கோரிக்கையான இந்திய மீனவர்களின் வருகையை தடை செய்ய வேண்டும். - என்றார். (ந-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிய கட்சிகளது யோசனை உள்வாங்கப்பட வேண்டும்

## கட்சித் தலைவர்கள் ஒன்றிணைந்து வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 20

தேர்தல் முறை மாற்றம் குறித்த 20 ஆவது திருத்தச் சட்ட வரைவில் சிறிய கட்சிகள் மற்றும் சிறுபான்மைக் கட்சிகளின் யோசனைகளையும் உள்ளடக்க வேண்டும். இதன்மூலமே சகல மக்களும் பாதிப்படையாத வகையில் தேர்தல் முறையை மாற்றியமைக்கலாம் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

சிறிய கட்சிகள்மற்றும்சிறு பான்மைக் கட்சிகளினால் நேற்றுக் கொழும்பு பொரளையில் அமைந்துள்ள என்.எம்.பெரேரா கலையரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு கூட்டாக வலியுறுத்தப் பட்டது.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் லங்கா சமசமாஜக்கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ விதாரண, ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணக்கார, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான முத்துசிவலிங்கம்,சோசலிச மக்கள் முன்னணியின் செயலாளர் ராஜா கொல்லுரே மற்றும் ஈ.பி.டி.பி செயலாளரும் எம்.பியுமான டக்ளஸ் தேவானந்தா ஜனநாயக மக்கள் காங்கிரஸின் ஸ்தாபக தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன், சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார:-

புதிய தேர்தல் முறை உள்ளடங்கிய 20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள நிலையில் குறித்த திருத்தத்தில் சிறிய கட்சிகள் மற்றும் சிறுபான்மைக் கட்சிகளை பாதிக்கும் சந்தர்ப்பங்கள் அதிகளவு காணப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் குறித்த திருத்தமானது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளும் முன்னர் சிறியகட்சிகள் மற்றும் சிறுபான்மை கட்சிகளின் யோசனைகளை அரசு கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமானது.

ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்பாடுகள் சர்வதேச நாடுகளின் தேவைக்கு ஏற்றவாறே எல்லா சந்தர்ப்பங்களிலும் அமைந்திருக்கின்றன. அமெரிக்கா எப்பொழுதுமே தமக்கு ஏற்றவகையில் ஆட்சியைக் கொண்டு நடத்தும் அரசை பிறநாடுகளிலிருந்து எதிர்பார்க்கும். அந்தவகையிலான சுழற்சி செயற்பாடுகளையே ஏனைய நாடுகளுடன் முன்னெடுக்கும். அந்த வகையிலேயே இன்று எமது நாட்டிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசை அமெரிக்கா இயக்குகின்றது.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு இந்த அரசு துணைபோவதனால் இன்று எமது நாடு பொருளாதார ரீதியாக பல்வேறு வகையில் பின்னடைவை எதிர்நோக்கி வருகின்றது. இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், நாட்டில் இனவாத செயற்பாடுகளை இல்லாதொழிக்கவுமே சிறியகட்சிகள் உட்பட சிறுபான்மை கட்சிகள் இன்று ஒன்றிணைந்து செயற்பட முன்வந்துள்ளன. எதிர்வரும் பொதுத் தேர்தலில் சக்திமிக்கவரான முன்னாள் ஜனாதிபதி மற்றும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சக்திமிக்கதான அரசாங்கத்தை உருவாக்குவோம்- என்றார்.

லங்கா சமசமாஜக்கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ விதாரண கருத்துத் தெரிவிக்கையில்:-

புதிய தேர்தல்முறையை உள்ளடங்கிய 20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் தேவைக்கு ஏற்றவாறும் ஒரு சிலரின் சுயநலனுக் காகவுமே சிறிய கட்சிகள் மற்றும் சிறுபான்மைக் கட்சிகளின் பாதிப்பு தொடர்பில் அக்கறை செலுத்தாமல் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப் பட்டுள்ளது.

20 ஆவது திருத்தச்சட்டத்தில் சிறிய கட்சிகள் மற்றும் சிறுபான்மை கட்சிகளின் யோசனைகள் மிகவும் அவசியமானவை. அந்த வகையில் முதலாவது எமது யோசனையானது ஒவ்வொரு வாக்காளர்களுக்கும் இரட்டை வாக்கு சீட்டுக்கள் வழங்கப்பட வேண்டும். இதன் மூலம் ஒரு வாக்காளர் ஒரு வாக்கு சீட்டைப் பயன்படுத்தி அந்தத் தொகுதியில் போட்டியிடும் தனக்கு விருப்பமான வேட்பாளருக்கு தமது வாக்கைச் செலுத்த முடியும். இரண்டாவது வாக்கு சீட்டைப்பயன்படுத்தி வாக்காளர் ஒருவர் தனக்கு விருப்பமான கட்சிக்கு தனது வாக்கை அளிக்கும் வகையில் அமைய வேண்டும்.

இந்த முறையே இன்று வளர்ந்து வரும் நாடுகளான ஜேர்மனி, நியூஸிலாந்து போன்றவற்றில் ஜனநாயக ரீதியில் முன்னெடுக்கப்படும் தோதல்களின்போது கடைப்பிடிக்கப்படுகின்றது. இந்த முறையை பின்பற்றும்போது நாடாளுமன்றத்துக்கு அனைத்து பிரதேசங்களிலும் பிரதிநிதிதுவப்படுத்தும் வகையில் தேசிய ரீதியாகவும் தொகுதி வாரி அடிப்படையிலும் உறுப்பினர்கள் தேர்தெடுக்கப்படுவர்.

இன்று எமது நாட்டில் மாவட்ட ரீதியாக சனத்தொகை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதோடு, மக்களின் இடப்பெயர்வுகளும் அதிக ரித்த வண்ணம் உள்ளது. அந்த வகையில் அனைத்து மக்களையும் பிரதிநிதிப்படுத்தும் வகையில் நாடாளுமன்றத்துக்கு பிரதிநிதிகளை உள் வாங்குவது மிகவும் அவசியம்.

ஒரு நாட்டில் ஜனநாயக ரீதியில் அனைத்து மக்களுக்கும் ஏற்றவாறான சட்ட மூலங்களும் திருத்தச் சட்டங்களும்நடைமுறைப்படுத்தத் தவறும் பட்சத்திலேயே நாட்டில் இனவாதிகளிடையே இனவாத செயற்பாடுகள் மற்றும் பயங்கரவாத செயற்பாடுகள் தலைதூக்குகின்றன. எனவே அவ்வாறான நிலைமைகளுக்கு மீண்டும் ஒருபோதும் நாம் இடமளிக்கக் கூடாது.

20ஆவது திருத்தச்சட்டம் என்பது எமது நாட்டுக்கு மிகவும் தேவையானதொரு சட்டத் திருத்தம். இதனை மாற்றியமைக்க மூன்றில் இரண்டு பெருபான்மை வேண்டும். அந்தவகையில் இந்தச் சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்திக் கொண்டு அனைத்து மக்களின் பிரதிநிதித்துவங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தப்படாதவாறு தேர்தல் முறையில் மாற்றம் ஒன்றை கொண்டு வர முயற்சிக்க வேண்டும். இது தொடர்பில் தொடர்ச்சியாக ஜனாதிபதி மற்றும் தேர்தல்கள் ஆணையாளருடன் பேச்சு மேற்கொள்ளவுள்ளோம்.- என்றார்.

இலங்கைத் தொழிலாளர் கங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான முத்துசிவலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில்:-

புதிய தேர்தல் முறைமாற்றமானது நடைமுறைக்கு வரும்பட்சத்தில் பெரும்பாலும் சிறுபான்மை மற்றும் சிறுகட்சிகளை விட பெருந்தோட்ட மக்களின் சார்பில் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்படும் பிரதிநிதித்துவங்களையே அதிகளவு பாதிக்கும்.

புதிய தேர்தல் முறைமாற்றம் காரணமாக பெருந்தோட்ட மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவங்கள் பாதிக்கப்படுவது தொடர்பில் நாம் தொடர்ச்சியாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் தேர்தல்கள் ஆணையாளருக்கும் எமது யோசனையை முன்வைத்துள்ளோம். ஆனால் இதுவரை இது தொடர்பில் எந்தக் கவனமும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில் 20 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்துக்கு வரும்பட்சத்தில் அதற்கு எவ்வாறான சந்தர்ப்பத்திலும் நாம் ஆதரவு வழங்கப் போவது இல்லை- என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா கருத்துத் தெரிவிக்கையில்:-

நாடளாவிய ரீதியில் வாழும் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் நாடாளுமன்ற பிரதிநிதிகள் 20 பேர் உள்வாங்கப் படுகின்றனர். இவ்வாறான நிலையில் புதிய தேர்தல் முறை மாற்றம் காரணமாக இதில் முஸ்லிம் மக்கள் பொதும் பாதிக்கப்படுகின்றனர்.

இந்தத் திருத்தத்துக்கு பெரும்பாலான முஸ்லிம் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சி சுயநலனின் அடிபடையிலேயே செயற்படுகிறது.

எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பெரும்பான்மை பலம் உடைய சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு நாடாளுமன்றத்தை கலைக்கும் காலம்வரை ஆட்சியை கொண்டு நடத்த இடமளிக்க வேண்டும் - என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் கருத்துத் தெரிவிக்கையில்:-

20 ஆவது திருத்தம் எந்த வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பில் கூட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனக்கு தெரியாது. அந்த வகையிலேயே ஐக்கிய தேசியக்கட்சியின் அரசு ஆட்சி செய்து வருகின்றது.

இந்த ஆட்சியின் செயற்பாடுகளை மக்களுக்கு ஏற்றவையாக கருத முடியாது. எனவே ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்க எதிர்வரும் பொது தேர்தலில் சிறியகட்சிகள் மற்றும் சிறுபான்மைக் கட்சிகள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் சக்திமிக்கதான சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சி ஒன்றை உருவாக்க செயற்பட வேண்டும். - என்றார். (ற)

## மஹிந்தவே பிரதமர் வேட்பாளர்

கொழும்பு, ஜூன் 20

மஹிந்த ராஜபக்ஷவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அடுத்த பிரதமர் வேட்பாளராவார். அவரைத் தவிர வேறு எவராலும் பிரதமராக முடியாது.

ஜனாதிபதி நியமித்த சுதந்திரக் கட்சிக் குழுவின் இறுதித் தீர்மானம் இதுவாகும். ஜனாதிபதியிடம் இந்தக் கோரிக்கையை நாம் முன்வைக்கவுள்ளோம் என்று அந்தக் குழுவின் உறுப்பினர் டி.பி.ஏக்கநாயக்க தெரிவித்தார். மஹிந்தவை நிராகரித்து ஜனாதிபதி மைத்திரியால் பயணிக்கவே முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மஹிந்த ஆதரவுக் குழுவின் செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் அபயராம விகாரையில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுச் சபைக் கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடியது. இதன்போது மஹிந்த ராஜபக்ஷ இல்லாது கட்சியின் அடுத்தகட்ட அரசியல் நகர்வுகளை முன்னெடுக்க முடியாது என்பதையே கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தோம்.

மஹிந்தவை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டு வருவதே கட்சியின் ஏகமனதான கோரிக்கையாகவும் இருந்தது. எனவே அடுத்த பொதுத் தேர்தலில் மஹிந்தவை பிரதமர் வேட்பாளராக களமிறக்க வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தோம்.

எம் அனைவரினதும் கோரிக் கைக்கு அமைய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவை ஆதரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. எதிர்வரும்பொதுத்தேர்தலில்மஹிந்தவை இணைத்துக்கொண்டு பயணிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஜனாதிபதி எடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சி தமது இயலாமையை வெளிப் படுத்தி வருகின்றது. நாடாளுமன்றத்தை எவ்வாறு கொண்டு செல்வது என்பது ஐக்கிய தேசியக் கட்சிக்கு தெரியவில்லை. இவ்வாறான நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியால் ஆட்சியை நடத்த முடியவில்லை என்றால் எம்மிடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டும்.

நாம் மக்கள் ஆட்சியை கொண்டு நடத்தத் தயாராகவே உள்ளோம். மஹிந்தவினால் சுதந்திரம் அடைந்த நாட்டை மஹிந்த தான் ஆள வேண்டும் - என்றார். (ற)

# வாக்குறுதிகளை மறந்தால் ஆட்சியைக் கவிழ்க்க நேரிடும்

## எச்சரிக்கிறார் ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார

கொழும்பு, ஜூன் 20

மக்களை ஏமாற்றி காலத்தை இழுத்தடித்து மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற மறுத்தால் மஹிந்த அரசைப் போன்று ரணில், மைத்திரி அரசையும் கவிழ்க்க நேரிடும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க எச்சரிக்கை விடுத்தார்.

மஹிந்த அரசின் உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கி மீண்டும் ஊழல்வாதிகளை பாதுகாக்க முயற்சித்தால் மைத்திரி அரசு நாட்டு மக்களின் எதிர்ப்புக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

மக்கள் ஆணைக்கு மதிப்பு வழங்கக் கோரி கொழும்பில் நேற்றுமுன்தினம் மக்கள் விடுதலை முன்னணி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தது. குறித்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

5000 ரூபா மஹாபொல திட்டம் வழங்குவதாகவும் 2 ஆயிரத்து 500 ரூபா தனியார் துறையினரின் சம்பளத்தில் அதிகரிப்புச் செய்வதாகவும் அரச சேவையாளர்களின் சம்பளத்தை உயர்த்துவதாகவும் கூறியே இவர்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். ஊடகவியலாளர்களான பிரதீப் எக்னெலிகொட,லசந்த விக்கிரமதுங்க ஆகியோர் உள்ளடங்கலாக பல ஊடகவியலாளர்களின் கொலை, கடத்தல் சம்பவங்களுடன் தொடர்பு பட்ட சந்தேக நபர்கள் மர்மமாகியுள்ளனர். இவர்கள் போன்றவர்களை கண்டுபிடித்து தண்டனை வழங்குவதற்கும் நாட்டு மக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைப்பதற்காகவுமே மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினர்.

அதேவேளை நூறு நாள் திட்டத்தின் கீழ் நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்திவிட்டதாக அரசு கூறிக்கொண்டிருக்கிறது. ஆனால் ரணில், மைத்திரி அரசு மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளுக்கு மாறாகவே செயற்பட்டு வருகின்றது.

ஆட்சியில் அமர்ந்ததன் பின்பு ரணில், மைத்திரி அரசு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்து போயுள்ளது. அத்துடன் நாட்டின் பொருளாதார பின்னடைவுக்கும் வித்திட்டுள்ளது. அரசில் உள்ள பொருளாதார நிபுணர்களைக் கொண்டு இவற்றை சீர்திருத்துவதற்காக ஆட்சியமைத்த மைத்திரி, ரணில் அரசு, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு மாறாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அரசில் இருந்த போது மக்கள் பணத்தை தவறான முறையில் பயன்படுத்தியமையால் மக்களால் வெறுக்கப் பட்டவர்களுக்கு இராஜாங்க அமைச்சு, பிரதி அமைச்சுகளை வழங்கி அமைச்சரவையை நிரப்பிக் கொண்டிருக்கிறது. - என்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** மனதில் தைரியக் குறைவும், செயலில் தாமதமும் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். நண்பர்களால் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். உடல் நலனுக்கு ஒவ்வாத உணவுகளைத் தவிர்க்கவும்.

**இடபம்:** இனிய அணுகுமுறையால் வெற்றி காண்பீர்கள். புதியவர்களின் அறிமுகத்தால் நன்மை கிடைக்கும். தொழில் வளர்ச்சியால், புதிய சாதனை படைப்பீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும்.

**மிதுனம்:** திடீர் செலவால் சேமிப்புக் கரையும். தொழில், வியாபாரத்தில் விழிப்புடன் செயல்படுவது நல்லது. மனைவியின் பேச்சுக்கு மதிப்பளிப்பீர்கள். உடல்நலனில் கவனம் செலுத்துவது அவசியம்.

**கடகம்:** செயலில் புத்திசாலித்தனம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் அபார வளர்ச்சி உண்டாகும். நண்பர்களின் தேவை அறிந்து உதவுவீர்கள். குடும்பத்தில் மங்கள நிகழ்ச்சி நடந்தேறும்.

**சிங்கம்:** சுய தேவையைப் பூர்த்தி செய்ய மனம் விரும்பும். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். ஆடம்பரச் செலவு செய்யும் சூழ்நிலை உருவாகலாம். வாகனப் பயணத்தில் மித வேகத்தை கடைப்பிடிக்கவும்

**கன்னி:** எதிலும் கலையுணர்வை வெளிப்படுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் ஆதரவு கண்டு மகிழ்வீர்கள். பிள்ளைகள் வழியில் சுபச்செலவு உண்டாகும்.

**துலாம்:** பொதுநல நோக்குடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் முதலீட்டை அதிகரித்து இலாபம் காண்பீர்கள். உறவினர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். வெகுநாளாக வாங்க நினைத்த பொருளை வாங்குவீர்கள்.

**விருச்சிகம்:** உங்களை, சிலர் தமக்குச் சாதகமாக பயன்படுத்த நினைப்பர். அவர்களுக்குத் துணை போக வேண்டாம். தொழில், உற்பத்தியில் விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்கள் சில சலுகைகளை எதிர்பார்க்கலாம்.

**தனுசு:** சிலர் மீது கொண்ட அதிருப்தி தேவையற்றது எனக்கருதி தவறை உணர்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் கிடைக்கும். வெகுநாள் வாங்க நினைத்த பொருளை வாங்குவீர்கள். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும்.

**மகரம்:** வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு உருவாகும். தொழில், வியாபாரத்தில் தடை விலகி வருமானம் உயரும். உறவினர் வருகையால் சந்தோஷம் அதிகரிக்கும். மனைவியின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** கடமையில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். வீட்டு உபயோகப் பொருள்களை வாங்குவீர்கள்

**மீனம்:** எதிலும் விடாமுயற்சி தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். வாகனப் பயணத்தில் கவனம் தேவை. பிள்ளைகளின் செயல்பாடு கண்டு மகிழ்வீர்கள்.



## அருக்காணியின் ஆசை என்ன ?

'சன்' தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் வம்சம் தொடரை நிறுத்தச் சொல்லி நூற்றுக்கணக்கான கண்டனக் குரல்கள் எழுந்த போதிலும், அந்தத் தொடரில் நடிக்கும் சில கதாபாத்திரங்களை எவராலும் மறக்க முடியாது.

ரம்யா கிருஷ்ணனை விட வெகுளித்தனமாய் நடித்து வில்லத்தனம் செய்யும் ரமாமணி, மாமா, மாமா என்று சுற்றி வரும் அருக்காணி, மச்சான் மச்சான் என்று உருகும் பூமிகா, குட்டிப்பெண் சங்கரி என சில கதாபாத்திரங்கள் வம்சம் தொடருக்கு சுவாரஸ்யத்தை அதிகரிக்கின்றன.

அருக்காணிக்கு இல்லத்தரசிகளிடையே தனி வரவேற்பு இருக்கத்தான் செய்கிறது. அருக்காணி சின்னத்திரையில் நடிப்பது இதுதான் முதல் முறை. சினிமாவில் இரண்டு படங்களில் நடனக் நடித்துள்ளார். நூற்றுக்கும் மேற்பட்ட படங்களில் குழுவில் நடனமாடியுள்ளார்.

அருக்காணியின் உண்மையான பெயர் சிந்துக்கிருஷ்ணன். கணவர் ஹரி கிருஷ்ணனுடன் இணைந்து நடனப் பள்ளி நடத்துகிறார். பிரபல நடன இயக்குநர்களிடம், காயத்ரி ரகுராம், ஸ்ரீதரன், சுஜாதா, லாரன்ஸ் என பலரிடமும் உதவியாளராகப் பணிபுரிந்துள்ளார்.

வத்திக்குச்சி படத்தில் அஞ்சலிக்கு தோழி, ஆலமரம் படத்தில் பொலிஸ் என தொடர்ந்து சினிமாவிலும் நடித்து வரும் அருக்காணிக்கு நல்ல நகைச்சுவை நடிகையாக சினிமாவில் நிலைக்கவேண்டும் என்பதுதான் ஆசையாம்.

## இந்தக் கதிரை எப்படி ?



நீண்ட நேரம் அமர்ந்திருப்பது, புகைப் பிடிப்பதைப் போன்று உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் ஒன்றென விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

இவ்வாறு அமர்ந்திருப்பது நீரிழிவு மற்றும் இருதய நோய் ஏற்படும் அபாயத்தை இரு மடங்கு அதிகரிப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். அதேசமயம் நீண்ட நேரம் நிற்பது அசௌகரியத்தை ஏற்படுத்தும் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இந்த நிலையில், அமெரிக்காவைச் சேர்ந்த மென் பொருள் அபிவிருத்தி நிறுவனமான வேன் ஜிகர், 'லீன்' கதிரை என அழைக்கப்படும் ஓய்வாக சரிந்து வசதியாக நிற்பதற்கு உதவும் கதிரையொன்றை வடிவமைத்துள்ளது.

இந்தக் கதிரையின் விலை 255 அமெரிக்க டொலராகும்.

## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

**மனைவி:** நம்ம பொண்ணு யாரையோ காதலிக்கிறதா சந்தேகப்படுறீங்களா. ஏன்?
கணவன் : சமீப காலமா என்கிட்டே செலவுக்குப் பணம் வாங்குறதை நிறுத்திட்டாளே!

கணவனும் மனைவியும் கடைத்தெருவில் நடக்கும் பொழுது மனைவி சற்றுத் தொலைவில் இருந்த விளம்பர பலகையைக் கண்டு வியந்தாள்....
பனாராஸ் சாரி – 10 ரூபா
நைலோன் சாரி – 8 ரூபா
கொட்டன் சாரி – 5 ரூபா

**மனைவி:** 500 ரூபாய் பணம் கொடுங்கள்... நான் 50 சாரி வாங்கணும்
**கணவன்:** அது இஸ்திரி (லோன்றி) போடும் கடையடி.



## இரண்டாம் பாகத்தில் தமிழ் சினிமா

பேய்களிடம் இருந்து தப்பித்து பாகம் – 2 மோகத்தில் தற்போது மாட்டிக் கொண்டுள்ளது தமிழ் சினிமா. ஒரு படம் வெற்றி பெற்றால் அந்தப் படத்தின் அடுத்த பாகங்களை எடுக்கும் பழக்கம் ஹொலிவுட்காரர்களிடம் அதிகம் உண்டு. இந்திய சினிமாவைப் பொறுத்தவரை ஹிந்தி சினிமாத்துறையில் இது போன்ற முயற்சிகள் சற்று அதிகம் உண்டு, ஆனால் தற்போது தமிழ் சினிமாவில் பாகம் 2 படங்களை எடுக்கும் வேகத்தைப் பார்த்தால் தமிழில் வெற்றி பெற்ற அனைத்துப் படங்களின் இரண்டாம் பாகத்தையும் எடுத்துவிட்டுத் தான் ஓய்வார்கள் போல் இருக்கிறது.

அத்திபூத்தாப் போன்று அவ்வப்போது ஒன்றிரண்டு படங்கள் இரண்டாம் பாகமாக எடுக்கப்பட்டு வந்த நிலையில், ஒட்டுமொத்த கோடம்பாக்கத்தின் கவனமுமே, வெற்றி பெற்ற படங்களின் இரண்டாம் பாகத்தை எடுக்கும் முயற்சியில் தற்போது திரும்பியுள்ளது.

நான் அவன் இல்லை, சிங்கம், பில்லா, அமைதிப்படை, காஞ்சனா போன்ற படங்கள் இதுவரை தமிழ்ச் சினிமாவில் இரண்டாம் பாகங்களாக எடுக்கப்பட்டுள்ளன.

விஸ்வரூபம், வேலை இல்லாப் பட்டதாரி, சண்டடைக்கோழி, கோ, என் ராசாவின் மனசிலே, ஜித்தன், மணல் கயிறு, [illegible] எந்திரன், மங்காத்தா, பருத்திவீரன், இந்தியன் போன்ற படங்களின் இரண்டாம் பாகங்கள் தற்போது வேகமாகத் தயாராகிக் கொண்டிருக்கின்றன கோடம்பாக்கத்தில்.

பேய்களின் பிடியில் இருந்து இப்பொழுது தான் தமிழ் சினிமா மீண்டிருக்கிறது என்று நினைப்பவர்கள் அந்த நினைப்பை அழித்து விடுங்கள். ஏனெனில், இரண்டாம் பாகத்திலும் பேய்களின் நடமாட்டம் சற்று அதிகமாகவே உள்ளது. யாமிருக்க பயமே, அரண்மனை மற்றும் டார்லிங் போன்ற படங்களின் மூலம் மீண்டும் தமிழ் சினிமாவை ஆட்டிப் படைக்க வருகின்றன பேய்கள்.

புதிய படங்களுக்குப் போட்டியாக சிறு வயதில் நாம் தூர்தர்சனில் பார்த்து ரசித்த அமரன், என் ராசாவின் மனசிலே மற்றும் மணல் கயிறு போன்ற படங்களும் இரண்டாம் பாகமாக எடுக்கப் படவிருக்கின்றன.

ஐ படத்தில் விக்ரம் சொல்வாரே அதுக்கும் மேல என்று அதே போல தமிழ் சினிமாவில் வெற்றி பெற்ற படங்களின் இரண்டாம் பாகங்களைத் தொடர்ந்து படங்களின் மூன்றாம் [illegible]ர்கள். காஞ்சனா 3 [illegible] நடிப்பில் சிங்கம் 3 படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்கப்படவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரச் சீர்கேடு காரணமாக மூன்று உணவகங்களுக்கு 'சீல்'

## மன்னார் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய

மன்னார், ஜூன் 20
மன்னார் பஸார் பகுதியில் உள்ள பிரபல மூன்று உணவகங்களை மூடுமாறு மன்னார் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.
மன்னார் பஸார் பகுதியில் உள்ள நான்கு உணவகங்களில் சுகாதார சீர்கேடுகளுடன் உணவு விற்பனை இடம்பெறுவதாக மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் மன்னார் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.
இந்நிலையில் குறித்த உணவு விற்பனை நிலையங்களில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்ய மன்னார் நீதிமன்றம் ஏற்கனவே கால அவகாசம் வழங்கி இருந்தது. இந்நிலையங்களில் குறித்த விற்பனை நிலையங்கள் நேற்று மீண்டும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அத்துடன், மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
அதன்போது குறித்த 4 உணவகங்களில் ஒரு உணவகம் மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய குறைபாடுகளை நிவர்த்தி செய்திருந்ததுடன், குறித்த உணவகத்தின் உரிமையாளர் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலையாகி இருந்தார்.
அதேவேளை ஏனைய 3 உணவக உரிமையாளர்களில் இருவர் நீதிமன்றில் முன்னிலையான போதிலும், நீதிமன்ற உத்தரவுக்கு மதிப்பளிக்கவில்லை. மற்றுமொரு உரிமையாளர் தனது உணவகத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யாத நிலையில் தனது உணவகத்தில் கடமையாற்றுகின்ற பணியாளரை நீதிமன்றத்தில் முற்படுத்தியிருந்தார்.
அதன்போது நீதிமன்ற உத்தரவை மீறிய மூன்று வர்த்தக நிலையங்களையும் மூடுமாறு மன்னார் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார். அத்துடன், நீதிமன்றத்தில் முன்னிலையான 2 உணவக உரி மையளர்களையும் தலா ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதிவான் உத்தரவிட்டதுடன், நீதிமன்றத்துக்கு சமுகமளிக்காத உரிமையாளரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
அதேவேளை மன்னார் பஸார் பகுதியில் உள்ள சதொச விற்பனை நிலையத்தில் பொருள்கள் சுகாதாரமற்ற முறையில் விற்பனை செய்யப்படுவதாக மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு மக்கள் முறைப்பாடு செய்திருந்தனர். அதன்படி சதொச விற்பனை நிலையத்தை சோதனையிட்ட அதிகாரிகள், அங்கிருந்து ஒரு தொகுதி மனித பாவனைக்கு உதவாத உணவு பொருள்களைக் கைப்பற்றியுள்ளனர். (ற)

## பரிசளிப்பு விழா


வலி.வடக்கு, ஜூன் 20
ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலய மாணவர்களின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி கிரிதரன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண இந்திய துணைத் தூதுவர் எ.நடராஜனும், சிறப்பு விருந்தினராக முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாண சபையின் பிரதி செயலாளர்சி.கிருஷ்ணானந்தனும் கலந்து கொள்ளவுள்ளனர். ஆசியுரையை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் நா.சிவ சங்கரசர்மா வழங்கவுள்ளார். (ற-86)

## விசேட பூசையும் கலைநிகழ்வுகளும்

யாழ்ப்பாணம்,ஜூன் 20
டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி உபாசகியின் அருள் ஒளி தர்சன மாலையும்,ஆனி மாத விசேட பூசையும் எதிர்வரும் 21 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில்நடைபெறவுள்ளது. இதன் போது கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஐ)

# சட்டவிரோத வலை பயன்படுத்திய 8 மீனவர்கள் கற்பிட்டியில் கைது

அம்பாறை, ஜூன் 20
புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டிப் பிரதேசத்தில் சட்ட விரோத வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 8 மீனவர்களையும் அவர்கள் பயன்படுத்திய வலைகளையும் கைப்பற்றியுள்ளதாக புத்தளம் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.
கடந்த புதன்கிழமை இரவு உச்சி முனை ஆழ் கடலில் தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 8 மீனவர்களை கைது செய்துள்ளதுடன் அவர்கள் பயன்படுத்திய தங்கூசி வலைகளையும் கற்பிட்டி கடற்படையினர் கைப்பற்றி கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.
அத்துடன் 56 சட்டவிரோத கூடு வலைகள் கற்பிட்டி சிறுகடல் பிரதேசத்தில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளன. கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் புத்தளம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்கசர் அலுவலக சுற்றி வளைப்பு அதிகாரிகளும் இணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.



இதன்போது எட்டு மில்லியன் ரூபாய் பெறுமதியான சட்டவிரோத வலைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அத்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட 8 மீனவர்களையும் எதிர் வரும் 22 ஆம் தகதி கற்பிட்டி சுற்றுலா நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ற)

## தேசிய ஐக்கிய முன்னணியின் தேசிய அமைப்பாளராக நௌசாத்

அம்பாறை, ஜூன் 20
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளர் ஏ.எம். நௌசாத் தேசிய ஐக்கிய முன்னணியில் இணைந்து அக்கட்சி யின் தேசிய அமைப்பாளராகவும் நியமனம் பெற்றுள்ளார்.
இவர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினராகவும் சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமாக பதவி வகித்துள்ளார். கொழும்பில் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும், மத்திய மாகாண சபை உறுப்பினருமான அசாத் சாலியின் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் நௌசத் தமது கட்சியில் இணைந்துள்ளதாக அசாத் சாலி தெரிவித்தார். (ற)

## வெங்காய உற்பத்தியில் ஆர்வம்

அளவெட்டி, ஜூன் 20
சந்தையில் வெங்காயம் கிலோ 100 – 130 வரை விற்பனை செய்யப்படுவதால் வெங்காயத்துக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. அதையடுத்து அளவெட்டி, மல்லாகம், அம்பனை, தெல்லிப்பழை, கந்தரோடை, பன்னாலைப் பகுதிகளில் விவசாயிகள் அதிகளவு வெங்காயச் செய்கையில் ஈடுபட்டு வருவதையும் தறைகளை நடுகைக் காக தயார் படுத்தி வருவதையும் காணக்கூடியதாக உள்ளது. (ற-36)



## விளையாட்டுப் போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 20
சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்தும் விளையாட்டுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளன.
சமாச தலைவர் எஸ்.இலகுநாதன் தலைமையில் நடைபெறும் இந்த விளையாட்டுப் போட்டிகள் இந்தமுறை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும். போட்டிகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4மணி வரை இடம்பெறும்.
இந்த விளையாட்டுப் போட்டியை மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேஷ் ஆரம்பித்து வைப்பார்.
இந்த விளையாட்டுப் போட்டியில் முப்பதுக்கும் மேற்பட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்கள் கலந்து கொள்வார்கள்.
அஞ்சல் ஓட்டம், வேக நடை, பலுன்ஊதி உடைத்தல், சமநிலை ஓட்டம், மென்பந் தாட்டம், கரப்பந்தாட்டம், கயிறுஇழுத்தல், தலையணைச்சண்டை போன்ற போட்டிகள் இடம் பெறவுள்ளன. (ற-17)


**வாடகைக்கு**
வெள்ளவத்தையில் அறைகள் நாள் வாடகைக்கு.
600/=,1200/=, 2500/=, A/C, TV வசதியுடன் 3100/=
(Attached Bathroom). இராமகிருஷ்ணா பெற்றோல் செட் அருகில்.
தொடர்பு: Hotel Villa, T.P 072 255 2222

**கடை வாடகைக்கு**
யாழ்ப்பாணம், கஸ்தூரியர் வீதியில் முதலாம் மாடிக்கடை சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
தொடர்பு - 077 756 3981
(C16322) (3,7,11)

**கோழிகள் விற்பனைக்கு**
புறொயிலர், கல்பேட், பேரன்ஸ் ஓடருக்குப் பெற்றுக் கொள்ளலாம். புறொயிலர், கல்பேட் கொள் வனவும் செய்யப்படும்.
தொடர்பு - 077 618 0675
(61212) (3,7,11)

**மணமகள் தேவை**
யாழ். இந்து, மலேசியா வாசியான மணமாகாத பொறியியலாளராகக் கடமையாற்றும் 56 வயதுடைய மண மகனுக்கு 45 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை.
தொடர்பு:
pnmal1@yahoo.co.uk
T.P: 006 012 2822 117
076 591 2520 (தற்காலிகம்)

**மேசன்மார் தேவை**
சங்கென் ஸ்தாபனத்தின் கைதடி வேலைத்தளத்திற்கு திறமை மிகுந்த மேசன்மார்/ Tilers தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். ரூபா2000 வரை. தங்குமிட வசதி உண்டு.(கொம்பனி நேரடி சம்பளம்)
விவரங்களுக்கு:
071 534 9942,071 238 7076

**மணமகள்கள் தேவை**
* 1960இல் பிறந்த 4 இல் செவ்வாய் 22 பாவமுடைய சொந்த நிறுவனம் வைத்திருக்கும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது.
* 1983இல் பிறந்த 2 இல் செவ்வாய் 23½ பாவமுடைய R.C வேதமுடைய மிருக வைத்தியருக்கு பட்டதாரி மணமகள் R.C வேதத்தில் தேவை.
* 1983இல் பிறந்த 4 இல் சூரியனும் செவ்வாயும் 34 பாவமுடைய M.Sc இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 1985இல் பிறந்த 2 இல் செவ்வாய் 35 பாவமுடைய (BA Dip in Teacher) மணமகனுக்கு ஆசிரியை மணமகள் தேவை.
* 1984இல் பிறந்த 2 இல் செவ்வாய் 56¾ பாவமுடைய Bsc Nursing மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 1971 இல் பிறந்த 7இல் செவ்வாய் 42¾ பாவமுடைய BA ஆசிரியர் மணமகனுக்கு ஆசிரியை மணமகள் தேவை.
* 1978இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 31¼ பாவமுடைய பட்டதாரி ஆசிரியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 1976இல் பிறந்த 7 இல் செவ்வாய் 18½ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது.
* 1981இல் பிறந்த 12இல் சூரியனும் செவ்வாயும் 41 பாடுமுடைய BBA வங்கியில் பணிபுரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 1982இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 21 பாவமுடைய டாக்டர் மணமகனுக்கு டாக்டர் மணமகள் தேவை.
தொடர்பு : கமலக்கண்ணன் திருமணசேவை
இல 62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச்சோலையடி,
முடமாவடி.
(61208) (3,7,11) T.P. 077 607 0862

**Majestic Cineplex Jaffna**
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்






பிளட்டினம் 10.30 / 2.30 / 6.30






சில்வர் 10.15 / 2.15 / 6.15






ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30
விசாரணை 021-2227712
CeylonTheatres www.ceylontheatres.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் பரமேஸ்வரன்

(இலங்கை மின்சாரசபை ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், லயன்ஸ் கிளப் முன்னாள் தலைவர்)



பொய்ட்டி புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் பரமேஸ்வரன் 14.06.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவாநந்தியின் அன்புக் கணவரும் ஸ்ரீகுமரன் (அமெரிக்கா), ஸ்ரீஸ்காந்தன்(அமெரிக்கா), Dr.கல்யாணி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் குமுதினி(அமெரிக்கா), நந்தினி (அமெரிக்கா), லலித்குமார்(அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும் அஸ்வின், அபினாஸ், சங்கரி, அர்ஜன், ஐஸ்வாக்கு ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன், விக்கினேஸ்வரன் மற்றும் இந்திராணி - சற்குண நந்தா(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலோ, வதனிபொன்னம்பலம், கமலா மகேஸ்வரன்(கனடா), ராணி விக்கினேஸ்வரன், காலஞ்சென்ற சற்குணானந்தா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.06.2015 புதன்கிழமை கொழும்பு பொறளையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பொறளை கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.

(61084) (3.7.9)



மண்ணில் 13 . 11 . 1943

விண்ணில் 18 . 06 . 2015

## திருமதி மேரி மக்டலின் ஜோசவ்
### (பொலிஸ் அக்கா)

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, வளன்புரத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி மேரி மக்டலின் ஜோசவ் 18.06.2015 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வரப்பிரகாசம்- செபஸ்ரியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. திருமதி சில்வெஸ்டர் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சில்வெஸ்டர் ஜோசவ்வின் ஆருயிர் மனைவியும், சுரேஜினி, வேஜினி, ஜெகான், உதயகுமார் (றொகான்) ஆகி யோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற டினேஷ்குமார், சனத், வியானினி, றொகாந்தினி ஆகியோரின் அன்பு மாமியும், தனுஜா, ஜனுஷாந், மைக்கல் ஜோ ஆன் விதுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், குணமணி அருட்பணி பிரான்சிஸ் டானியல் (அ.ம.தி), அருட்சகோதரி சிப்பிரியன் (தி.கு.க), எட்மன், யோகமணி, ஜெயமணி,வின்சன் லோகேந்திரன், நவமணி, ஜோண்சன், மாசில்லா, அனற்ரன் ராஜீ ஆகியோரின் அருமைச் சகோதரியும், அருட்சகோதரி லீயோ (தி.கு.க.)வின் பெறாமகளும், காலஞ்சென்ற திருமதி செல்வரட்ணம், திருமதி சூசைப்பிள்ளை, பத்மராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.06.2015) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் வளன்புரம் புனித சூசையப்பர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
பிள்ளைகள்
077 228 8224, 077 436 4832
077 114 7763

வளன்புரம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(61205) (46.7.9)

# அனுமதியின்றி மணல் ஏற்றிய நபருக்கு அபராதம்

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய வாகனச் சாரதியொருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 50ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணையின் போது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இதேவேளை மதுபோதையில் வாகனம் செலுத்திய வாகனச் சாரதிகள் மூவருக்குதலா 7ஆயிரத்து 500ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ற-9)

# பரிசளிப்பு விழா

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் கலந்து கொள்வார்.(ஐ)

# தொழிலாளர் விடுதிக் கட்டட நிர்மாணம் முடிவுறும் நிலையில்

தென்மராட்சி, ஜூன் 20

சாவகச்சேரி நகர சபையால் 40 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் தொழிலாளர் விடுதிக் கட்டட நிர்மாணப் பணிகள் பூர்த்தியடையும் நிலையை எட்டியுள்ளன. இந்த வீடுகள் சபையின் சேவை மூப்பு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ள 5 தொழிலாளர்களுக்கு அடுத்த மாத நடுப் பகுதியில் கையளிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. விரைவில் அடுத்த கட்டமாக மேலும் 5 வீடுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது

1960ஆம் ஆண்டு காலப்பகுதியில் நகரசபையில் கடமையாற்றிய 18 தொழிலாளர்களுக்கென அமைக்கப்பட்ட ஒன்பது கட்டடங்கள் 2000 ஆம் இடம்பெற்ற வன்செயல்களின் போது முற்றாக அழிவடைந்தன. தற்போதைய சபையின் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளையின் தொடர்முயற்சியின் பயனாக சபை நிதியிலிருந்து 40 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு 5 தனித்தனி வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் குருந்தம் பிரிவைப் பார்வையிட்டனர்

தென்மராட்சி, ஜூன் 20

பூநகரிப் பிரதேச சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் நேற்று முன் தினம் சாவகச்சேரி மருத்துவமனையில் இயங்கும் குடி வெறுப்பு சிகிச்சைப் பிரிவைப் (குருந்தம்) பார்வையிட அழைத்து வரப்பட்டிருந்தனர்.

யாழ்.சாந்தீக நிறுவனத்தின் வேண்டுகோளின் பிரகாரம் பூநகரி பிரதேச செயலகத்தால் மருத்துவ மனைக்கு அழைத்து வரப்பட்ட சமூக மட்டப் பிரதிநிதிகள் மருத்துவமனை குடி வெறுப்புப் பிரிவில் தங்கிச் சிகிச்சை பெறுவோருடன் கலந்துரையாடினர்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் மதுவுக்கு அடிமையாகி மீள முடியாமல் தவிப் போருக்கு விடுதியில் வழங்கப்படும் சிகிச்சை முறைகள் பற்றி விளக்கிக் கூறிய விடுதி உளவள ஆலோ சனை அதிகாரிகள் குடி நோய்க்கு ஆளாகி யுள்ளோருக்கு குருந்தத்தில் வழங்கப்படும் சிகிச்சை முறைகள் பற்றி எடுத்துக் கூறு மாறு அந்தப் பிரதிநிதிகளிடம் தெரிவித் திருந்தனர். (ற-9)

# மரண அறிவித்தல்

## கதிரவேலு திருநாவுக்கரசு



கொக்குவில் மேற்கு, வராகிஅம்மன் கோயில டியைப் பிறப்பிடமாகவும், வசிப் பிடமாகவும் கொண்ட கதிரவேலு திருநாவுக்கரசு 17.06.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.06.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வராகி அம்மன் கோயிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(61203) (45.3.7)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னம்மா ஏரம்பு



தோற்றம் 1927.06.24 மறைவு 2015.06.18

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா ஏரம்பு 18.06.2015 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகர்ஏரம்புவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மாதவர் - பொன்னு தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகர் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர், வள்ளியம்மை மற்றும் கோவிந்தசாமி, இராசம்மா, இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, தெய்வானை, ஆனந்த வடிவேலு, காலஞ்சென்ற சடாச்சராதேவி மற்றும் சாரதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவஞானம், குகதாசன் காலஞ்சென்ற மல்லிகாதேவி மற்றும் தேவராசா, காலஞ்சென்ற செல்வராசா மற்றும் சந்திராதேவி, சிவானந்தன் ஆகியோரின் அன்புத்தாயாரும் மகேஸ்வரி, அன்னப்பிள்ளை, காலஞ்சென்ற நாகராசா மற்றும் விஜயலட்சுமி, மகாலிங்கம், மாலதி ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்சினி - பரமேஸ்வரன், முருகதாஸ் - சர்மினி, புருஷோத்தமன் - அஜந்தா, கணராஜன், கம்சினி - சுசாந்தகுமார், விஜிந்தன் - தவமலர், கோபிரமணன் - நகுலேஸ்வரி, ரதிமீனா - சிவரூபன், கண்ணதாசன், வினோதினி, அருள்குமார், சஞ்சீவன், சந்துசன், சபிசன், விஜி, றஜீ, தர்சன், தனுசன், தமிழினி ஆகியோரின் அன்புபேர்த்தியும் அபினா, அபிஷாந், லக்ஷிகா, துஜானி, அனுசன், மதுசன், யதுஷிகா,தக்சிதன், அபினாஷ், ஆகாஷ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.06.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பொன்னாலை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொன்னாலை மேற்கு, சுழிபுரம்.
077 784 7136, 077 563 3177, 077 949 2188

(61215) (3.6.9)

தகவல்:
குடும்பத்தினர்.

# விபத்தில் ஒருவர் படுகாயம்

வலி.வடக்கு, ஜூன் 20

சைக்கிளில் பயணித்தவரை பின்புறமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் தலையின் பின்புறம் தாக்குண்ட அவர் படுகாயமுற்று யாழ்ப் பாணம் போதனா வைத்திய சாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை புன்னாலைக் கட்டுவன் வடக்கு சந்திக்கு அண்மையாக வுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகாமையில் இந்த விபத்து இடம்பெற்றது.

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த சுந்தரம்பிள்ளை இராஜகோபால் என்பவரே படுகாயமடைந்தவராவார்.

சுன்னாகம் பொலிஸார் சம்பவ இடத்துக்குவந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் வாகனங்களையும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றுள்ளார்கள். (ற-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொல்லங்கிராய் மயானத்துக்கு எரி கொட்டகை

தென்மராட்சி, ஜூன் 20
சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் இந்து மயானத்தில் 6 லட்சம் ரூபாசெலவில் எரிகொட்டகை அமைக்கப்படவுள்ளது. இதற்கான அனுமதி நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நகர சபைக் கூட்டத்தில் வழங்கப் பட்டது.
சபை உறுப்பினர் க.மயில்வாகனத்தின் வேண்டுகோளுக்கு இணங்க ஒரே நேரத்தில் இரு சடலங்களை தகனஞ்செய்யக்கூடிய வசதிகளுடன் எரிகொட்டகை அமைக்க செய்யப்பட்ட மதிப்பீட்டை சபை ஏற்றுக்கொண்டதாக தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (ற-9)

## திணைக்களங்களில் ஆடிப்பிறப்புக்கு கூழ்

தென்மராட்சி, ஜூன் 20
வடமாகாண கல்வி பண்பாட்டலு வல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சால் கடந்த வருடம் போன்று இந்த வருடமும் ஆடிப் பிறப்புத் தினத்தில் கூழ் காய்ச்சி அருந்த வேண்டுமென சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவிக் கப்பட்டுள் ளது.
தமிழர் தம் மரபுகளைப் பேணும் வகையில் ஆடிப்பிறப்பு தினத்தில் சகல பிரதேசங்களிலும் பாடசாலைகள் திணைக்கள அலுவலகங்கள் ஆகியவற்றில் ஆடிக்கூழ் காய்ச்சி கொண்டாடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)



## திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூன் 20
வடக்கு, கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்கத்தின் யாழ். மாவட்ட கிளைச் சங்க செயலகத் திறப்பு விழா உள்ள கட்டடத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கோப்பாய் பிரதேச வைத்தியசாலை வீதியில் நடைபெறவுள்ளது. யாழ். மாவட்ட தலைவர் பா.சுரேஸ்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் விருந்தினர்களாக சங்கத்தின் தலைவர் க.கம்சநாதன், செயலாளர் இ.மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொள்வார். (ஐ)

## புலமைப்பரிசில் மாணவருக்கு கருத்தரங்கு

தென்மராட்சி, ஜூன் 20
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடி பயிற்சிக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் சிவன் கோவிலடியில் உள்ள தென்மராட்சி கலைமன்றக் கலாசார மண்டபத்தில் இடம்பெறும்.
இந்தக் கருத்தரங்கில் கொழும்பு மற்றும் வவுனியா பிரதேசங்களில் பிரபல்யமிக்க புலமைப்பரிசில் ஆசிரியர்கள் வளவாளர்களாக கலந்து கொள்ள வுள்ளனர். (ற-9)

## வருடாந்தத் திருவிழா

யாழ்ப்பாணம்,ஜூன் 20
நீர்வேலி ஸ்ரீ செல்லக் கதிர்காம சுவாமி ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறும்.
எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன் 20
யாழ்.அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா இன்று சனிக் கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறும்.
எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ)

## சாவகச்சேரி நகரசபைக்கு இணையத்தளம்

தென்மராட்சி, ஜூன் 20
சாவகச்சேரி நகரசபைக்கு ஒரு இணையத்தள வசதி மிக விரைவில் ஏற்படுத்தப்பட வுள்ளது. இது தொடர்பான விவரங்கள் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விரைவில் அதனை ஆரம்பிப்பதென தீர்மானிக்கப்பட்டது.
நகரசபையால் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்படுகின்ற செயற்றிட்டங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான விவரங்களுடன் இணையத்தளம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (ற-9)

## க.பொ.த. சாதாரண தர மாணவருக்கு ஊக்குவிப்பு வழங்கல்

கந்தையா கனகம்மா நினைவு நிதியத்தின் ஏற்பாட்டில் கடந்த வருடம் க.பொ.த சாதாரண தரப் பரீட் சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான ஊக்குவிப்புத் தொகை வழங்கல் நிகழ்வு இன்று சனிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு தச்சன் தோப்பு பிரதேச சபை வளாகத்தில் உள்ள கந்தையா கனகம்மா நினைவாலயத்தில் நடைபெற வுள்ளது.
திருமதி மங்கையர்க்கரசி துரைராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக சம்பத் வங்கியின் கிழக்கு மாகாண உதவிப் பிராந்திய முகாமையாளர் இராசநாயகம் குமணன் கலந்து கொள்வார். (ஐ)

## நாமகள் முன்பள்ளி விளையாட்டு விழா

தென்மராட்சி, ஜூன் 20
சாவகச்சேரி சங்கத்தானை நாமகள் முன் பள்ளியின் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பி.ப.2.00மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.
நிலையத் தலைவர் திருமதி நா.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) வே.பாலசுப்பிரமணியமும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் ந.அருந்தவபாலனும் கலந்து கொள்வர். (ற-9)

## சட்டவிரோத மணல்: ரூ. 50 ஆயிரம் அபராதம்

தென்மராட்சி, ஜூன் 20
அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 50ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணையின் போது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 50ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ற-9)



கோக்குவில் நந்தாவில் கற்புலத்து
மனோன்மணி அம்பாள் ஆலயம்
வருடாந்த மகோற்சவம்
21.06.2015 - 03.07.2015

| | |
|---|---|
| கொடியேற்றம் | - 21.06.2015 ஞாயிறு வசந்தமண்டப பூசை மு.ப.9.00 மணி கொடியேற்றம் மு.ப. 10.30 மணி |
| மஞ்சம் | - 23.06.2015 செவ்வாய் பிற்பகல் - 5.00 மணி |
| கைலாசவாகனம் | - 27.06.2015 சனி பிற்பகல் - 5.00 மணி |
| சப்பரம் | - 29.06.2015 திங்கள் பிற்பகல் - 5.00 மணி |
| இரதோற்சவம் | - 30.06.2015 செவ்வாய் காலை - 7.30 மணி |
| தீர்த்தோற்சவம் | - 01.07.2015 புதன் காலை - 6.30 மணி |
| பூங்காவனம் | - 02.07.2015 வியாழன் பி.ப. 5.30 மணி |

தினசரி - அபிஷேகம் காலை 8.30 மணி
வசந்த மண்டப பூசை மு.ப. 10.00 மணி
பி.ப. 5.30 மணி
வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து அம்பாள் உள், வெளி வீதிகள் உலாவருவார்.

நந்தாவில், கொக்குவில். (61083) (45.3.7) ஆலய பரிபாலன சபை.

### நானாட்டான் பிரதேச சபை

அட்டவணைப்படுத்தப்படாத பதவி வெற்றிடங்களை நிரப்புதல் - 2015
பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக 15.06.2015 ஆம் திகதி கோரப்பட்ட விளம்பரம் சார்பாக.
நானாட்டான் பிரதேச சபையில் வெற்றிடமாகக் காணப்படும் சுகாதார மேற்பார்வையாளர் பதவியானது இந்த அலுவலகத்தில் கடமையாற்றும் சிற்றூழியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதனடிப் படையில் தெரிவு செய்யப்பட வேண்டியுள்ளது. தவறுதலாக வெளிவாரி அடிப்படையில் சுகாதார மேற்பார்வையாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. எனவே சுகாதார மேற்பார்வையாளர் பதவிக்கு வெளிவாரி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா என்பதனை தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிலிப்புப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
செயலாளர்
நானாட்டான் பிரதேச சபை.
19.06.2015
(C16326) (3.6.11)

சிவமயம்
### யா/இணுவில் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்

யா/இணுவில் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் 05.07.2015 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் நடைபெற உள்ளது. பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்பு டன் அழைக்கின்றோம். புதிதாக இணைய விரும்புவோர் பாடசாலை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
(61214) (45.6.3) தலைவர், செயலாளர்.

### வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை.
1. அலுவலக உதவியாளர் - பெண்
2. உதவிக் கணக்காளர் - பெண்
3. அலுவலக சுத்திகரிப்பாளர் - பெண்
4. Technical Officer (Monday to Saturday)
5. Welder(வெல்டர்)

தொடர்புகளுக்கு:
077 344 3945
E.mail :bestbuilders277@gmail.com (61219) (3.6.9)

### வேலைவாய்ப்புடன் கூடிய AAT கற்கை நெறிக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்.

21 June 2015 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணி
தகமைகள் : G.C.E O/L 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.G.C.E A/L வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்த மாணவர்களிற்கு முதலாம் நிலை விலக்களிப்பு 2ஆம் நிலையிலிருந்து கற்கை நெறியைத் தொடரலாம்.
தொடர்புகளுக்கு : Spectra skills 19, Stanley Road (Peoples Bank 2nd floor) Jaffna. Tel : 021 222 1422 076 752 0940
(61264) (3.7.11)

### உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில் பரிபாலனசபை
பொதுக்கூட்டம் சம்பந்தமான அறிவித்தல்

மேற்படி சபையின் பொதுக்கூட்டம் விரைவில் நடைபெற இருப்பதால், அம்பாள் அடியார்கள் சார்பில் பிரேரணைகள் மற்றும் பொதுக்கூட்டத்தில் விவாதிக்க வேண்டிய, விவாதிக்க விரும்பும் விடயங்கள் ஏதும் இருப்பின் பதிவுத்தபாலில்

செயலாளர், பர்வதவர்த்தனி அம்மன் கோயில், பரிபாலன சபை, உரும்பிராய்

என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.
(61209)(9.3) செயலாளர்.

### அழைப்பு

YOUTH CREATE
திருமறைக் கலாமன்றமும் கெயார் நிறுவனமும் விழிகள் கலாமுற்றத்தின் பங்களிப்போடு நடத்தும்
“ கலைப் பொழுது ”
(இளையோர் உருவாக்க செற்றிட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற மன்னார், நானாட்டான், மாந்தை மேற்கு இளையோர் வழங்கும்)
நடனங்கள் - நாடகம் - நாட்டுக்கூத்து
காலம்: 21.06.2015 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மாலை 07.00 மணிக்கு
இடம் : கலாசார மண்டப அரங்கு, சென்.யூட் வீதி, பேசாலை.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
-திருமறைக் கலாமன்றம்-
இணைப்பங்காளர்கள்:
பிரதேச செயலகங்கள்: மன்னார், நானாட்டான், மாந்தை மேற்கு திருமறைக் கலாமன்றம், மன்னார்.
அனுசரணை
care

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நுவரெலியாவுக்கு

தென்மராட்சி, ஜூன் 20
சிறுவர் போக்கு தொடர்பாக வேள்ட்விஷன் நிறுவனத்தினரால் நுவரெலியா மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்களைப் பார்வையிட யாழ்.மாவட்ட சுகாதாரத் திணைக்கள பொது சுகாதார பரிசோதகர்கள் குடும்ப நல உத்தியோகத்தர்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

சிறுவர் போக்கில் ஆண்களின் பங்களிப்பு என்னும் செயற்றிட்டத்தின் கீழ் நுவரெலியா மாவட்டத்தில் வேள்ட்விஷன் நிறுவனத்தினரால் செயற்படுத்தப்பட்டு வரும் செயற்றிட்டங்களைப் பார்வையிடவே நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இந்த உத்தியோகத்தர்கள் அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

# ஜன்னல் கம்பி உடைத்து திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 20
வீட்டில் எவருமில்லாத நேரத்தில் யன்னல் கம்பியை உடைத்து உட்சென்ற திருடர்கள், வீட்டை சல்லடை போட்டுத் தேடி அங்கிருந்த லப்டொப், அதன் உபகரணங்கள், ரூபா 4 லட்சம் பெறுமதியான பூட்டிய நிலையில் இருந்த மோட்டார் சைக்கிள், கவரிங் நகைகள் உட்பட பெறுமதியான பொருள்களை திருடிச் சென்றுள்ளனர். கடந்த புதன்கிழமை இந்தச் சம்பவம் நடந்துள்ளது. சங்கானையில் வர்த்தக நிலையம் ஒன்றை நடத்தி வரும் ஓடக்கரை வீதி ,சங்கானையைச் சேர்ந்த காசிப்பிள்ளை பரஞ்சோதி என்பவரது வீட்டிலேயே இந்த திருட்டு நடந்துள்ளது. அக்கம்பக்கத்தில் வீடுகளும் பிரதான வீதியில் சன நடமாட்டமும் இருந்தும் பகல் நேரம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர். (ந-29)

# கஷ்டப் பிரதேச கொடுப்பனவு நிலுவை வழங்கப்படுகின்றது

## கிண்ணியா வலயக் கல்வி அலுவலகப் பிரிவில்

அம்பாறை, ஜூன் 20
கிண்ணியா வலயக் கல்வி அலுவலகப் பிரிவைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்களுக்கு 2007ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து டிசெம்பர் மாதம்வரை வழங்கப்படாமலிருந்த கஷ்டப் பிரதேச கொடுப்பனவு நிலுவை தற்போது வழங்கப்படுவதாக கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஆசிரியர்களும், ஆசிரியர் தொழிற்சங்கங்களும் மாகாணசபை உறுப்பினர் இம்ரான் மஹ்ரூபின் கவனத்துக்கு கொண்டு வந்ததை அடுத்து, இது தொடர்பான தனி நபர் பிரேரணையை கிழக்கு மாகாண சபையில் கடந்த ஒக்ரோபர் மாதம் இவர் சமர்ப்பித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட முயற்சியினால் இந்த நிலுவை வழங்கப்படுகின்றது. இந்த நிலையில், 35 பாடசாலைகளைச் சேர்ந்த 430 ஆசிரியர்கள் இந்த நிலுவையை பெறுவதுடன், இதற்கென சுமார் 79 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார். (ந)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 23.05.2015 சனிக்கிழமை
சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

திருமதி சிந்தாமணி சின்னத்துரை

தோற்றம் 23.05.1936
மறைவு 23.05.2015

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை இன்று (20.06.2015) சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் எதிர்வரும் 22.06.2015 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளன.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்றைய தினம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சண்டிலிப்பாய் வீதி,சங்கானை. குடும்பத்தினர்.


# சனசமூக நிலையத்துக்கு அடிக்கல்

அளவெட்டி, ஜூன் 20
கடந்த 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை கட்டுவன் மேற்கு நாச்சிமார்கோயிலடி அண்ணா சனசமூக நிலையம் மீண்டும் தனது நிர்வாகச் செயற்பாடுகளை ஆரம்பித்தது. கடந்த கால போர் இடர்களினால் முற்றாக அழிந்த நிலையில் காணப்பட்ட கட்டடங்களை அகற்றி அதே இடத்தில் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

அதற்கான அடிக்கல்லை வடமாகாணசபை உறுப்பினர் சோ.சுகிர்தன் நட்டார். கட்டடத்துக்கான நிதி கிராமத்துக்கு ஒரு மில்லியன் என்னும் திட்டத்தில் இந்தப் பிரதேச கிராம சேவையாளரின் பரிந்துரைக்கு அமைய வலி.வடக்கு பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டுள்ளது. (ந-36)

# பேசாலையில் நாளை கலைப்பொழுது நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 20
மன்னார், நானாட்டான், மாந்தை மேற்கு பிரதேச இளையோர் உருவாக்க செயற்றிட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற இளையோர் வழங்கும் கலைப்பொழுது நடன, நாடக, நாட்டுக்கூத்து நிகழ்வு மன்னார் சென். யூட் வீதியிலுள்ள கலாசார மண்டப அரங்கில் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும் இக் கலைப்பொழுது நிகழ்வு திருமறைக் கலாமன்றத்தினதும் கெயார் நிறுவனத்தினதும் வழிகாட்டலிலும் கலாமுற்றத்தின் பங்களிப்போடும் இடம்பெறவுள்ளது. மன்னார், நானாட்டான் பிரதேச செயலகங்கள், மாந்தை மேற்கு திருமறைக்கலாமன்றம் ஆகியவை இணைப்பாளர்களாக உள்ளன. அனைவரையும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ந-4)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வேலுப்பிள்ளை மார்க்கண்டு

திதி-சதுர்த்தி (20.06.2015)

தோற்றம் 23.11.1927
மறைவு 01.07.2014

நீங்கள் இல்லா வாழ்வின் வேதனைகள்
நிழலாக எமைத்தொடர்ந்தாலும் - உங்கள்
நினைவுகளைச் சுமந்து வாழ்வதனால்- அதில்
உமைக்கண்டு நிறைவு பெறுகின்றோம்.
ஓம் சாந்தி.......!

கலாநிதி திருமதி ஜெ.இராசநாயகம்,
குமாரவளவு, வியாபாரி மூலை, பருத்தித்துறை.
குடும்பத்தினர்.



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
வல்லிபுரம் முருகேசு

தோற்றம் 25.04.1931
மறைவு 12.06.2013

திதி : சதுர்த்தி

ஆண்டுகள் இரண்டு ஆனதுவோ
ஆனாலும் உங்கள் நினைவுகளோ
அழிந்து போகாது

105, கனகரட்ணம் வீதி,
அரியாலை.
குடும்பத்தினர்.


# ஆசிரியர்களுக்கான செயற்றிட்ட செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜூன் 20
யாழ்.கல்வி வலயத்தில் நல்லூர் கோட்டப் பாடசாலைகளில் தரம் ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான, செயற்பட்டு மகிழ்வோம் எனும் செயற்றிட்ட செயலமர்வு, இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை யாழ்.கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைத்து ஆசிரியர்களையும் பங்குபற்றுமாறு ஆரம்பப் பிரிவு விளையாட்டு செயற்றிட்ட இணைப்பாளர் சி.சிவகாந்தி அறிவித்துள்ளார். (ஐ)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
மங்களகௌரி தயாளநேசன்
[அதிபர் கொக்குவில் மேற்கு C.C.T.M]

தோற்றம் 09.04.1957
மறைவு 21.05.2015

கடந்த 21.05.2015 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி மங்களகௌரி தயாளநேசன் அவர்களின் மரணச்செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமாகவும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையம் சாத்தியோருக்கும் மற்றும் எமக்குப் பல வழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும் மற்றும் இறுதிச்சடங்கு களில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை 21.06.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.30 மணியளவில் இல.37, இராமநாதன் வீதி, சரஸ்வதி மண்டபத்தில்(ராஜா கிறீம் கவுஸ்) நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.]

15/7, ஆடியபாதம் வீதி, முதலாம் ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
குடும்பத்தினர்.



## ஈரவிழிகளுடன் 7 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 19.05.1937
விண்ணில் 20.06.2008

திருமதி பிலோமினம்மா(செல்லம்மா) லாசறஸ்

[illegible]

(45.3.7)

[illegible]
கணவர், பிள்ளைகள்,
[illegible] மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
[illegible] பூட்டப்பிள்ளைகள்.


# முல்லை. மாவட்ட தொண்டர் ஆசிரியருக்கு கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜூன் 20
முல்லைத்தீவு மாவட்ட தொண்டராசிரியர்களாக்க் கடமையாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை முல்லைத்தீவு உடையார்கட்டு மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில் இடம்பெற உள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட தொண்டராசிரியர் சங்க தலைவர் உ.சுஜிதா அறிவித்துள்ளார்.

2010ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்து இன்று வரை முல்லை மாவட்ட பாடசாலை களில் தொண்டராசிரியர்களாக தொடர் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களை இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறும், எதிர்கால திட்டங்கள் சம்பந்தமான தீர்க்கமான முடிவுகள் கூட்டத்தில் எடுக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-21)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூன் 20
மானிப்பாய் சத்திய சாயி பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் பணிப்பாளர் ஆர்.வசந்தசேனன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்துகொள்வார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணாடி பாத்திரத்திலும் நீரை வெப்பமேற்றலாம்

சாதாரண பாத்திரத்தினூடாக நீரை வெப்ப மேற்றக்கூடிய புதிய தலைமுறை இலத்திர னியல் கேத்தலை (Kettle) MIITO நிறுவனம் உருவாக்கியுள்ளது.

இலகுவாக எடுத்துச் செல்லக்கூடிய வகை யில் உருவாக்கப்பட்டுள்ள இந்த கேத்தலின் உதவியுடன் கண்ணாடி பாத்திரத்திலும் நீரை வெப்பமேற்றக்கூடியதாக இருத்தல் விசேட அம்சமாகும்.

இதன் மூலம் 200 மில்லி லீற்றர் நீரை 60 செக்கன்களிலும், 500 மில்லி லீற்றர் நீரை 2.5 நிமிடங்களிலும் கொதிக்க வைக்க முடியும். மேலும் இதனை சார்ஜ் செய்து பயன்படுத்தக்கூடியதாக இருத்தல் இதன் விசேட அம்சமாகும்.

# "வாட்ஸ் அப்" பற்றி அறியாதவை

வாட்ஸ் அப் செயலியை நீங்கள் தினமும் பயன் படுத்தினாலும் அவைகளில் உங்களுக்குத் தெரிந் திராத சில அம்சங்களைத் தான் இங்கு தொகுத்தி ருக்கின்றோம்.

வாட்ஸ் அப் செயலியில் உங்களுக்குத் தெரிந் திராத சில அம்சங்களைப் பாருங்கள்.

**ஆர்ச்சிவ் சற் (Archive chat)**

இந்த அம்சம் குறிப்பிட்ட ஏதேனும் ஒரு சற்றை தற்காலிகமாக மூடி வைத்து அதனைப் பின்னர் பயன்படுத்த வழி செய்யும். இதை மேற்கொள்ள நீங் கள் மறைக்க விரும்பும் சற்றை அழுத்திப் பிடித்து ஆர்ச்சிவ் சற் பட்டனை க்ளிக் செய்தால் போது மானது.

**ம்யூட் க்ரூப் சாட் (Mute Group chat)**

சில சமயங்களில் க்ரூப் சற்களின் செயல் விளக் கங்கள் வெறுப்பேற்றலாம், அது போன்ற நேரங் களில் Menu button d Mute Button d Group Name d ஐ க்ளிக் செய்யலாம்.

**லாஸ்ட் சீன் (Last seen)**

நீங்கள் கடைசியாக வாட்ஸ் அப் பயன்படுத்திய நேரத்தை வாட்ஸ் அப் தானாகவே காண்பிக்கும், இதை நிறுத்த Settingsdd Account dd Privacy ddLast seen Optiond ஐ க்ளிக் செய்து Nobod என்ற பட்டனை 'க்ளிக்' செய்தால் போதுமானது.

**ஷார்ட்கட் (Shortcut)**

சாட் மெனுவை அழுத்திப் பிடித் தால் அவை ஷார்டகட்டாக ஹோம் ஸ்கிரீனில் தெரியும். ஒரு வேளை சைனோஜென் இயங்குதளத்தைப் பயன்படுத்தினால் செயலியை டிராக் செய்து தனி ஃபோல்டரில் பாஸ் வேர்டு 'செட்' செய்தும் வைத்துக் கொள்ளலாம்.

**ஆட்டோ டவுன்லோடிங் (Auto Downloading)**

வாட்ஸ் அப் மீடியா பைல்கள் தானாக டவுன்லோட் ஆவதைத் தடுக்க செட்டிங்ஸ் dd சாட் செட்டிங்ஸ் dd மீடியா ஆட்டோ டவுன்லோடுட் என்ற ஆப்ஷனை 'க்ளிக்' செய்து கொள்ளலாம்.

**குறுந்தகவல் (Message)**

நீல நிற அம்புக் குறி தெரிந்தால் உங்களது குறுந் தகவல் படிக்கப்பட்டு விட்டது என்பது அர்த்தமாகும், ஆனால் சரியான நேரத்தை அறிந்து கொள்ள குறுந் தகவலை அழுத்தி பிடித்து (i) ஐகானை க்ளிக் செய்தால் போதுமானது.

**பேக்கப் (Backup)**

வாட்ஸ்அப் சாட்களை பேக்கப் செய்ய Settings ddchat settingsdd backup conversation Option d ஐ க்ளிக் செய்தால் போதுமானது.

லாக் வாட்ஸ்அப் தகவல்களை பாதுகாப்பாக வைக்க சந்தையில் கிடைக்கும் செயலிகளைக் கொண்டு வாட்ஸ் அப் செயலியை லாக் செய்து கொள் ளலாம்.

**புகைப்படங்கள் (Photos)**

வாட்ஸ் அப் புகைப்படங்களை கலரி அல்லது கமெரா ரோலில் வைத்துக் கொள்வது ஒரு சிலருக்குப் பிடிக்காமல் இருக்கும். அவ்வாறானவர்கள் புகைப்படங்களை வாட்ஸ் அப் செயலி மூலம் மறைத்து வைத்துக் கொள்ளலாம்.

**போன் நம்பர் (Phone number)**

சிம் கார்டுகளை புதிதாக மாற்றும் போது வாட்ஸ் அப் செயலியை அன் இன்ஸ்டால் செய்து மீண்டும் இன்ஸ்டால் செய்ய வேண் டாம், மாற்றாக Settings dd Account dd Change Number Optiondல் புதிய நம்பரை என்டர் செய்து பயன்படுத்த ஆரம்பிக்கலாம்.



# அறநெறிப் பாடசாலை ஆரம்பம்



ஏழாலை மாதர் சங்கத்தினால் ஏழாலையிலுள்ள சிறார்கள் அனை வரையும் ஒன்றிணைத்து பிரதி ஞாயிறுகள் தோறும் சமயம் சார்ந்த கல்வியை சிறார்களுக்கு வழங்கும் வண்ணம் அறநெறிப் பாடசாலையொன்று அமைக்கப்பட் டுள்ளது. இதன் ஆரம்ப விழா அண்மையில் ஏழாலை மேற்கு உதய சூரியன் சனசமூக நிலையத் தில் ஏழாலை மாதர் சங்கத்தின் தலைவி திருமதி என் நாகராசா தலைமையில் இடம்பெற்றது.

சுன்னாகம் கதிரமலை தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ சர்வேஸ் வரக் குருக்களது ஆசியுரையுடன் ஆரம்பமான இந்த விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் மற் றும் சிறப்பு விருந்தினர்களாக வலி. வடக்கு பிரதேச சபைத்தலைவர் சோ.சுகிர்தன் மற்றும் உறுப்பின செ.செல்வராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-86)



இணுவில் இந்துக் கல்லூரியில் தரம் 1 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இணுவில் இந்துக் கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் அனுரணையுடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில், அந்த நிதியத்தின் பதில் தலைவர் வை.ஶ்ரீஸ்கந்தவரோதயன் கற்றல் உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்கினார். (ற)

# வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு கொத்மலை மக்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 20

மேல் கொத்மலை நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு 7 வருடங்கள் கடந்து விட்ட போதிலும், அந்தப் பகுதி மக்களுக்கு வழங்கப்பட்ட வாக் குறுதிகள் இன்னும் நிறை வேற்றப்படவில்லை என தெரி வித்து அந்தப் பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேல்கொத்மலை நீர்மின் திட்ட காரியாலயத்திற்கு முன்பாக காலை 10 மணியளவில் கூடிய ஆர்ப்பாட்டார்கள், சுமார் 2 மணி நேரம் வரை அங்கு ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த பகுதி மக்கள் சகல வசதி களுடன் வாழ்ந்து வந்த நிலையில், இந்தத்திட்டம் ஆரம்பிக்கும்போது போதிய இடவசதியுடன் வீடுகள் அமைத்துத் தருவதாக உறுதியளிக் கப்பட்டது. ஆனால் திட்டம் நிறை வடைந்த பின்னர் அமைக்கப்பட்ட வீடுகள் போதிய வசதி இன்றியும், ஒவ்வொரு வீடுகளிலும் இரண்டு அல்லது மூன்று குடும்பங்கள் வாழ வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட் டுள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதி காரிகளிடம் பலமுறை கோரிக்கை விடுத்தபோதிலும், மக்களின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட வில்லை எனவும் மக்கள் குறிப் பிட்டனர்.

அதேவேளை சம்பந்தப்பட்ட காரி யாலயத்தின் அபிவிருத்தித் திட்ட அதிகாரியை ஆர்ப்பாட்டக்காரர்கள் சந்தித்து தங்களுடைய பிரச்சினை களை முன்வைத்த போதிலும் [illegible] அதிகாரி அந்த மக்களுடைய [illegible] துகளை ஏற்றுக்கொள்ள மறுப்பு தெரிவித்துள்ளார். இருப்பினும்



ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்களு டைய கோரிக்கைகள் அடங்கிய மனுவை பல மணிநேரம் காத் திருந்து குறித்த அபிவிருத்தி திட்ட அதிகாரியிடம் கையளித்தனர்.

அதன் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றதோடு தங்களு டைய கோரிக்கைகள் நிறைவேற்ற பட விட்டால் மீண்டும் பெரிய ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கப் போவதாக தெரிவித்தனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

cmyk

# இந்தியாவுடன் பேச்சுக்குத் தயார்

## பாகிஸ்தான் அரசு அறிவிப்பு



இஸ்லாமாபாத், ஜூன் 20
கடந்த சில மாதங்களாக இந்தியா, பாகிஸ்தான் தலைவர்கள் ஒருவர் மீது ஒருவர் கடுமையான கருத்துகளைத் தெரிவித்து வந்தனர். இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்பும் தொலைபேசி மூலம் பேசியுள்ளனர்.
இது தொடர்பாக பாகிஸ்தான் வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் கலிலுல்லா கூறும்போது, நாங்கள் இந்தப் பிராந்தியத்தில் உள்ள அனைத்து அண்டை நாடுகளுடனும் நட்புறவுடன் இருக்கவே விரும்புகிறோம். இந்தியா, பாகிஸ்தான் இடையே உள்ள முக்கியமான பிரச்சினைகளுக்கு பேச்சு மூலம் தீர்வு காணப்பட வேண்டும். இருநாட்டு உறவுகளும் இயல்பான நிலைக்கு திரும்புவதற்காக எடுக்கப்படும் அனைத்து முயற்சிகளையும் வரவேற்கிறோம் – என என்றார். (ஐ)

# 113 இந்திய மீனவர்களை விடுவித்தது பாகிஸ்தான்



கராச்சி,ஜூன் 20
இஸ்லாமியர்களின் புனித றம் ழான் பண்டிகையை முன்னிட்டு பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 113 இந்திய மீனவர்களை அந்த நாட்டின் அரசு விடுதலை செய்துள்ளது. நல்லெண்ண நடவடிக்கையாக மீனவர்கள் விடுவிக்கப்பட்டதாக பாகிஸ்தான் அரசு கூறியுள்ளது.
சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட 113 மீனவர்களும் கரகோரம் எக்ஸ்பிரஸ் ரயில் மூலம் லாகூருக்கு அனுப்பப்படவுள்ளனர். அதனைத் தொடர்ந்து வாகா எல்லையில் அவர்கள் இந்திய இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தாய்லாந்திலும் பரவும் மெர்ஸ் வைரஸ்



பாங்காக், ஜூன் 20
மெர்ஸ் என்ற கொடிய வைரஸ் நோய் தென்கொரியாவை ஆட்டிப் படைத்து வருகிறது. இந்த நோயால் இதுவரை 20 பேர் உயிரிழந்துள்ளனர். ஏராளமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் இந்த நோய் தாய்லாந்துக்கும் பரவியுள்ளது. அங்குள்ள ஒருவருக்கு இந்த நோய் இருப்பதை அந்த நாட்டின் அரசு உறுதிப்படுத்தியுள்ளது.
இதுகுறித்து அந்த நாட்டின் பொதுச் சுகாதாரத்துறை அமைச்சர் தெரிவிக் கும் போது, 75 வயதான ஒருவர் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து தாய்லாந்துக்கு வந்தார். அவர் இதய நோய் குறித்த சிகிச்சை மேற்கொண்டார். ஆய்வு சோதனையில் அவருக்கு மெர்ஸ் நோய் இருப்பது உறுதிப்படுத்தப்பட் டது.
பாதிக்கப்பட்ட அந்த முதியவர் தனிமைப்படுத்தப்பட்டு அவருக்குச் சிகிச்சை அளிக்கப் படுகிறது. மேலும் அவருடன் வந்த உறவினர்கள், அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலில் வேலை செய்தவர்கள், மருத்துவமனை பணியாளர்கள் மற்றும் விமானத்தில் அவர் அருகில் அமர்ந்து பயணம் செய்தவர்கள் என 59 பேரின் உடல் நிலையும் கண்காணிக் கப்படு கிறது எனவும் தெரிவித்துள்ளார். (ஐ)

# 100 மனைவிகளுடன் வாழும் மன்னர்



கமரூன்,ஜூன் 20
ஆபிரிக்க நாட்டின் பாபூட் பிரேதேசத்தை ஆட்சி செய்து வரும் மன்னருக்கு 100 மனைவிகள் உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
ஆபிரிக்க நாட்டின் கமரூனில் ஆண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்களை செய்துகொள்வது வழக்கத்தில் உள்ள ஒன்றாகும். மேலும், ஆட்சியில் இருக்கும் மன்னர் இறந்துவிட்டால் அடுத்த மன்னராக பதவியேற்பவர் இறந்த மன்னரது மனைவிமார் அனைவரையும் தனது மனைவி மாராகப் பொறுப்பேற்க வேண்டும்.
அதன்படி கமரூனில் உள்ள பாபூட் பிரதேசத்தை ஆட்சிசெய்து வந்த மன்னர் 1968 ஆம் இறந்ததையடுத்து அவரது மகனான இரண்டாம் அபும்பி அந்த நாட்டின் மன்னராகப் பதவி யேற்றார். அதன் பின்னர் நாட் டின் பொறுப்புகளை ஏற்றுக் கொண்ட அவர், தனது தந்தையாரது 72 மனைவிமாரையும் ஏற்றுக் கொண்டதன் மூலமாக அவருக்கு தற்போது 500 குழந்தை கள் உள்ளனர். மேலும், அபும்பிக்கு ஏற்கனவே 22 மனைவிமார் இருந்துள்ளனர், தமது தந்தையின் மனைவிமாருடன் சேர்த்து அவருக்கு 100 மனைவிமார் உள்ளனர். (ஐ)

# களைகட்டப் போகும் நாய் கறித் திருவிழா





பீஜிங்,ஜூன் 20
சீனாவில் வருடந்தோறும் உற்சாகமாகக் கொண்டாடப்பட்டு வரும் நாய்க் கறித் திருவிழாவில் சுமார் 10 ஆயிரம் நாய்களை ஒரே நேரத்தில் கொன்று சமைத்து ருசித்து உண்ணும் நிகழ்ச்சி இன்னும் சில தினங்களில் ஆரம்பமாகவுள்ளது.
சீனாவின் குவாங்ஸி என்ற மாகாணத்தில் யூளின் என்ற சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் வசித்து வருகின்றனர்.
விநோத பழக்க வழக்கங்களைக் கொண்ட அந்த மக்கள் தங்களை ஆவிகள், கொடிய நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள கடந்த 2010 ஆம் ஆண்டிலிருந்து நாய்க் கறித் திருவிழா என்ற ஒரு விழாவை உற்சாகமாகக் கொண்டாடி வருகின்றனர். அந்தத் திருவிழாவின்போது, அந்த மாகாணம் முழுவதும் ஒவ்வொரு வீட்டிலும் செல்லப்பிராணியாக வளர்க்கப்படும் நாய்களை பிடித்து வந்து பூஜை செய்வார்கள். பின்னர், அந்த நாய்களைக் கும்பல் கும்பலாக கொன்று நெருப்பில் சுட்டு எரித்து துண்டுகளாகவும் முழு நாய்களாகவும் பொது மக்களுக்காக விற்பனைக்காக வைப்பர். அந்தப் பகுதியில் வாழும் யூளின் சமுதாய மக்களின் ஒவ் வொரு வீட்டிலும் அன்றைய தினம் நாய் கறி விருந்து அமோகமாக நடைபெறும். அந்த ஒரு நாளில் மட்டும் சுமார் 10 ஆயிரம் நாய்கள் கொல்லப்பட்டு அந்தத் திருவிழாவுக்காகப் பயன்படுத்தப்படும். சில ஆண்கள் நாய்க் கறி சாப்பிட்டால் ஆண்மை அதிகரிக்கும் என நம்பு வதால், அவர்கள் அந்த உணவை விரும்பி ருசித்து வருகின்றனர்.
சீனர்களின் இந்தக் காட்டுமிராண்டி [illegible] ளன. அந்தத் திருவிழா தொடங்குவதற்கு சில தினங்களுக்கு முன்னர் தமது நகரத்திலிருந்து வேறு நகரங்களுக்குச் சென்று நாய்களை வாங்கி விலை பேசி வாங்கி வந்து வளர்த்து வருவார்கள்.
தற்போது வரை சுமார் 360 நாய்கள் மற்றும் பல பூனைகளைத் தமது இடத்தில் பாதுகாப்பாக வளர்த்து வருகின்றனர்.
இருப்பினும், ஒவ்வொரு வருடமும் அந்தப் பகுதியில் நாய்க் கறித் திருவிழா உற்சாகமாகவே கொண்டாடப்பட்டு வருகிறது.
சீனாவில் மட்டும் வருடத்துக்கு சுமார் 2 கோடி நாய்கள் கொல்லப்பட்டு உணவாகச் சமைக்கப்படுகிறது. இதனால் கடந்த 2002 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை ராபிஸ் என்ற நோய் தாக்கி சுமார் 338 பேர் இறந்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நெப்போலியன் போனபார்ட்டை தோற்கடித்த போரின் 200 ஆம் ஆண்டு தினம் பெல்ஜியத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வேல்ஸ் இளவரசர் சார்ல்ஸ், பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் , கொர்ன்வால் இளவரசி கமிலா உள்ளிட்ட பல அரச குடும்பத்தினர் மற்றும் அரசியல் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

# தாய்ப்பால் கொடுக்க தாயாருக்குத் தடை

சிட்னி,ஜூன் 20


ஆஸ்திரேலியா நாட்டில் 11 மாதக் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பதற்கு குழந்தையின் தாயாரொருவருக்கு நீதிமன்றம் அதிரடியாகத் தடை விதித்து உத்தரவிட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னி நகரத்தைச்சேர்ந்த 20 வயதுப்பெண் ஒருவருக்கு 11 மாத வயதுடைய குழந்தை உள்ள நிலையில் தனது கணவனை விட்டு பிரிந்து தனியாக வசித்து வருகிறார்.

அவர் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுத்து வரும் நிலையில், அந்தப் பெண் தனது கை விரல் மற்றும் கால் பகுதிகளில் பச்சை குத்தியுள்ளார். ஆனால், பச்சை குத்துபவரிடம் தனக்கு 11 மாதத்தில் ஒரு குழந்தை உள்ளது என்பதையும், அதற்குத் தான் தாய்ப்பால் கொடுத்து வரும் உண்மையையும் அந்தப் பெண் மறைத்ததாகக் கூறப்படுகிறது.

பச்சைகுத்தியபின்னரும்தனது குழந்தைக்கு அவர் தாய்ப்பால் கொடுத்து வருவதை அறிந்த அவரது முன்னாள் கணவர், சிட்னியில் உள்ள குடும்ப நல நீதிமன்றத்தில் முறைப்பாடு ஒன்றைத் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கை விசாரித்த குடும்ப நல நீதிவான் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுத்து வரும் நிலையில் பச்சை குத்தியது தவறு, இவ்வாறான ஒரு சூழலில் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுத்தால் அது குழந்தைக்கு உடல்நலக்கேடு ஏற்படுத்தும் அபாயம் உள்ளதால், இனிமேல் குழந்தைக்குதாய்ப்பால்கொடுக்கக் கூடாது எனத் தாயாருக்கு தடை விதிப்பதாகத்தீர்ப்பளித்துள்ளார். (ஐ)

# கடந்த வருடத்தில் மட்டும் ஆறு கோடி பேர் அகதிகள்



ஜெனீவா,ஜூன் 20

பதிவு செய்யப்பட்ட வரலாற்று ஆவணங்களின்படி கடந்த வருடத்தில் தான் ஆறு கோடிபேர் அகதிகளாகியுள்ளனர். உலகில் போர், மோதல்கள் மற்றும் அடக்குமுறை காரணமாக இடம் பெயர்ந்துள்ளவர்களின் எண்ணிக்கை கடந்த வருடம் முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு, ஆறு கோடியாய் அதிகரித்துள்ளது என ஐ.நாவின் புதிய அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

நாடுகளின் அரசு எந்தக் கவலையும் இல்லாமல் நினைத்த மாத்திரத்தில் போர்களைத் தொடக்குவதாகவும், சர்வதேச சமூகம் அதைத் தடுக்க இயலாமல் அல்லது முயலாமல் இருப்பதாகவும் ஐநா மன்றத்தின் அகதிகளுக்கான ஆணையர் அந்தோனியோ குடரெஸ் தெரிவித்துள்ளார்.

உலகில் தமது சொந்த வாழ்விடங்களைவிட்டு அகதிகளாக வெளியேற நேர்ந்தவர்களின் எண்ணிக்கை 2013 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டுவரை 83 லட்சமாக அதிகரித்துள்ளது என அகதிகள் நலனுக்கான ஐ.நா. ஆணையம் தெரிவித்துள்ளது.

சிரியாவில் தொடரும் போரும், இஸ்லாமிய அரசு அமைப்பின் எழுச்சியும், முன்பில்லாத இந்த அதிகரிப்புக்கு முக்கிய காரணம் எனக் கருதப்படுகிறது.

கடந்த ஐந்து 5வருடங்களில் மட்டும் குறைந்தது 15 மோதல்கள் புதிதாக வெடித்தன, அல்லது பழைய மோதல்கள் மீண்டும் தலையெடுத்திருந்தன. இவற்றில், எட்டுமோதல்கள் ஆபிரிக்காவிலும் மூன்று மோதல்கள் மத்திய கிழக்குப்பிராந்தியத்திலும் வெடித்திருக்கின்றன என்றும் ஐ.நாவின் அறிக்கை கூறுகிறது.

இதன்விளைவாக 2014ஆம்ஆண்டில் மட்டும் ஐந்து கோடியே 95 லட்சம் பேர் இடம்பெயர்ந்திருப்பதாகவும், அதில் மூன்று கோடியே 82 லட்சம் பேர் சொந்த நாட்டின் உள்நாட்டு மோதல்களால் தமது நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்திருப்பதாகவும் ஐ.நா. அறிக்கை கூறுகிறது.

சுமார் இரண்டுகோடி பேர் அகதிகளாக வெளிநாடுகளுக்கு இடம்பெயர நேர்ந்திருப்பதாக தெரிவித்துள்ள ஐ.நா. அறிக்கை, உக்ரைன், நைஜீரியா மற்றும் தென் சூடான் ஆகிய நாடுகளின் போர்களும் இத்தகைய இடப்பெயர்வுகளுக்கு காரணமாக அமைந்ததாகவும் கூறுகிறது. அகதிகளில் சரிபாதிக்கும் அதிகமானவர்கள் சிறுவர்கள் ஆவர். இது தவிர, 18 லட்சம் அகதிகள் தங்களின் தஞ்சக்கோரிக்கைகளுக்கான முடிவுகளை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்கள்.

முழு ஐரோப்பாவிலும் இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை 50 சதவீதம் அதிகரித் திருப்பதாக தெரிவிக்கும் ஐ.நாவின் அறிக்கை, மத்திய தரைக்கடல் வழியாக உள்நுழையும் அகதிகளை கையாள்வது ஒரு பெரும் பிரச்சனையாக மாறிவருவதாகவும் கவலை வெளியிட்டிருக்கிறது. (ஐ)

# இளம் பெண்களைக் கொன்று சமைத்து உண்டவர்கள் கைது

பிரேஸில் நாட்டில் 3 பெண்களைக் கொன்று அவர்களது உடலைச் சமைத்து சாப்பிட்ட நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிரேஸில் நாட்டின் குவாரன்ஹன்ஸ் பகுதியைச் சேர்ந்த ஜோர்ஜ் பெல்ட்ராவ் நீகுரோமாண்ட், இசபெல் தம்பதிகளுக்கு கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக குழந்தை இல்லை.



இந்த நிலையில் ஜோர்ஜ் மற்றொரு பெண்ணை இரண்டாவது திருமணம் செய்து முடிப்பதற்கு அவரது மனைவியான இசபெல் உதவி செய்துள்ளார். இதனையடுத்து, இளம் மனைவி புரூனா மற்றும் முதல் மனைவி இசபெல் ஆகியோருடன் ஜோர்ஜ் ஒன்றாக வசித்து வந்துள்ளார்.

எனினும், புரூனா வழியாகவும் ஜோர்ஜ்க்கு குழந்தை பிறக்கவில்லை. இந்த நிலையில் வீட்டுக்கு முன்னால் உள்ள வீதியால் செல்லும் இளம்பெண்களை அவர்கள் தங்களது பேச்சால் ஈர்த்து தங்களது வீட்டுக்கு அழைத்து வந்து பழகியுள்ளனர். அதன் பின்னர் ஜோர்ஜ் மற்றும் அவரது 2 மனைவிகளும் சேர்ந்து அந்தப் பெண்களைக் கொன்றுள்ளனர். அவர்கள் அந்தப் பெண்களை சமையலறையில் வைத்து சமைத்து சாப்பிட்டுள்ளனர்.

அவர்களது பேச்சால் ஈர்க்கப்பட்டு கொலையான அனைவரும் 17, 20 மற்றும் 21 வயது கொண்ட இளம்பெண்கள். அவர் களில் ஜெசிகா என்ற இளம் பெண்ணுக்கு ஒன்றரை வயதில் பெண் குழந்தை ஒன்று உள்ளது. அந்தக் குழந்தையை அவர்களது வீட்டுக்கு அழைத்து வந்து பாசம் காட்டி வளர்த்து வந்துள்ளனர். அதனைத் தங்களது குழந்தையாக மாற்ற முயற்சி செய்துள்ளனர். அதன் ஒரு பகுதியாகவே ஜெசிகாவை அவர்கள் கொலை செய்யும் முடிவை எடுத்துள்ளனர்.

இதற்கு அடிப்படைக் காரணம் 2 ஆவது மனைவி புரூனா என ஜோர்ஜ் குற்றம் சாட்டியுள்ளார். அவர்கள் சமைத்த பின்னர் ஜெசிகாவின் மாமிசத்தை அவரது குழந்தைக்கும் ஊட்டியுள்ளனர். ஜோர்ஜின் முதல் மனைவி இசபெல் மாமிசத்தை கடைகளில் விற்றும் வந்துள்ளார். 3 ஆவது பெண்ணைக் கொன்ற பின்னர் அவரது கிரெடிட் கார்டைப் பயன்படுத்தியபோது பொலிஸாரிடம் அந்தக் கும்பல் பிடிபட்டுள்ளது. ஜோர்ஜ் கைது செய்யப்பட்டு அவருக்கு 23 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஒன்பது பேரைச் சுட்டுக்கொன்ற இளைஞன் கைது



வொஷிங்டன்,ஜூன் 20

அமெரிக்காவில் தேவாலயமொன்றுக்குள் புகுந்து 9பேரைச்சுட்டுக்கொன்ற இளைஞனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அமெரிக்காவின் தென் கரொலினா பகுதியில் உள்ள சார்லெஸ்டனில் புகழ்பெற்ற இமானுவேல் ஏ.எம்.இ தேவாலயத்தில் கடந்த புதன்கிழமை இரவு இளைஞன் ஒருவன் மற்றவர்களை நோக்கி துப்பாக்கிச் சூடுகளை நடத்தினான். அந்தத் தாக்குதலில் தேவாலயத்தின் மதபோதகர் உட்பட 9 பேர் உயிரிழந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. மேலும், உயிரிழந்தவர்களில் 6 பேர் ஆண்கள் மற்றும் 3 பேர் பெண்கள் எனத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தேவாலயத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியவர் டையிலன் ஸ்டொர்ம் ரூப் என்ற இளைஞன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து அந்த இளைஞனைப்பொலிஸார்கைதுசெய்துசிறையில் அடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன வேறுபாடு காரணமாக இந்த படுகொலைகள் நடந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (ஐ)

# நாய்க்குட்டியி[illegible] கின்னஸ் சாதனை



வொஷிங்டன்,ஜூன் 20

அமெரிக்காவில் நாய் ஒன்று [illegible] டு கால்களில் அதிவேகமாக ஓ[illegible]ய கின்னஸ் உலக சாதனை [illegible]த் துள்ளது.

கோன் ஜோ என்று அழைக்க[illegible]ம் பாப்பிலா, ஜேக் ரசல், சிகுவ[illegible]ா என்று மூன்று இனத்தின் க[illegible]ல் பிறந்த அந்த நாய்க் குட்டி 5[illegible]ர் தூரத்தை வெறும் 2.76 நொ[illegible]ல் கடந்து புதிய கின்னஸ் உலக ச[illegible]ன புரிந்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்

# எமது பாவம் நீங்க இதோ பரிகாரம்

ஒவ்வொரு குடும்பத்திலும் நினையாப் பிரகாரம் தோஷங்களும், பாவங்களும், துன்பங்களும், வேதனைகளும் தொட்டுக் கொள்வதுண்டு. சந்ததி சந்ததியாகச் சேமிக்கப்பட்ட பாவங்களை, வட்டியும் குட்டியுமாக நாம் அனுபவித்தேயாக வேண்டும். எமக்காக வேறொரு நபர் எமது துன்பங்களை அனுபவிப்பது அசாத்தியம். இருந்தாலும் எமது பாவங்களை எப்படி மற்றவர்கள் சம்பாதிக்கிறார்கள் என் பதையும் பார்த்து சற்று ஆறுதலடையுங்கள். இதுவே பாவப்பட்டவர்களுக்கு ஒருபரிகாரமாகவும்அமையும். கவலையை விடுங்கள். எப்படி அது கைகூடுகிறது என்று பார்ப்போம்.



**பயணம்**
நீங்கள் பயணம் செய்யும்போது, மிகுதிப்பணம் உங்களுக்குக் கிடைக்காதபோது அல்லது நீங்கள் கேட்டும் தராதபோது அல்லது ஆள்களுக்குள் அதட்டலாக நடத்துநர் பேசுவது உங்களுக்குத்தான் என்று மற்றவர்கள் பரிதாபமாகப் பார்க்கும்போது, இயற்கையாலும் இறைவனாலும் ஆசீர்வதிக்கப்படுகிறீர்கள். பாவங்களிலிருந்து மெல்லமெல்ல விடுபடுகிறீர்கள். நீங்கள் செய்த பாவங்களில் ஐந்து வீதமானவற்றை மிச்சக்காசு தராத நடத்துநர் பொறுப்பேற்றுக் கொள்ளுகின்றார். ஆகவே நீங்கள் கவலைப் படாதீர்கள். உங்களது பாவம் குறைந்துபோவதே பெருங்காரியம்.

**செருப்பு**
திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பணச்சடங்கு, திருவிழா நேரங்களில் பாதணிகள் அபகரிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தை யாம் பெற்று அவதிப்பட்டிருக்கின்றோம், துன்பப்பட்டிருக்கின்றோம். ஆனால் இதற்குப்போய் வழக்குத் தாக்கல் செய்யமுடியுமா? எங்களது பாவங்களைத் தாங்கிய செருப்புக்கள் இன்னுமொருவரால் தூக்கிச் செல்லப்பட்டு, அவரால் அணியப்படுமாயின், எங்களுடைய பாவங்களையும் அவர்கள் சுமக்கிறார்களல்லவா? இதுவும் பாவத்திலிருந்து எமக்கு விடுதலையல்லவா? பரிகாரமும் இது அல்லவா!



**அடிமை**
உலக வரலாற்றை ஆராய்ந்து பார்ப்போமாக இருந்தால் , அடிமையாக இருந்தவர்கள் மற்றும் பணிவாக இருந்த பலர் பாவத்திலிருந்து விடுபட்டு நல்லநிலையிலிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்திலே,பிறமாவட்டங்கள்மற்றும்மலை நாட்டிலிருந்து வருவிக்கப்பட்டு எமக்கு அடிமையாக வேலை பார்த்த பல்லாயிரக்கணக்கானோர் தற்போது மிக உச்சமாக அவர்களும், அவர்களது சந்ததியும் பாவவிமோசனம் பெற்று இலங்கையில் சிறந்த பிரஜைகளாகவாழ்கின்றார்கள். நாம் அவர்களை அடிமையாக வைத்திருந்தபடியால் அவர்களது பாவங்களையும் சுமக்கிறோம் அல்லவா?
முன்பொருகால், எனக்குத் தெரிந்த ஒரு குடும்பம், வேலையின் நிமித்தம், மலைநாட்டிலே குடிகொண்டது. மலையகத்தில் அப்பொழுது அவர்கள் எல்லாவற்றாலும் அடிமையாயிருந்தபடியால் இந்தக் குடும்பத்துக்கு அடிமையாய் இருந்து அடுப்பு, உடுப்பு, எடுப்பு, குளிப்பு அத்தனை வேலைகளையும் அவர்களே செய்து வந்தார்கள். காரணம் இந்தக் குடும்பம் படித்தது என்று சொல்கிறார்கள். ஆனால் அப்படியானதொன்று அங்கு காணப்படவில்லை. ஏனென்றால் தங்கள் பிள்ளைகள் படிக்க வேணுமென்று நினைத்துக் கொண்டு அந்த மலையகப் பிள்ளைகளை வைத்து வேலை வாங்கினார்களேயொழிய அவர்களுக்கு உருப்படியாகப் படிப்பிக்கவில்லை. இதனால் அவர்களுடைய பாவங் களையெல்லாம் இவர்களே இப்பொழுதும் சுமக்கிறார்கள். இன்னும் பாவங்கள் விட்டபாடில்லை மலையகப் பிள்ளைகளின் சந்ததி இப்பொழுது உன்னதமாக வாழுகிறது. ஆகவே அடிமையாய்த் தொண்டு செய்வதும், அடியவராய் இறைவனிடத்தே வாழ்வதும் பாவங்கள் தொலைந்து போவதற்கேயாம். ஓர் அரசையே மாற்றுமளவுக்கு நாம் ஒரு துரும்பாக இருந்ததை உலகம் இன்றும் படித்துக்கொண்டு இருக்கிறதல்லவா? ஆகவே இறைவன், மூத்தவர்கள், மாதா, பிதா, குரு சமூகம் யாபேருக்கும் நீங்கள் நல்ல தொண்டர்களாக, அடியவர்களாக வாழுங்கள். பாவம் தொலைந்து போகும்.

'பாவம் வினையறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்.....'
ஆம் தேவன் எனை ஆள்பவன் என்று சுந்தரர் சொல்வது பாலாவியும் பாவத்துக்குப் பரிகாரமாக அமைகிறது.

**நோயாளி**
நோயாளிக்கு வேண்டிய அத்தனை பணிகளையும் தொண்டாக எண்ணி ஆற்றுதல். அன்னை திரேசா அம்மையார் சிறப்பு இதையே சொல்லாமல் செய்தார், பேறடைந்தார், மக்களின் பாவங்களைக் கழுவினார், மக்கள் பாவவிமோசனம் பெற்றனர். ஆகவே நோயாளிகள், இயலாதவர்கள், இல்லாதவர்கள், தனித்திருப்போர், தவித்திருப்போர், தந்தையை இழந்தோர், தாயை இழந்தோர், தாரமிழந்தோர் என எவரெவர்க்கு ஆறுதல் வேண்டப்படுகிறதோ அவரவர்க்கு அதுவதுவாக உதவுதல் பாவ விமோசனத்தை அள்ளித்தரும்.

**பக்தன்**
சமய நோக்கில் யாரொருவர் பக்தனாக, அடியவராக இருப்பாராகில் பாவங்களைக் களைவதுக்கு அதுவே சிறந்த வழியாகும். கருங்கல்லு ஒன்று மூர்த்தியாகச் சிருஷ்டிக்கப்படுகிறது. மற்றையது படியாக நிறுத்தப்படுகிறது இவற்றுள் படியாக இருப்பதுவே விசேடமானது. எனது நண்பர் ஒருவர் தான் மூர்த்தி (விக்கிரகம்) என்றும், நான் (என்னை) படியென்றும் வர்ணித்தார். நான் சொன்னேன் 'படி' எப்போதுமே நிரந்தரம். ஆனால் விக்கிரகத்தையோ எடுக்கவேண்டி வரும் என்று , அப்படியே நடந்தது. 'படி' படியாகவே இருக்கிறது. மூல விக்கிரகம் பழுது ஏற்பட்டு மாற்றியே விட்டார்கள். படி அறுபது வயதிலேயே வீட்டுக்குப் போனது. விக்கிரகம் ஐம்பதுகளிலேயே வீட்டுக்குப் போகவேண்டிய நிலை வந்து விட்டது. புது விக்கிரகம் வந்து விட்டது. என்ன காரணம் என்றால், பக்தனாக இருப்பதுவே பாவங்களுக்கு விடுதலை. பக்தனுக்கு மேலே இருந்துவிட்டால் ஒரு போதும் இல்லையே தொல்லை. அதேபோல பக்தர்களுக்கு மேலே நின்று நிர்வாகம் செய்ய ஆசைப் படுபவர்கள் பக்தர்களின் பாவங்களில் பெருமளவைச் சுமக்கிறார்கள். எனவே பக்தர்கள் வீடுதிரும்பும் போது சுமைகுறைந்து, இலேசாக வரக்கூடியதாக பாவங்கள் கழுவப்பட்டு வருகிறார்கள். இது அனுபவ உண்மை.

**மலம்**
மலம் என்பது அழுக்கு. ஆணவத்துக்கும் அசிங்கத்துக்கும் இது பொருள் கொள்ளப்படும். ஆணவ மலமுடைய அகங்காரமே வடிவாகிய ஒருவர், சமூகத்தில் ஒரு பதவியை விலை கொடுத்து வாங்கிய நிலையில், அவரது பார்வை எம்மீது விழுமாயின் அல்லது எம்மீது பங்கப்படுத்த விரும்புவாராயின் எம்மில் ஏதாவது ஆணவமலம் அற்பசொற்பமாக இருப்பதையும் ஒப்புக்கொண்டு தன்னைத்தான் நிலைப்படுத்திக்கொள்வார். அவர் பார்வைக்கு ஆட்பட்டவர், எம் போன்றவர் சுகம்பெற்று நிம்மதி பெறுவர். பெரும்பாலும் நீங்க ளும் அவதானித்திருப்பீர்கள்ஆணவ மலம் பீடித்திருப்பவர்களது அலங் கோலங்களை. இவர்களில் பெரும் பாலானோர் சும்மா இருக்க மாட்டார்கள். தங்களுக்குள்ளே தான் உலகம் இருக்கிறதென்றே நினைத்து விடுவார்கள். எல்லாம் தனக்கே வேண்டும் என்று நினைத்து துறவு நிலைக்கும் சென்று விடுவார்கள். அங்கே போயும் பிரச்சினைகளை விலைக்கு வாங்கி மற்றவர்களுடைய மல அழுக்குகளையும் தான் பெற்றுவிடுவதனாலும் மூன்றாவது பங்காளியாகப் புகுந்து விடுவதனாலும் இவரிடமிருந்து விலகிச் வெல்வதுதான் பாவவிமோசனமாக எமக்கு அமையும். மேலும் எமது வீட்டிலேயும் சரி வீட்டு வாசலிலேயும் சரி நாய்களோ அல்லது பூனைகளோ அல்லது மனித மிருகங்களோ மலம் கழித்து அசிங்கம் செய்வதாக இருந்தால் அதை நான் நீ என்று பாராது பஞ்சியைப் பாராது யார்



துப்பரவு செய்கிறார்களோ அவர்களது பாவங்கள் விலகி ஓடும். இந்த விடயத்தை தற்போதைய சந்ததியினர் கவனிக்க மறந்து விடுகிறார்கள். நாயினுடைய மல அசிங்கங்களுக்கு மேலாகவே வாகனங்களில் சவாரி செய்வார்கள். அவையும் கிருமிகளாகப் படுக்கையறைக்குள் வந்துவிடும். பிறகென்ன வாய்க்குள் போவது கடினமல்லவே? ஆதலால் அசிங்கங்களைப் பாதுகாப்பாக அப்புறப்படுத்துவது பாவவிமோசனமாகும். பழைய காலத்தில் அசிங்கம் எங்கே இருந்தாலும்முதல்வேலையாகஅதைத்துப் புரவு செய்வார்கள். பின்னர்தான் அடுத்தவேலை, இதன்பிரகாரமே நாம் புண்ணிய ஆத்துமாக்களாக இப்போதும் இருக்கின்றோம். எமது முன்னோர்கள் இதுபோன்ற எத்தனை எத்தனை புண்ணிய கருமங்கள் செய்தபடியால் அவர்களும் நாமும் பாவங்களிலிருந்து விடுதலை பெற்றிருக்கின்றோம். ஆகவே அகம், புறம் மல அழுக்குகளை நீக்குவோமாக.

> யாழ்ப்பாணத்திலே, பிற மாவட்டங்கள் மற்றும் மலை நாட்டிலிருந்து வருவிக்கப்பட்டு எமக்கு அடிமையாக வேலை பார்த்த பல்லாயிரக்கணக்கானோர் தற்போது மிக உச்சமாக அவர்களும், அவர்களது சந்ததியும் பாவ விமோசனம் பெற்று இலங்கையில் சிறந்த பிரஜைகளாக வாழ்கின்றார்கள்.

**சொத்து**
'சிவன் சொத்து குலநாசம்' அரச, பொது, ஆலய சொத்து அல்லது பணம் எதுவாயினும் அவற்றில் ஏதாவது ஒன்று தனிப்பட்ட ஒருவரின் சுயதேவைக்கு பயன்படுத்தப் படுமாயின் அது மிச்சம் பெரிய பாவமாகும் . அவ்வாறன்றி பொது நலத்திற்காக ஒவ்வொரு சதமும் பயன்படுமாயின் எமது பாவங்கள் முற்றாகவே தொலைந்துபோகும் 24 மணித்தியாலமும் வீட்டிலும் சரி வீதியிலும் சரி, தண்ணீரோ மின்சார விளக்குகளோ, அநியாயமாகத் துஷ்பிரயோகம் செய்யப்படுமாயின் அதுவும் பாவகாரியங்களே. அதிலிருந்து பாவவிமோசனம் பெறுவதாயின் தண்ணீர், மின்சாரம் வீண் விரயம் செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தவேண்டும். இதே போன்று அரசு தரும் வேதனம், தளபாடங்கள், வாகனங்கள், மலசல கூடங்கள் பௌதிக வளங்கள் காகிதாதிகள் எதுவென்றாலும் அவை அனைத்தையும் எந்தவித சேதாரமுமின்றி நட்டமில்லாமல் அளவாகப் பயன்படுத்துவோமாக இருந்தால் பாவங்கள் நம்மை வந்து அணுகாது. அநியாயமாகச் செலவழித்தால் பாவங்களே எமது வாழ்வாகிப் போகும். அரச நிதி விடயத்தில் துஷ்பிரயோகம் செய்தவர்கள் வீட்டுக்குப் போன சங்கதி, வழக்குக்குப் போன சங்கதி யாவும் வரலாறல்லவா? வரலாற்றை ஒருபோதும் மறைக்க முடியாதல்லவா? ஆரவாரங்கள் ஒரு போதும் விடுதலை தரப் போவதில்லை. அது பரிகாரமுமல்ல.

**கூலி**
ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு வேலையை இரண்டாயிரம் ரூபா பெறுமதிக்குச் செய்வதும் செய்து முடிப்பதும் புண்ணியமாகும். இவ்வாறு ஒரு பொதுவேலையைத் தியாகமாகச் செய்து முடிக்கின்ற எவரோ அல்லது பலரோ யாராயினும் பாவங்களிலிருந்து விடுதலைபெறுவர். மாறாக ஆயிரம் ரூபா பெறுமதியான வேலைக்கு இரண்டாயிரம் ரூபா வாங்குவது பாவமாகும். பெருவாரியான பணத்தை வேதனமாகப் பெற்றுக்கொள்ளும் ஒருவர் உரிய பயனை வழங்காது அரசியலையும் ஊர்ப் புதினங்களையும் கதைத்துவிட்டு வீட்டுக்குப் போய் குடும்பசுகத்தை மட்டும் கவனிப்பவராக இருந்தால் பாவங்கள் மறுப்பின்றி வீட்டில் குடிகொள்ளும். ஆதலால் கூலிக்கு மேலதிகமாக வேலை செய்யும் ஒருவருக்கு பாவங்களிலிருந்து விடுதலை கிடைத்தே தீரும். இன்றேல் தமக்குரிய கடமைகளிலிருந்து வீடும் நாடும் விலகிக் கொண்டு போவதை அறியக்கூடிய தாயுள்ளது. இதற்குப் பரிகாரம் எமது கைகளிலேயே உள்ளது. எம்மை நாம் சுய பரிசோதனை செய்வோமா? இனியாவது.....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் காரைநகர் வீதிக்கு விமோசனம் கிடைக்குமா?

**யாழ்.** மாவட்டத்தில் பிரதான வீதிகள் அகலமாக்கப்பட்டு காப்பெற் வீதிகளாக மாற்றப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பிக்கும் ஐந்து பிரதான வீதிகள் அகலமாக்கப்பட்டு காப்பெற் வீதிகளாக மாற்றம் செய்வதற்காக திட்டமிடப்பட்டதாக பத்திரிகைகள் மூலம் கடந்த ஆறு வருடங்களுக்கு முன்னர் அறிய முடிந்தது. யாழ். –பருத்தித்துறை, யாழ்.காங்கேசன்துறை, யாழ்.– பலாலி ஆகிய வீதிகள் இவற்றுள் செய்து முடிக்கப்பட்டு விட்டன. மற்றைய இரண்டு வீதிகளில் ஒன்றான யாழ்.–பண்ணை ஊர்காவற்றுறை வீதிப் பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கடைசியாக யாழ்.–மானிப்பாய் சித்தன் கேணி –காரைநகர் வீதி இன்னும் ஆரம்பிக்கப் படாமலேயே உள்ளது. இது மிகவும் மனவேதனையைத் தருகின்றது.

கடந்த ஆறு வருடங்களுக்கு முன்னர் இந்த வீதிகள் ஆரம்பிக்கப்பட்டு கடந்த வருடம் மூன்று வீதிகளின் அபிவிருத்தி வேலைகள் நிறைவுற்று மக்கள் சிரமமின்றிப் பயணித்து வருகின்றனர். ஆனால் காரைநகர் பிரதான வீதி ஏன் தாமதமடைகின்றது என்று தெரியாமல் உள்ளது. யாழ் மாவட்டத்தின் பிரதான வீதிகளை விட ஏராளமான சிறிய வீதிகள் காப்பெற் வீதிகளாக மாற்றம்பெற்று புதுப்பொலிவுடன் திகழ்வதைக் காணமுடிகின்றது. ஆனால் இலட்சக்கணக்கான மக்கள் பயன்படுத்தும் யாழ்.–காரைநகர் வீதி அபிவிருத்தி இல்லாமல் அநாதரவாகக் காணப்படுகின்றது. இந்த வீதியில் மானிப்பாய், சங்கானை, காரைநகர் ஆகிய பெரு நகரங்கள் உள்ளன.இதில் ஏராளமான வர்த்தக நிறுவனங்கள், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் என பலவற்றை கொண்டு விளங்குகின்றது. அதனைவிட காரைநகரில் இ.போ.ச பஸ் டிப்போ, கசூரினா கடற்கரை என்பன காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இந்த வீதி நல்லூர், வலி.தென்மேற்கு(மானிப்பாய்), வலி.மேற்கு(சுழிபுரம்) காரைநகர் ஆகிய பிரதேச சபைகளை உள்ளடக்கிய பெரும் வீதியாகும். காரைநகர்–யாழ்ப்பாணம், யாழ்ப்பாணக் குடாநாட்டில் வலிகாமம் பகுதியே அதிக மக்கள் செறிவாகக் காணப்படும் பகுதியாகும். இந்த யாழ்.–காரைநகர் வீதியில் யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் ஊடாக இளவாலை, கீரிமலை வீதி, சித்தன்கேணி ஊடாக மாதகல், காரைநகர், தெல்லிப்பழை, அராலி வீதிகள் மற்றும் சித்தன்கேணியிலிருந்து பருத்தித்துறை, சாவகச்சேரி போன்ற இடங்களுக்கான பஸ் சேவைகள் இடம்பெற்று வருகின்றன. எல்லா பஸ்களும் நீண்ட தூரப் பயணத்தைக் கொண்டனவாகும். இவ்வீதி வழியாக சுமுகமற்ற பயணத்தை மேற்கொள்வதனால் அரச தனியார் பஸ்கள் மற்றும் இதர வாகனங்களும் அடிக்கடி பழுதடைவதனால் மக்களுக்கு ஏற்படும் சிரமம் எல்லோரும் அறிந்ததே.

நான்கு பிரதேசசபைகளைக் கடந்து செல்லும் இந்த வீதியை நாளொன்றுக்கு ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். மானிப்பாய், சங்கானை நகரங்களும் ஆனைக்கோட்டை சந்தி, சண்டிலிப்பாய் சந்தி, சித்தன்கேணி சந்தி, சுழிபுரம் சந்தி ஆகியனவும் சிறியதாகக் காணப்படுவதனால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. இச் சந்திகள் சுற்றுவட்டம் அமைக்கப்பட்டு காணப்படுமாயின் போக்குவரத்து வசதியாகக் காணப்படும். நான்கு பிரதேசசபை தவிசாளர்களுக்கோ, பிரதேச செயலர்களுக்கோ இது தெரியாமல் இல்லை. ஆனாலும் அவர்கள் கண்டும் காணாததுபோல் இருப்பது மிக வேதனை தருவதாகும்.

இந்த யாழ்.–காரைநகர் வீதியை அகலமாக்கி காப்பெற் வீதியாக மாற்றித்தரும்படி அரசியல் தலைவர்களுக்கு பல முறை கடிதங்கள் அனுப்பியும் பயனேதும் இல்லை. அவர்கள் பாராமுகமாக உள்ளனர். குடாநாட்டில் எல்லா வீதிகளையும் புனரமைப்பு செய்யும்போது வலிகாமத்தின் முக்கியமான இந்த வீதி திருத்தப்படாமல் இருப்பது இந்த வீதியைப் பயன்படுத்தும் மக்களுக்கு கவலையளிக்கின்றது. எல்லா பிரதேசங்களும் அபிவிருத்தி அடையும் போது வலிகாமத்தில் தென்மேற்கு, மேற்கு பிரதேசங்கள் அந்தபலனைப்பெற அருகதையற்றவையா? எல்லா வீதிகளும் புனரமைக்கப்பட்டு வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு பிரகாசமாக இருக்கும் போது ஏன் இந்த வீதி பாழடைந்து காணப்படுகின்றது.

மேலும் வேடிக்கையான விடயம் யாதெனில் இந்த வீதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரின் வேகக்கட்டுப்பாட்டு பலகைகள் நடப்பட்டுள்ளன. இந்த வீதிக்கான உச்சவேக எல்லையும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அவற்றில் குறிப்பிட்டுள்ள வேகத்தின் அரைவாசி வேகத்தில் கூட செல்வது சாத்தியமற்றுக் காணப்படுகின்றது.


இந்த வீதியை ஏன் வீதி அபிவிருத்தி அதிகார சபை கவனிக்காமல் உள்ளது என்று தெரியவில்லை.




எனவே இந்தவீதி புனரமைப்பு பணியை ஆரம்பித்து மக்கள் சிறப்பான போக்குவரத்தை மேற்கொள்ள உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். வீதி அபி விருத்தி அதிகார சபை, அரசியல் தலைவர்கள், பிரதேச சபை தவிசாளர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோரே இது உங்கள் கவனத்திற்கு முன் வைக்கிறோம். இதனை இந்த வீதியை அபிவிருத்தி செய்தால் எம் மக்களின் கோடி நன்றிகள் உங்களைச் சேரும்.

*மு.சண்முகநாதன் சித்தன்கேணி*

## கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# எதிர்பாராத பின்னடைவு

கடந்த செவ்வாயன்று இலங்கை மன்றக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்ட மிகவும் முக்கியமான கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவையும் இந்நாள் ஜனாதிபதி மைத்திரியையும் ஒற்றுமைப்படுத்தவும் சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்தவும் அறுவர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. ஜனாதிபதி மைத்திரியும் இதற்கு ஒப்புதல் வழங்கியிருந்தார். இந்தக் குழு அமைக்கப்பட்ட செய்தி வெளியானபோது அரச தரப்புக்குள் சலசலப்பு ஏற்பட்டது. மைத்திரி குத்துக்கரணம் அடிக்கப்போகிறாரா என்று பலரும் கேள்வி எழுப்பினர். கடைசியாக நடைபெற்ற மாத்தறைக் கூட்டத்தில் மஹிந்தவுக்கு ஆதரவாகப் பல்லாயிரக்கணக்கானோரைத் திரட்டு வதில் வெற்றிபெற்ற மஹிந்த ஆதரவாளர்கள் இந்தக் குழு அமைக்கப்பட்டபோது குதூகலமடைந்தனர்.

குழு அமைக்கப்பட்ட அன்றைய இரவே அதன் அங்கத்தவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் ஜோன் செனிவிரட்னவின் இல்லத்தில் சூட்டோடு சூடாக முதலாவது கூட்டம் நடைபெற்றது. ஆனால் கடைசியில் நடந்தது என்ன? மைத்திரி போட்ட எதிர்பாராத திடீர் குண்டினால் அந்தக் குழு செயற்பட ஆரம்பிக்கு முன்னரே செயலிழந்து விட்டது. "மஹிந்தராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தாராளமாகக் கலந்துகொள்ளலாம். ஆனால், சுதந்திரக்கட்சி சார்பாக அவருக்கு நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளர் நியமனமோ பிரதமர் வேட்பாளர் நியமனமோ வழங்கப் படமாட்டாது. தேசியப் பட்டியலிலும் அவருக்கு இடமளிக்கப்பட மாட்டாது" - இப்படி பிரஸ்தாப குழுவுக்கு கண்டிப்பாக அறிவித்து விட்டார் ஜனாதிபதி.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் இந்த முடிவு அறிவிக்கப்பட்டு ஜனாதிபதியின் நிலைப் பாடு உறுதிசெய்யப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பால் செவ்வாயன்று அமைக்கப்பட்ட அறுவர் குழு செயலிழந்தது மட்டுமல்ல மஹிந்தவைப் பிரதமர் வேட்பாளராக்குவோம் என்ற கோஷத்துடன் கூட்டங்களை பெரும் எடுப்பில் நடத்திவந்த மஹிந்த ஆதரவாளர்களின் போராட்டத்துக்கும் பெரும் பின்னடைவு ஏற்பட் டுள்ளது.

ஜனவரி 8 தேர்தலில் மஹிந்த தோல்வியடைந்த பின்னர், 19ஆவது அரசமைப்புத்திருத்தம் நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் குறைக்கப்பட்டு பிரதமருக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்ட பின்னர், சுதந்திரக் கட்சிக்குள் மஹிந்த மீண்டும் செல்வாக்குப் பெறுவதைத் தடுக்கும் முக்கிய அரணாக இருந்தவர் ஜனாதிபதி மைத்திரி. எனினும் மஹிந்த ஆதரவாளர்களின் கடும் பிரயத்தனம் காரணமாக மஹிந்தவுக்கும் மைத்திரிக்கும் இடையிலான சந்திப்பு, இருவரையும் ஒற்றுமைப்படுத்த அமைக்கப்பட்ட அறுவர் குழு காரணமாக மஹிந்த மீண்டும் கட்சிக்குள் ஊடுருவி பிரதமர் வேட்பாளர் நியமனம் பெற்றுவிடுவாரோ என்ற அச்சம் இருந்தது. எனினும் வேட்பாளர் நியமனத்தில் மஹிந்தவுக்கு இடமில்லை என்ற ஜனாதிபதி மைத்திரியின் அறிவிப்பு இதற்கெல்லாம் தற்பொழுது முற்றுப் புள்ளி வைத்துவிட்டது. இது ஆட்சிமாற்றத்துக்கும் நல்லாட்சிக்கும் வாக்க ளித்த இலட்சக்கணக்கான மக்களுக்குக் கிடைத்த வெற்றியாகும். பிரதமர் ரணில் கூறுவதுபோல், மஹிந்தவுக்கு இருப்பது செயற்கை அலை. இந்த அலை விரைவில் ஓய்ந்துவிடும். அல்லது அஸ்தமித்து விடும்.

அடுத்த தேர்தலில் களமிறங்கி தனக்கான அரசியல் தளத்தை தக்கவைத்துக் கொள்வதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த கனவுடன் காத்திருந்தார். தன்னைத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராக நிறுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிக்கு அவர் பல்வேறு வகையில் அழுத்தங்களையும் கோரிக்கைகளையும் முன்வைத்திருந்தார். இதற்காக அவர், தன்னுடன் இருந்த பரிவாரங்களைப் பயன்படுத்திக் கொண்டார். மஹிந்தவை பிரதமர் வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள ஒரு சில மூத்த தலைவர்கள் மைத்திரியிடம் கோரிக்கை முன்வைத்து வந்தனர். அதநேரம் மஹிந்தவுக்கு ஆதரவு கோரி தெற்கின் பல இடங்களிலும் கூட்டங்கள் பெரும் எடுப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இந்த கூட்டங்களுக்கான மறைமுக சக்தியாக இருந்து செயற்பட்டவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவேதான். ஆட்சிக் கதிரையில் மீண்டும் அமர்வதற்காக படாத பாடு பட்டுவரும் அவர், அதற்காக எதையும் செய்வதற்கு தயாராக இருக்கிறார். இதனால்தான் பல முனைகளிலிருந்தும் தன்னை வேட்பாளராக நியமிக்குமாறு மைத்திரியைத் தொடர்ந்து வற்புறுத்தி வந்தார்.

ஆயினும் நேற்றுமுன்தினத்துடன் அவரது பிரதமர் கனவு கலைந்து போனது. பிரதமர் வேட்பாளராக மட்டுமின்றி தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகக்கூட மஹிந்தவை நியமிக்க முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார் மைத்திரிபால. எவரும் எதிர்பார நேரத்தில் இந்த அதிரடி அறிவிப்பை விடுத்து. மஹிந்தவுக்கு மட்டுமல்ல அவருடன் சேர்ந்தியங்கும் கூட்டத்துக்கும் அதிர்ச்சியளித்திருக்கிறார் மைத்திரி. இதனால் மஹிந்தவும் அவரது பரிவாரங்களும் அதிர்ச்சியடைந்துள்ளனர். விரைவில் தேர்தல் அறிவிப்பு வெளியாகவுள்ள வேளை மைத்திரி கொடுத்த அதிர்ச்சி வைத்தியம் சுதந்திரக்கட்சி வட்டத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள அதேவேளை, எதிர்ப்பலைகளையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இன்றைய நிலையில் மஹிந்தவுக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் ஒரு தெரிவு மாத்திரமே எஞ்சியிருக்கிறது. மூன்றாவது அணி ஒன்றை உருவாக்கி தனித்துத் தேர்தலில் போட்டியிடுவது.

இதன்மூலம் சுதந்திரக்கட்சி பிளவுபடப் போகிறது. ஜனவரி 8 தேர்தலுக்குப் பின்னர் மஹிந்தவுக்கு ஏற்பட்டுள்ள இரண்டாவது பெரிய தோல்வி சுதந்திரக்கட்சி வேட்பாளர் நியமனம் மறுக்கப்பட்டதே. ஜனவரி 8 தோல்விக்கு மஹிந்தவுடன் கூட இருந்தவர்களே முக்கிய காரணம். தற்போதைய தோல்விக்கும் அவர்கள் தான் காரணம். இப்படியானோரை நம்பித்தான் மஹிந்த மூன்றாவது அணி அமைக்கப்போகிறாரா?

சு.கவில் வேட்பாளர் நியமனம் மறுக்கப்பட்டமை மஹிந்தவுக்குப் பெரும் பின்னடைவு என்பதில் சந்தேக மில்லை.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சமுதாயப் பொறுப்புணர்ந்து செயற்படுவது எமது கடமை!

யாழ்ப்பாணத்தில் அதிகரிக்கும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, குறிப்பாக பாடசாலைகளை அண்மித்து நடைபெறும் போதைப்பொருள் வியாபாரத்தைத் தடுக்கும் வகையில், பொலிஸார் சைக்கிள் ரோந்துச் சேவையை விசேடமாக ஆரம்பித்து உள்ளனர். வரவேற்கத்தக்க அவர்களின் இந்தச் சேவை நேற்றுமுன்தினம், யாழ். இந்து மகளிர் கல்லூரியில் தொடக்கி வைக்கப்பட்டது.

வடக்கில் சமூக விரோதச் செயல்கள் மற்றும் கலாசார சீரழிவுகள் அதிகரித்து வருவது குறித்து இதற்கு முன்னரும் இந்தப் பத்தியில் எடுத்தியம்பி உள்ளோம்.

அதேவேளை, இது தொடர்பில் பொலிஸார் பல அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கதே. பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பைப் பெரிய அளவில் உறுதி செய்யும் புதிய செயற்பாடு மிகுந்த பயனைத் தரும் என எதிர்பார்க்கலாம்.

மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன், அவர்களது கல்விக்குப் பங்கம் ஏற்படாமல் தடுப்பதற்கும் இந்தப் பணி உதவும் என்று யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கருத்துத் தெரிவித்திருப்பதும் பொருத்தமானதே.

பொலிஸாரின் மேற்குறிப்பிட்ட சேவை, வீதிகளில் பயணிக்கும் பெண்களுக்கு ஏற்படுத்தப்படும் இடையூறுகள் அவர்களின் தாலிக்கொடி மற்றும் தங்க நகைகளை அறுத்துச் செல்வது போன்ற குற்றச் செயல்களையும் தடுக்க உதவும் என்றும் நம்பலாம்.

குடாநாட்டில் நடைபெறும் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு பொலிஸார் புதுவகை உத்திகளைக் கையாள்வது இன்றைய அவசிய தேவையாகும்.

வடக்கு மண்ணில் மதுப்பாவனை கண்மண் தெரியாமல் அதிகரித்து வருகிறது. சமூக விரோதச் செயற்பாடுகளும், தட்டிக் கேட்க எவரும் இல்லை என்ற நிலையில் வானத்தை நோக்கி உயர்ந்து செல்கின்றன.

அவற்றுக்குச் சமாந்தரமாக, கலாசார சீரழிவுகளும் நட்டாமுட்டித் தனமும் மேலுயர்ந்து செல்கின்றன. குறிப்பாக, எமது எதிர்காலச் சந்ததியினரான இளசுகளைக் கண்டிக்க, கட்டுப்படுத்த எவரும் இல்லை என்ற எதிர்மறை நிலை, பருத்துத் தடித்து வருகிறது; வளர்கிறது!

வாழ்வியல், ஒழுக்கவியல், பண்பியல் துறைகள் நலிந்து, தேய்ந்து போகும் ஆபத்தான நிலையும் நெருங்கி வருகின்றது எனின், அது ஊதிப் பெருப்பிக்கும் ஒன்றாக மாட்டாது.

யாழ். நகரை அண்டிய பகுதியில், பாடசாலை மாணவர்களுக்குப் போதையூட்டப்பட்ட பாக்கை விற்பனை செய்த கடைக்காரர்கள் இருவரைப் பொலிஸார் கைது செய்திருப்பது ஆகப்பிந்திய சம்பவம்.

விசாரணையின் பின்னர் சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தவும் ஏற்பாடாகி உள்ளது.

இந்த நிலைமை, பரந்து பரவாமல் தடுக்கும் பொறுப்பு பொலிஸாருக்கு மட்டும் உரியது என்று சமூக நலன் விரும்பிகளும் பெற்றோரும் வெறுமனே பார்வையாளராக கைகட்டி வாய்பொத்தி இருக்கக் கூடாது.

சமூக நலன் நாடி எல்லோரும் கைகோர்த்து செயற்பட வேண்டும். எமது வருங்காலப் பிரஜைகளை போதைக்கு அடிமையாக்கத் திட்டமிட்டுச் செயற்படும் சகல தரப்பினரையும் இனங்கண்டு பொலிஸார், நீதிமன்றம் ஊடாக மிகக் கடுமையாகத் தண்டிக்க நாமும் உதவ வேண்டும்.

எங்களுக்கான அரசியல் உரிமைகளைப் பெறுவதற்குப் போராடுவதற்குச் சமமாக அன்றி, அதற்கு அதிகமாகவும் கவனம் செலுத்திச் செயற்படும் உடனடித் தேவை இது.

அதனை உணர்ந்து இப்போது செயற்படாவிடில், வருங்காலச் சமுதாயம் அர்க் கெட்டுப் போகும் என்பதை உணர்ந்து செயற்படுங்கள். ஒவ்வொரு மணித்துளியும் மிகப் பெறுமதியானது.

சமுதாயப் பொறுப்பை உணர்ந்து செயற்படுவது, மூத்த எம்மவர் கடமை என்பதை, எவ்வேளையிலும் மறந்துவிடலாகாது.

# மஹிந்தவை அரவணைத்துச் செல்வதால் மைத்திரி சாதிக்கப் போவதென்ன?



■ சேரலாதன்

நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் பொருட்டு இடம்பெறப்போகும் பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெறவேண்டுமானால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முழு ஆதரவு அந்தக்கட்சிக்கு முழு அளவில் தேவைப்படுமென ராஜபக்ஷ ஆதரவாளர்கள் கட்சியின் தலைவரும், ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவிடம் எடுத்துரைத்துள்ளனர். மேலும் மைத்திரி, மஹிந்த இருவரினதும் இணைப்பை வலுப்படுத்தும் வகையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மஹிந்த அணியினர் எந்தவகையிலாவது முன்னாள் ஜனாதிபதியை அரசியலுக்குள் இழுத்து விடுவதையே தமது நோக்கமாகக் கொண்டு தீவிரமாக இயங்கி வருகின்றனர். இவர்களுக்குப் பின்னால் மஹிந்த மறைந்து நின்று கொண்டிருப்பது ஒன்றுமே புதிதான விடயமல்ல. அவரது தூண்டுதலின் பேரிலேயே மைத்திரிபால சிறிசேனவுக்கு பல்வேறு வகையிலும் நெருக்கடிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இது மைத்திரிக்கும் நன்கு தெரியும். ஆனாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற வகையில் சில விடயங்களில் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய தேவை அவருக்கு உள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் அங்கம் வகிக்கின்றபோதிலும் அவரது ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகளும், மனித உரிமை மீறல் சம்பவங்களும், சர்வாதிகார நடவடிக்கைகளும் மறக்கக்கூடியவையல்ல. பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெற்றிபெற வேண்டும் என்பதற்காக மஹிந்தவின் முன்னைய செயற்பாடுகளுக்கு மன்னிப்பு வழங்குவது எந்தவகையிலும் நியாயமானதல்ல. மேலும் கட்சியில் அவருக்கு முக்கிய பொறுப்புக்களை வழங்குவது, ஊழல், மோசடிகளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அங்கீகரித்ததாக அமைந்து விடும்.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பிளவு ஏற்பட்டுள்ளமை இது தான் முதற்தடவையல்ல. ஏற்கனவே பல தடவைகள் அந்தக்கட்சி பிளவுகளைச் சந்தித்துள்ளது. கடந்த ஜனாதிபதி தேர்தலின் போதும்கூட அது இரண்டாக பிளவடைந்திருந்தது. அந்த வேளையில் கட்சியின் ஒற்றுமை குறித்துச் சிந்திக்காதவர்கள் தற்போது அதைத் தீவிரமாகத் தூக்கிப்பிடித்துக் கொண்டிருப்பது வேடிக்கையாகத்தான் உள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவே வெற்றி பெறுவாரென அவரது ஆதரவாளர்கள் எண்ணியதால் அப்போது மைத்திரியை ஒரு பொருட்டாக அவர்கள் மதிக்கவில்லை. தற்போது மஹிந்தவுக்குப் பாதிப்பு என்றதும் வரிந்து கட்டிக்கொண்டு ஒற்றுமை தொடர்பாகப் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

மஹிந்த விடயத்தில் ஜனாதிபதி விட்டுக்கொடுத்து நடப்பாராயின் அது அவர் மீதான நல்லெண்ணத்தைக் குலைத்துவிடும் என்பதை எவரும் மறுக்கவே முடியாது. ஏற்கனவே மஹிந்த தொடர்பாக ஜனாதிபதியே பல விரும்பத்தகாத தகவல்களைத் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் அவரை மீண்டும் இணைந்துக் கொள்வது ஒரு போதுமே ஏற்றுக்கொள்ளத்தக்க ஒன்றாக இருக்காது.

ஜனாதிபதித் தேர்தலின்போது என்னுடன் அப்பத்தை உண்டு, கோப்பியை அருந்திய மைத்திரி, இப்போது முதுகில் குத்துகின்றார் என்று கேவலமாக மஹிந்த விமர்சித்திருந்தார். அதேவேளை மஹிந்த என்னை இரு தடவைகள் கொலை செய்வதற்கு முயற்சி செய்துள்ளாரென மைத்திரி கூறியுள்ளார். ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்ற அன்று இரவு மைத்திரி குருநாகலையில் அமைந்துள்ளதமது நண்பர் ஒருவரின் தோட்டத்தில் மறைந்திருந்ததை அவரால் ஒருபோதுமே மறக்க முடியாது. இவ்வாறு இரு துருவங்களாகக் காணப்படும் மைத்திரியும், மஹிந்தவும் இணைந்து எதனையும் சாதித்துவிட முடியாது.

பணம் மற்றும் அச்சுறுத்தல்களைப் பயன்படுத்தி அரசியலில் எவரையும் விலைக்கு வாங்கிவிடலாம் என்ற கொள்கையைக் கடைப்பிடித்தவர் மஹிந்த.ஐ.தே.க, ஜே.வி.பி, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவை இவ்வாறுதான் வளைத்துப் போடப்பட்டதாகக் கூறப்பட்டது. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிலிருந்தும்

> மஹிந்த ராஜபக்ஷவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் அங்கம் வகிக் கின்ற போதிலும் அவரது ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகளையும், மனித உரிமை மீறல் சம்பவங்களும், சர்வாதிகார நடவடிக்கைகளும் மறக்கக்கூடியன வல்ல.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மஹிந்த அரசின் பக்கம் தாவினார். உண்மையில் ஜனநாயக விரோதமான இந்தச் செயலை அப்போது எவருமே கண்டுகொள்ளவில்லை. நாடாளுமன்ற தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஒற்றுமை தொடர்பாக இப்போது பேசிக் கொள்பவர்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரி எவ்வாறு பதவிக்கு வந்தார் என்பது தொடர்பாகவும் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப் போது மைத்திரிக்குப் பிறரின் ஆதரவு தேவையாக இருந்தது. ஆனால் இப்போது கட்சியின் ஒற்றுமை அவருக்குப் பிரதானமாகத் தென்படுகின்றது.

ஆனால் மஹிந்த என்ற மனிதர் மீண்டும் அரசியலில் தலையெடுத்தால் அது இந்த முழு நாட்டுக்கும் நல்லதல்ல என்பதை மைத்திரி முதலில் புரிந்து கொள்ள வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் தம்மைத் தூக்கி நிறுத்திய ஏணியை அவர் உதைத்து விடுவது அவரது மனச்சாட்சிக்கு விரோதமானது.

ஆகவே கட்சியைப்பற்றி சிந்திப்பதை விடுத்து நாடு குறித்தும் நாட்டு மக்கள் குறித்தும் அவர் சிந்திப்பாராயின் மஹிந்தவின் உறவை அவர் நிச்சயம் கைவிடும் தீர்மானத்தையே மேற்கொள்ளுவார் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# வித்தியா! நீ வித்தாகிப் போனாய் எங்கள் அனைவரது மனங்களிலும்

■ கி.ஜெனீவன்

ஒரு அரசனிடம் நூறு உயர்தரக் குதிரைகள் இருந்தன. ஒருநாள் அவற்றில் ஒன்று களவு போய்விட்டது. எனினும் அந்தநாட்டுப்படையினர் குறித்த குதிரையைக் களவாடிச் சென்ற திருடனைக் கைது செய்து அரசன் முன் நிறுத்தினர். அரசனோ சிறிதும் தயக்கமின்றி திருடனுக்கு மரண தண்டனை அளித்தான். அரசனின் இந்த அறிவிப்பைக் கேட்டு அரசவை அமைச்சர்களுக்கும் அந்த நாட்டு மக்களுக்கும் பெரும் அதிர்ச்சியாகவே இருந்தது. ஒரு குதிரையைக் களவாடியதுக்காக எந்த அரசனாவது மரணதண்டனை அளிப்பானா? இதனை அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியாது போனால் நேரடியாக அரசனிடமே வினவினர். 'அரசே! தங்களது ஒரு குதிரை தானே களவாடப்பட்டுள்ளது. அதற்காக மரணதண்டனை விதிப்பது நியாயமா?' ஆனால் அரசன் மிகத் தெளிவாகப் பதிலளித்தான். நான் எனது ஒரு குதிரை திருடப்பட்டதற்காக மரணதண்டனை அளிக்கவில்லை, என்னிடமுள்ள மிகுதி தொண்ணூற்று ஒன்பது குதிரைகளும் களவு போகக் கூடாது என்பதற்காகவே இந்தத் தண்டனையை வழங் கினேன்.

இக்கதையை இங்கு ஏன் கூறுகின்றேன் என்றால், புங்குடுதீவு பாடசாலை மாணவியான தங்கை வித்தியாவின் கூட்டுவன்புணர்வுக்கொலையுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு அளிக்கும் தண்டனையே, ஏனைய பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக அமைய வேண்டும். அதாவது வித்தியாவுக்கு நடந்த கொடுமை இனிமேல் எமது நாட்டில் எந்தப் பெண்ணுக்கும் ஏற்படாது இருப்பதற்குரிய ஏது நிலையை இந்த மனிதர்களுக்கு அளிக்கும் தீர்ப்பின் ஊடாக உருவாக்கிக் கொள்ளவேண்டும். தவிர பிறிதொரு காரணமும் உண்டு. அதாவது தங்கை வித்தியாவின் கொலையுடன் கைது செய்யப்பட்ட ஒன்பது பேருக்கு புறம்பாக மேலும் சிலர் மீது சந்தேகம் உள்ளதாகவும், அவர்களைப் பற்றிய தகவல்களை தற்போது வெளியிடுவது விசாரணைகளுக்கு பாதகமாக அமையு மென்றும் இந்த வழக்கை விசாரணை செய்யும் விசேட பொலிஸ் பிரிவினர் தெரிவித்துள்ளதாக அறிய முடிகின்றது. அவர்கள் தெரிவிப்பது போன்று உண்மையில் இவ்வழக்கில் மேலும், சம்பந்தப்பட்டவர்கள் இருப்பின் அவர்கள் நேரடியாக வன்புணர்விலோ அன்றிக் கொலையுடனோ சம்பந்தம் இல்லாதவர்களாகக்கூட இருக்கலாம். ஆனால் இந்தச் சம்பவம் தொடர்பாக முன்னரே அறிந்து வைத்துக்கொண்டு அதனை தடுப்பதற்கோ அல்லது உரியவர்களிடம் வெளிப்படுத்தாதவர்களாகவோ இருப்பின் என்னைப் பொறுத்தவரை அவர்களுக்கும் இந்த வழக்கில் உச்சபட்சத் தண்டனை அளிக்கப்பட வேண்டும். ஏனெனில் சமூகவிரோத செயலை செய்பவர்கள் மட்டும் சமூக விரோதிகள் அல்ல. தனது சமூகத்துக் காக செயற்படக்கூடிய ஆற்றல் இருந்தும் அதனை ஆற்றாதவர்களும் சமூகவிரோதிகளே.

மலரைக் கசக்கி மணம் கொள்பவர் உண்டோ? என சிறுவயது முதல் கேள்விப்பட்டுள்ளேன். ஆனால் ஒரு சிறிய மலரைக் கசக்கி பிய்த்து வீசுமளவுக்கு கொடியவர்கள் எமது சமூகத்தில் உள்ளனர் என்பதை சிறிதும் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னர் எம் எல்லோரது ஆன் மாவையும் உலுக்கிய சம்பவம் இது. இந்த வகை கொடியவர்களால் மட்டும்தான் மனிதரின் ஆன்மாவில் வலிகளை ஏற்படுத்த முடியும். ஐந்தறிவுள்ள மிருகங்கள்கூட தன்னினத்தில் வன்புணர்வு கொள்வதில்லை. மனித இனத்தில் மட்டும் தான் இவ்வாறானவர்கள் எல்லாம் உள்ளனர் போலும். உயிரினங்களில் மேம்பட்டவன் மனிதன் என்கின்றனர். ஆறறிவு உள்ளவன், சிந்திக்கும் ஆற்றல் உள்ளவன், பகுத்தறிவு கொண்டவன் என எவ்வளவுதான் வகைப்படுத்திக் கூறிக்கொண்டாலும், அதே உயிரினங்களின் வரிசையில் கேடுகெட்ட உயிரினமும் எமது மனித இனம்தான் என்றே எண்ணத் தோன்றுகிறது.

நானுமொரு ஆணாக இருக்கின்ற போதிலும் இந்த வகையான கொடிய பிராணிகளை எந்த வகைக்குள் சேர்த்துக்கொள்வதென்று என்னால் அனுமானிக்கமுடியவில்லை. படுபாதகர்கள், வானமும், பூமியும் பொறுத்துக்கொள்ளமுடியாத பாவத்தை அல்லவா செய்துள்ளனர். இந்தக் கிராதகர்களிடம் அகப்பட்டிருந்த நேரத்தில் இந்தச் சிறுமலர் என்ன பாடுபட்டிருந்தாளோ அதனை அவள் மட்டுமே அறிவாள். யாராவது என்னைக் காப்பாற்றமாட்டார்களா, ஏதாவது அற்புதம் நடந்து ஒரு சக்தி என்னை மீட்காதா என என்னென்ன எண்ணங்கள் அவள் மனதில் எழுந்தனவோ?

எத்தனை கடவுள்களை அழைத்துக் கொண்டாளோ? அவள் மனதே அதை அறியும். முள்ளிவாய்க்கால் பேரவலத்தின்போது கடவுள் எப்படிப் பார்வையாளராக இருந்தாரோ, அவ்வாறே இங்கும் இருந்து கொண்டார். தற்போது எல்லோரும் இந்தக் கொடிய அரக்கர்களுக்கு உச்சபட்சத் தண்டனை வழங்கவேண்டுமென வலியுறுத்துகின்றனர். உச்சபட்சத் தண்டனை என்பது சாவுத் தண்டனையாகத்தான் இருக்கமுடியும். ஆனால் இந்தக் கிராதகர்களுக்கு இதுபோதுமான தண்டனையா? என்பதே எனது கேள்வி. அதுவும் எமது நாட்டில் மரணதண்டனை அளித்தாலும் நிறைவேற்றப்படுவதில்லை. எவ்வாறாயினும் சட்டத்தில் சாவுத் தண்டனைக்கு மேலாக ஒரு தண்டனை இல்லை என்பதனால் இந்தக் காதகர்களுக்கு சாவுத் தண்டனை அளித்து அதை நிறைவேற்ற வேண்டுமென்பதே எம் எல்லோருடைய வேண்டுதலும். அத்துடன் இந்தப் பிராணிகள் இனிமேல் உயிரோடு இருக்கும் வரை உறவுகள், சொந்தங்கள், நண்பர்கள் என யாரும் அற்றவர்களாகவே வாழவேண்டும். அதாவது உறவுகள் இருந்தும் அநாதை ஆக்கப்பட்டு அனாதரவாகவே வாழவைக்கப்பட வேண்டும்.

இந்தக் கிராகதர்களின் உறவினரோ, சொந்தங்களோ அல்லது நண்பர்களோ இவர்களது உறவைத் துறப்பதுடன் இவர்களை விடுவிப்பதற்குரிய எந்தவித முயற்சிகளிலும் ஈடுபடாது இருப்பதோடு சிறைச்சாலை சென்று பார்வை யிடுதல், ஆதரித்தல் போன்ற எது வித நடவடிக்கைகளிலும் ஈடுபடக் கூடாதென்பதே எமது வேண்டு கோள். அது அவர்கள் மாணவி வித்தியாவுக்கு செலுத்தக்கூடிய வணக்கம் மட்டுமல்ல, குறித்த காமவெறியர்களுக்கு அவர்களினால் வழங்கக் கூடிய தண்டனையுமாகும்.

குறித்த இந்த பிராணிகளுக்கு அம்மா இருக்கலாம், சகோதரிகள் இருக்கலாம், மனைவிமார் இருக்கலாம், ஏன் பெண் பிள்ளைகள் கூட இருக்கலாம். இவர்கள் ஒரு பெண்ணான தங்கை வித்தியாவுக்கு நேர்ந்த கொடுமையைப் புரிந்துகொள்ள முடியாதவர்களாக இருப்பார்கள் என்று நான் எண்ணவில்லை. எனவே அவர்கள் இந்தக் கொடியவர்களின் பந்தத்தை கைவிடுவார்கள் என்றே நம்புவோம்.

இதனை இங்கு ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால் பெரும்பாலும் குற்றச்சாட்டுகளோடு சிறைச் சாலை செல்பவர்கள் எவ்வகையான மோசமான குற்றங்கள் இழைத்திருப்பினும் அவர்கள் பொருளாதார வளம் கொண்டவர்களாயின் அவர்கள் இழைத்த குற்றமென்பது இங்கு இரண்டாம்பட்சமான விடயமாகிவிடும். இப்படிப்பட்டவர்களுக்கு ராஜமரியாதை அளித்து சேவகம் செய்வதற்கும் ஆள்கள் உள்ளனர் என்பது இங்கு வேதனையோடு குறிப்பிட வேண்டிய விடயமாக உள்ளது.



சுண்டுக்குளி மாணவி கிரிஷாந்தியின் கொலை வழக்கில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட ராஜபக்ஷவையும் சந்தித்துள்ளேன். ஆனால் அவரது செயற்பாடானது நான் மன தில் எண்ணியிருந்ததற்கு நேர் மாறாக ஆச்சரியம் அளிக்கும் முறையிலேயே இருந்தது. அவரிடத்தில் எந்தவித குற்ற உணர்வையோ அன்றி பச்சாதாபத்தினையோ என்னால் கிஞ்சித்தும் கண்டு கொள்ளமுடியவில்லை.

தன்னைவிடப் பெரிய குற்றங்கள் செய்த பலர் வெளியில் உள்ளனர். தன்னை மட்டும் இதில் அகப்படுத்தி விட்டார்கள் என்பது தான் அவரது வாதம். தற்போதைய நிலையில் எல்லோருக்கும் இருக்கக் கூடிய ஒரே கவலை, ஏன் ஏக்கம் என்று கூட சொல்லலாம், அது சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப் பாவித்து இந்தக் கிராதகர்கள் யாராவது தப்பிவிடுவார்களோ என்பது தான். ஏனெனில் சட்டம் சொல் கின்றது சந்தேகத்தின் பயனை குற்றம் சாட்டப்பட்டவனுக்குக் கொடு என்று. உண்மையில் இது போன்ற வழக்குகளைப் பொறுத்தவரை சந்தேகத்தின் பயனைப் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடு என்கிற நிலை ஏற்படவேண்டும். அப்போது தான் இவர்கள் போன்ற காடையர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து நழுவ விடாது தடுப்பதோடு மட்டுமல்லாது பொதுமக்களிடத்தில் நீதிமன்றமூடாக நீதியைப் பெற்றுக்கொள்ள முடியுமென்ற பூரண நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். இதற்கு மிக அண்மைய உதாரணம்தான் கஹ வத்த வழக்கின் முடிவு. ஒட்டு மொத்த இந்தியாவையே உலுக்கிய டில்லி சட்டக் கல்லூரி மாணவி கூட்டு வன்புணர்வு கொலை வழக் கில் குற்றவாளிகளுக்கு உச்சபட்ச தண்டனை அளிப்பதற்காக அந்த நாட்டு சட்டத்தில் திருத்தத்தை மேற்கொண்டி ருந்தார்கள் என்பது நாம் அறிந்ததே. அதே போல் எமது நாட்டிலும் சட்டத்துறை சார்ந்த வர்கள் இதுவிடயத்தில் பொருத்தமான கவனம் செலுத்தவேண்டு மென்பதே என் போன்றவர்களது எதிர்பார்ப்பு.

கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன்பு வரை உயர்ந்த இலட்சியத்தோடு போராடி உலகமே வியந்து பார்த்த தியாகங்களை புரிந்த மாவீரர்களைக் கொண்ட எமது மண்ணில் இதுபோன்ற சம்பவம் நேர்ந்ததானது ஒட்டு மொத்த தமிழ்ச் சமூகத்துக்கும் தலைகுனிவையே ஏற்படுத்திவிட்டது.

எம்மவர்கள் சிலர் தெரிவிப்பது போல் அதிகரித்த மது, போதைப் பொருள்களின் பாவனையால் தான் இது போன்ற வன்புணர்வு சம்பவங்களும், சிறுவர் துஷ்பிர யோகங்களும் எமது பகுதிகளில் அதிகரித்துள்ளமைக்குக் காரணமெனக் கூறுவது பொருத்தமானதாக இருக்க முடியாது என்பதே எனது கருத்து. ஏதோ இந்த ஒன்பது கிராதகர்களும் அன்றைய தினத்தில் போதையில் இருந்திருக்காது விட்டிருந்தால் சுத்தமான யோக் கியர்கள் போன்று அல்லவா கருத வேண்டிய நிலை ஏற்படும். இது எமது சமூகத்தில் ஏற்பட்டுள்ள சமூகச்சீர்கேடுகளை ஏற்றுக் கொள்ள முன்வராது அவற்றை மறைப்பதுபோல் ஆகிவிடும். அதுவும் இதுபோன்ற கொடிய வக்கிரம் கொண்டவர்களின் குற்றங்களைப் போதைப் பொருள்கள் மீது சுமத்தி வைப்பதென்பது முறையாக மாட்டாது. போதையையும் போதைப் பொருள்களையும் காரணம் காட்டுவதானது குறித்த கொடியவர்களின் பக்கத்தில் ஏதோ ஓர் நியாயத்தைத் தேடுவதுபோல் ஆகிவிடும். இந்த ஒன்பது பிராணிகளின் மனங்களிலும் சிந்தையிலும் அடிப்படைகளிலேயே ஏதோ பழுதுகள் உள்ளன என்பதே உண்மையாகும்.

> எமது பகுதிகளில் முன்னொருபோதும் இல்லாத வகையில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளது. குறிப்பாக எமது இனத்தின் இளைஞர்களைத் திசைதிருப்பி எமது வலு, கல்வி, கலாசாரத்தை சிதைப்பதற்காக இவைகள் திட்ட மிட்ட முறையில் மேற்கொள்ளப் படுகின்றன என்றால் அதனை மறுப் பதற்கில்லை.

எமது பகுதிகளில் முன்எப்போதும் இல்லாத வகையில் போதைப் பொருள் பாவனைகள் அதிகரித்துள்ளன. குறிப்பாக எமது இனத்தின் இளைஞர்களைத் திசைதிருப்பி எமது வலு, கல்வி, கலாசாரத்தை சிதைப்பதற்காக இவைகள் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப் படுகின்றன என்றால் அதனை மறுப்பதற்கில்லை. ஆனால் தங்கை வித்தியாவுக்கு நேர்ந்த அவலத் துக்கு மது போதைப்பொருள்களின் அதிகரித்த பாவனைதான் காரண மென்றால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இதனைப் புரிந்து கொள்வதற்கு ஒன்றும் பெரிய சூத்திரம் தேவையில்லை. இதுவரை எந்தவொரு குடிமகனாவது மதுபோதையில் தாயையோ அன்றி சகோதரிகளையோ பலாத்காரம் செய்ததாக நாம் கேள்விப் பட்டிருக்கவில்லையே. அது தவிர தற்போது மது, போதைப்பொருள்கள் பாவிக்கும் பெண்கள் தொடர்பாகவும் அன்றாடம் அதிகளவில் அறிந்து கொள்கின்றோம்.அப்படி என்றால் இது போன்ற பெண்களும் போதை காரணமாக ஆண்கள் யாரையாவது பலாத்காரம் செய்திருக்க இடமுண்டல்லவா? எம்மவர்களிடத்தில் மது, போதைப் பொருள்களின் பாவனையை மட்டும் ஒழித்தால் போதாது– அதற்கு மேலாக எமது சமுதாயத்தில் முதன்மையாக சீர்படுத்திக் கொள்ள வேண்டிய பல குறைபாடுகள், சீர்கேடுகள் உள்ளன என்பது மட்டும் தெளிவு.

வித்தியா, நீ வித்தாகிப்போனாய்? எங்கள் எல்லோர் மனங்களிலும். பாரதி மட்டும் இன்று இருந்திருந்தால் உனக்கு இந்த நிலையைத் தந்த கொடியவர்களை எப்படிச் சபித்திருப்பானோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....




## ஆக்கப் பாதை நம்மிடம்

எனக்கென்று ஒரு சுயேச்சை உள்ளது,
எனக்கென்று சிறிது அனுபவமும் இருக்கிறது, உலகுக்குத் தர என்னிடம் ஒரு செய்தி இருக்கிறது, அதை அச்சமின்றியும் எதிர்காலத்தைப்பற்றிக் கவலைப்படாமலும் நான் கொடுக்கவே செய்வேன். அவர்களைவிடப் பெரிய சீர்திருத்தவாதி நான் என்பதையும் இந்தச் சீர்திருத்தவாதிகளுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அவர்கள் விரும்புவது அங்கொன்றும் இங்கொன்றுமான சீர்திருத்தத்தையே. நானோ அடிமுதல் நுனிவரையிலான மொத்தச் சீர்திருத்தத்தையே விரும்புகிறேன். அந்தச் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதற்கான வழியில்தான் இரு தரப்பினரும் வேறு படுகிறோம். அவர்களுடையது அழிவுப்பாதை; என்னுடையது ஆக்கப் பாதை. நான் மறுமலர்ச்சியை நம்பவில்லை, வளர்ச் சியையே நம்புகிறேன்.

என்னைக் கடவுள்நிலையில் வைத்துக்கொண்டு, இந்த வழியில் தான் நீங்கள் போக வேண்டும், இந்த வழியில் போகக் கூடாது என்று சமுதாயத்துக்குக் கட்டளையிட நான் துணிய மாட்டேன்.

# கண்களை பாதுகாக்க குறிப்புக்கள்



(நேற்றைய தொடர்ச்சி)

கண்களுக்கு ஓய்வு கொடுப்பதை வேறு முறையிலும் செய்யலாம். அதற்கு அதிக பலன் கிட்டும். அதாவது, ஒரு ஈரத் துணியை நனைத்து பின்பக்க கழுத்தில் போட்டு விட்டு சிறிது எண்ணெயை புருவங்களில் தடவிவிட்டு இரண்டு உள்ளங்கை களையும் கண்களில் அழுத்தும்போது உங்களது கண்களுக்கு குளிர்ச்சியும், ஓய்வும் ஒரு சேரக் கிடைக்கும். புருவம் என்பது, கண்களுக்குத் தேவையான வெப்பத்தைச் சீராக வைத் திருக்க அமைக்கப்பட்ட ஒரு இயற்கை அமைப்பாகும். புருவங்களின் கூட்டினால் தான் கண்களின் குவியங்கள் எளிதாக சுருங்கி விரி கின்றன. ஆனால், அதை விட அதிகமான வெப்பத்தை எமது கண்கள் கணினியில் இருந்து பெற்று வருகின்றன. எனவே அந்த வெப்பத்தைக் குறைக்க புருவங்களில் எண்ணெய் வைப்பது கண்களுக் குக் குளிர்ச்சியை அளிக்கும். பொதுவாக கண்களுக்கு ஓய்வு தேவை என்றால், எதையும் உற்று அல்லது கூர்ந்து பார்க்காமல் இருந்தாலே போதும். அதாவது சாதாரணமாக கண்களால் எந்தப் பொருளையும் பார்ப்பதால் கண்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. ஆனால் எதையாவது உற்றுப் பார்க்கும் போதுதான் கண்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. சிறிது நேரம் எந்தப் பொருளையும் உற்றுப் பார்க்காமல், எதைப் பற்றியும் சிந்திக்காமல் இருப்பதும் நல்ல பயிற்சிதான். அதேபோல, மதியம் உணவு இடைவேளையின் போது சாப்பிட்டுவிட்டு உடனடியாக கணினி முன் அமர்வதை விட, சாப்பிட்ட பின் ஒரு 15 நிமிடம் அமரும் நாற்காலியிலேயே தளர் வாக அமர்ந்தபடி கண்களை மூடி இருப்பது, ஏன் 10 நிமிடம் தூங்குவது கூட மிகவும் நல்லது. ஒரு நாளைக்குத் தேவையான சக்தியை இந்த 15 நிமிடத் தூக்கத்தில் உடல் பெற்று விடும். அதற்காக படுக்கையில் படுத்துத் தூங்கக் கூடாது. அமர்ந்தபடி தளர் வாக 15 நிமிடம் அமர்ந்திருந்தாலும் கூட நல்லது. இப்படி செய்வதால் மாலையிலும் நீங்கள் சுறுசுறுப்பாக இருக்க முடியும்.

## நாளை

**ஆனி-06**
**ஞாயிற்றுக்கிழமை**
**21.06.2015**
**திதி: பஞ்சமி**
**மு.இ. 11.23 வரை**
**நட்சத்திரம்:**
**ஆயிலியம்**
**மு.ப.11.53 வரை**
**சுபநேரம்:**
08.54-10.24 வரை
**இராகுகாலம்:**
04.24-05.54 வரை

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 800 | 800 | 700 | 600 |
| நண்டு | 300 | 500 | 400 | 400 | 300 | 400 |
| கணவாய் | 600 | 650 | 600 | 500 | 700 | 500 |
| பாரை | 650 | 500 | – | 600 | 600 | 370 |
| சுறா | 650 | 500 | – | 600 | – | – |
| சீலா | 300 | 250 | 500 | 400 | 400 | – |
| விளை | 600 | 400 | 400 | 500 | 600 | – |
| முரல் | 300 | 400 | 400 | 400 | 400 | 350 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 350 | 600 | – |
| கிழாக்கன் | 650 | 700 | 400 | 400 | 200 | – |
| ஓரா | 400 | 400 | 300 | 300 | – | 500 |
| திரளி | 250 | 350 | 200 | 250 | 200 | – |
| நகரை | 200 | 300 | 200 | 300 | 200 | 250 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 100 | 100 |
| ஒட்டி | 300 | 200 | 200 | 200 | 200 | 150 |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 200 | 140 |
| பாலை | 400 | 350 | 100 | 400 | 400 | – |
| வாளை | 100 | 200 | 200 | 350 | – | – |
| கொய் | 100 | 200 | – | 120 | 50 | – |
| மதனம் | 150 | 300 | 300 | 250 | 200 | 250 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | – | 80 | 60 | 80 | 120 | 60 | 30 |
| கத்தரி | 50 | 60 | 50 | 60 | 50–60 | 40 | 60 | 45–60 |
| கரட் | 200 | 180 | 160 | 160 | 250–240 | 280 | 220–240 | 240 |
| மரவள்ளி | 60 | 40 | 60 | 50 | 50–60 | 60 | 60 | 40 |
| பயிற்றை | 220 | 140 | 140 | 120 | 200 | 80 | 160 | 130 |
| பாகல் | 200 | 160 | 180 | 160 | 200–260 | 120 | 160 | 130 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 80 | 100 | 80–100 | 120 | 140 | 65 |
| பெ.வெங்காயம் | 100 | 120 | 100 | 100 | 120 | 120 | 90 | 100 |
| சி.வெங்காயம் | 100 | 100–140 | 120 | 140 | 140 | 160 | 160 | 100 |
| பூசணி | 30 | 30 | 30 | 30 | 30 | 40 | 35 | 15 |
| தக்காளி | 80 | 80 | 90–120 | 60 | 70–80 | 120 | 60 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 160 | 40–50 | 40 | 60 | 30 |
| கீரை | 15 | 20 | 20 | 10 | 15–20 | 20 | 40 | 35 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 35 | 20 | 30 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 140 | 140 | 140 | 120 | 140–180 | 300 | 200 | 160 |
| புடோல் | 60 | 100 | 70 | 100 | 60–80 | 120 | 80 | 70 |
| கோவா | 80 | 100 | 100 | 90 | 80–90 | 120 | 100 | – |
| வெண்டி | 140 | 100 | 130 | 100 | 140 | 80 | 90 | 60 |
| போஞ்சி | 200 | 240 | 240 | 160 | 200–240 | 200 | 200 | 180 |
| லீக்ஸ் | 160 | 180 | 180 | 160 | 160 | 240 | 240 | 180 |
| தேங்காய் | 50 | 25–35 | 60 | 50 | 40–60 | 40 | 40 | .35–40 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 90 | 100–120 | 130 | 100 | 120 |
| தேசிக்காய் | 120 | 120 | 160 | 120 | 140 | 80 | 140 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 30 | 20 | 15 | 10 |
| கறிமிளகாய் | 120 | 200 | 140 | 180 | 100–140 | 200 | 200 | 180 |
| இராசவள்ளி | 120 | – | 140 | 120 | 100–120 | 120 | 180 | 80 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 600 | 150 | 550–600 | 200 | 300 | 170 |

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | | | 9 | | | | |
| 4 | | | 7 | | | 3 | | |
| 3 | | | | | 1 | | | |
| | | 3 | | | 6 | 5 | 4 | |
| | 4 | | | 5 | | | 3 | |
| | 9 | 7 | | | | 6 | | |
| | | | 4 | | | | | 2 |
| | | 2 | | | 7 | | | 3 |
| | | | | 1 | | | 7 | 5 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 7 | 2 | 1 | 3 | 8 | 6 | 4 |
| 4 | 6 | 8 | 7 | 9 | 5 | 3 | 2 | 1 |
| 1 | 2 | 3 | 8 | 4 | 6 | 5 | 7 | 9 |
| 3 | 4 | 1 | 6 | 8 | 7 | 2 | 9 | 5 |
| 8 | 7 | 6 | 5 | 2 | 9 | 1 | 4 | 3 |
| 2 | 5 | 9 | 1 | 3 | 4 | 6 | 8 | 7 |
| 7 | 8 | 4 | 3 | 6 | 1 | 9 | 5 | 2 |
| 9 | 3 | 2 | 4 | 5 | 8 | 7 | 1 | 6 |
| 6 | 1 | 5 | 9 | 7 | 2 | 4 | 3 | 8 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண் டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக் கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.**

# காதலில் உங்கள் குணம் எப்படி?

ஒருவரது பிறந்த ஆண்டு மாதம் திகதியை வைத்து அவர் காதலில் எப்படி இருப்பார் என்று பார்ப்போம் (உதாரணமாக 1990.4.15 இவரது எண்ணைக் கூட்டினால் 2 என்ற எண் வரும்)

**எண் ஒன்று**

**பெண்ணுக்குரிய குணம்**

வாழ்க்கையை நுனிக்கரும்பு வரை சுவைத் திட ஆர்வமுள்ளவர். தனக்கு வரப் போகும் கணவன் தன்னைவிடச் சகல அம்சங் களிலும் உயர்ந்து இருக்க வேண்டு மென்று எதிர்பார்ப்பவர். அப்படிப்பட்ட வரை ஆராதனை செய்யத் தவறமாட்டீர்கள். லட்சியப்போக்கும், சாதுர்யமும், நகைச் சுவையும் நிரம்பியவர்.


**ஆணுக்குரிய குணம்**

மனைவியிடத்தில் விசுவாசத்தோடும், பெருந்தன்மையோடும், நன்றியுணர்ச்சியோடும் இருப்பீர்கள். மனைவியின் செயல்களில் குறை கண்டுபிடிப்பதைத் தவிர்த்து விடுங்கள். அதுவே, உங்கள் வாழ்க்கையைச் சொர்க்கம் போல் மாற்றி விடும்.

**எண் இரண்டு**

**பெண்ணுக்குரிய குணம்**

கணவர் எள் கொண்டு வா என்றால் எண்ணெய் இதோ என்று சொல்லும் சுபாவம் உடையவர். அடிக்கடி உணர்ச்சிகளுக்கு அடிமையாகும் தொட்டாற் சிணுங்கி நீங்கள். உங்கள் ஒவ்வொரு



பணியையும், உங்கள் அலங்காரத்தையும், உங்கள் கணவர் அல்லது காதலர் வாய் நிறைய மெச்ச வேண்டுமென்று எதிர்பார்ப்பவர். நீங்கள் நல்ல நகைச் சுவை நிரம்பியவர். நீங்கள் இருக்குமிடத்தில் எப்பொழுதும் கலகலப்புத்தான்.

**ஆணுக்குரிய குணம்**

நீங்கள் ஒரு காதல் மன்னன். அத்தோடு உங்கள் காதலியின் முறையீடுகளை அனுதாபத்தோடு கேட்டு, தீர்வு காணத் தவறமாட்டீர்கள்.

**எண் மூன்று**

**பெண்ணுக்குரிய குணம்**

ஆண்மை நிறைந்தவரையே எதிர்பார்ப்பீர்கள். அழகுகூட இரண்டாம் பட்சம் தான். நாகரிகத்தை எதிர்பார்ப்பீர்கள். வீட்டுப் பணியுடன், வெளிப்பணியையும் திறம்பட வகிக்கக் கூடியவர். உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை என்ற பாரதியின் பாட்டுக்கு இலக்கணம் நீங்களேதான்.

**ஆணுக்குரிய குணம்**

ஓர் உத்தம கணவனின் இலட்சண குணங்கள் அத்தனையும் பொருந்தியவர். எல்லோருக்கும் பரிசுகளையும் பண்டங்களையும் வாரி வழங்கும் கர்ணன். எல்லா விடயங்களையும் பேதமின்றி விளையாட்டாகவே எடுத்துக்கொள்பவர். சுவையான பேச்சாளர். பொறாமை என்றால் அது என்ன விலையென்று கேட்பவர்.

**எண் நான்கு**

**பெண்ணுக்குரிய குணம்**

உங்களை நேசிப்பவரிடம் விசுவாசமாகவும், நன்றியுள்ளவராகவும், அனுசரணையுள்ளவராகவும் இருப்பீர்கள். நீங்கள் இருக்குமிடத்தில் கும்மாளமும் வேடிக்கையும் சிரிப்பும்தான்.

**ஆணுக்குரிய குணம்**

குழந்தைகளையும், மனைவியையும் அதிகமாக நேசிப்பவர். விசால மனமும், பெருந்தன்னையும் நிறைந்தவர். உங்கள் மனதைப் பறிகொடுத்தவருக்காக உயிரைக் கூடத் தியாகம் செய்யத் தயங்காதவர். பரிபூரண சுதந்திரத்தை வழங்குபவர். உங்களைக் கணவராக அடைபவர் மிகவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

**எண் ஐந்து**

**பெண்ணுக்குரிய குணம்**

பெண்மை பரிபூரணமாகக் குடிகொண்டுள்ளவர் நீங்கள். உங்களை மனைவியாக அடையப் போகிறவர்கள் மிகவும் அதிஷ்டசாலி தான். உலகை ஒரு சுற்றுச் சுற்றி வர வேண்டுமென்ற பேராசை கொண்டவர்.

**ஆணுக்குரிய குணம்**

பெண்களிடையே நீங்கள் மிகப் பிரபலம். உங்கள் பார்வைக்காக ஏங்கும் பெண்கள் ஏராளம். உங்களின் போக்கு எதிர்த்தரப்பினருக்கு அதிர்ச்சியையும் அளிக்கலாம், ஆனந்தத்தையும் அளிக்கலாம். உங்களுக்கு காதல் வாழ்க்கை ஒரு சவால்தான்.

(தொடரும்)

# பெண் படும் பாடு...



இன்று தாய்மார் எதிர்நோக்கும் முதல் சவால் இரண்டு குதி ரைகளில் பயணிப்பது தான். இரண்டு வெவ்வேறு திசைகளில் பய ணிக்கும் குதிரைகளென்றால் என்ன செய்வது? வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்கு, வேலைக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஒருபுறம். குழந்தையை நல்ல முறையில் கவனிக்க வேண்டும் என்ற கவலை மறுபுறம்.

குழந்தையை வீட்டில் விட்டு விட்டு வேலைக்குப் போவதே ஒரு தாய்க்கு மிகவும் கடினமானதொன்று. வீட்டிலும் விட முடியாத படி சிறிய குழந்தையெனில் சொல்லவே வேண்டாம்.

மழலையின் விரல் விலக்கி அலுவலகம் விரையும் பொழுதுகள் மிகக் கடினமானவை. அது வேலைக்குப் போகும் தாய்மாருக்கு மட்டுமே புரிந்த சங்கதி. பெண்களின் மன அழுத்தத்துக்கு முக்கியமான காரணமே இதுதான்.

பாலூட்டும் அன்னையர்களுக்கு பிரச்சினை இன்னும் அதிகம். குழந்தை பிறந்த மூன்று மாதங்களிலேயே அலுவலகம் செல்லவேண்டுமென பெரும்பாலான நிறுவனங்கள் நிபந்தனை விதிக்கும். சிறிய குழந்தையைச் சரியாகப் பராமரிக்க அன் னையையோ, பாட்டியையோ தவிர யாரால் முடியும் ? ஆனால் என்ன செய்வது? பாலூட்டாமல் அன்னையும், குடிக்காமல் குழந்தையும் உடல், மன நலம் பாதிக்கப்படுகின்றனர்.

நிறுவனங்கள் நீங்கள் வேலையை விட்டு நீங்கள் நிற்கப் போவதில்லை எனத் தெரிந்தால் அவ்வளவு தான். ஒரு அடிமை போல உங்களை நடத்த ஆரம்பித்துவிடுகின்றன. பதவி உயர்வு, சம்பள உயர்வு எல்லாவற்றையும் மறந்து விட வேண்டியது தான். கிடைக்கும் சம்பளமாவது கிடைக்கட்டும் என்ற மன நிலைக்குப் பெண்களைத் தள்ளிவிட்டு நிறுவனங்கள் அமைதியாய் இருந்து விடுகின்றன.

இத்தனை சவால்களுக்கு மத்தியில் வாழும் பெண்களை சீண்டிப் பார்ப்பதற்கென்றே பிறப்பெடுத்தது போல் பலர் உண்டு. வெளியூர் பயணங்கள் போன்றவையெல்லாம் தனியே குழந்தையைக் கவனிக்கும் பெண்களால் நினைத்துக் கூட பார்க்க முடிவதில்லை. இதனால் மற்றவர்களை விட அதிக திறமை இருந்தாலும் கூட வேலையில் பிரகாசிக்க முடியாமல் போய்விடுகிறது. பெரும்பான்மையான இலட்சியங்களும், கனவுகளும் முடங்கி விடுகின்றன. இதனால் இத்தகைய அன்னையரை வேலையில் திருப்தியின்மையே பெரும்பாலும் ஆட்டிப் படைக்கிறது.

கூட்டுக் குடும்பமாக இல்லாமல் தன்னந்தனியாய் தாயிடம் குழந்தை வளரும்போது வேறு பல சிக்கல்களும் வந்து சேர்கின்றன. மன அழுத்தமும், தன்னம்பிக்கைக் குறைபாடும் குழந்தைகளிடம் வர இது காரணமாகி விடுகிறது. இத்தகைய சிறுவர்கள் பாடசாலைப் படிப்பை பாதியில் நிறுத்துவதோ, தோல்விகளை அதிகமாய் சந்திப்பதோ வழமையானது என்கிறது அமெரிக்க ஆய்வு ஒன்று. வீட்டு வேலை, அலுவலக வேலை, கூடுதல் பொறுப்




புணர்வு, ஆதரவு இன்மை இவையெல்லாம் அன்னையரைப் பீடிக்கும் சிக்கல்களில் சில என் கிறது அந்த ஆய்வு.

அலுவலக நேரத்தில் வீட்டின் தேவைகள் நினைவில் புரள்வதும், வீட்டு நேரத்தில் அலுவலகப் பயம் வருவதும் என இந்தத் தனிமைப் பெண்களின் மன அழுத்தம் அளவிட முடியாதது என்கிறது இன் னொரு ஆய்வு.

இப்படியெல்லாம் கஷ்டத்தில் அல்லாடும் பெண்களுக்கு சமூகம் கை கொடுக்கிறதா என்றால் அதுவும் இல்லை. அவர்களுக்கு மரியாதையும், பாதுகாப்பும், அங்கீகாரங்களும் மற்றவர்களை விட குறைவாகவே இருக்கிறது.

பெண்களால் குழந்தைகளைத் தனியே வளர்க்க முடியாது என்பதெல்லாம் பொய் என்கிறது அமெரிக்காவின் ஒஹாயோ பல்கலைக்கழக ஆய்வு. தனியே வாழ்க்கையை நடத்தும் பெண்களாலும் குழந்தைகளை வெற்றிகரமான வாழ்க்கைக்குள் அழைத்துச் செல்லமுடியும் என அடித்துச் சொல்கிறது இது. ஆனால் அதற்காக அவள் எதிர் கொள்ள வேண்டிய பிரச்சினைகள் தான் எத்தனை எத்தனை?

அலுவலக மன அழுத்தங்களைப் பகிர்ந்து கொள்ள வீட்டில் ஆள் இல்லாதது, அந்த அழுத்தங்களைக் குழந்தையிடம் காட்டாமல் இயல்பாய் இருப்பது, பொறுமையுடன் அனைத்தையும் எதிர் கொள்ள வேண்டியிருப்பது, நம்பிக்கையுடனும் எச்சரிக்கையுடனும் அனைத்தையும் எதிர்கொள்வது எனத் தனியே வாழும் அன்னையரின் ஒற்றை வாழ்க்கை ஓராயிரம் வித்தியாசமான பாத்திரங்களால் நிரம்பி வழிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு தடவை முல்லா வியாபார விடயமாக வெளியூர் சென்றிருந்தார். வியாபார அலுவல்கள் முடிந்த பின்னர் அன்று இரவுப் பொழுதைக் கழிப்பதற்காக ஒரு விடுதியில் தங்கினார். மிகவும் சாதாரணமாக உடையணிந்திருந்த முல்லாவை விடுதி வேலைக்காரர்கள் கொஞ்சமும் மதிக்கவில்லை. சரியானபடி உபசரிக்கவில்லை. இரவு திடீரென அவருக்குத்தண்ணீர்த்தாகம் எடுத்தது. வேலைக்காரர்களைக்

# முல்லா அணைத்த நெருப்பு

கூப்பிட்டு தனக்குக் குடிக்கத் தண்ணீர் வேண்டும் என்று கேட்டார். வேலைக்காரர்களோ அதற்குக் கொஞ்சமும் செவிசாய்க்காமல் கும்பலாக அமர்ந்து கதை பேசிக் கொண்டிருந்தனர். முல்லாவுக்கோ நாவறட்சி அதிகமாக இருந்தது. என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தார். அவருக்கு யோசனையொன்று தோன்றியது. திடீரென அவர் நெருப்பு, நெருப்பு, நெருப்பு பற்றிக் கொண்டு விட்டது எனக் கூக்குரல் போட்டார். வேலைக்காரர்கள் பதறியடித்துக் கொண்டு ஆளுக்கு ஒரு குடத்தில் தண்ணீர் எடுத்துக் கொண்டு ஓடி வந்தார்கள். முல்லாவைப் பார்த்து எங்கே தீப்பற்றிக் கொண்டது? என்று பரபரப்புடன் கேட்டார்கள். முல்லா ஒரு குவளையை எடுத்து அவர்கள் கொண்டு வந்திருந்த குடம் ஒன்றிலிருந்து நீரை எடுத்து வயிறாரக் குடித்தார். அவர் தாகம் அடங்கியது. நெருப்புப் பற்றிக் கொண்டதாகச் சொன்னீரே எங்கே? என்று வேலைக்காரர்கள் கேட்டார்கள். நெருப்பு எனது வயிற்றில்தான் பற்றிக் கொண்டு எரிந்தது. இப்போது தண்ணீர் விட்டு அணைத்து விட்டேன் என்று கூறிவிட்டுச் சிரித்தார் முல்லா.




## பொதுஅறிவுத் தகவல்கள்!

- வினிகரில் அசிற்றிக் அமிலம்உள்ளது.
- சிங்கப்பூரின் முன்னைய பெயர் டெமாஸெக்.
- சீனர்கள் தான் சரியான நெல் சாகுபடி முறையை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்கள்.
- முதுகெலும்புடன் தோன்றிய முதல் உயிரினம் மீன்.
- குஜராத் மாநிலத்தின் புகழ்பெற்ற நடனம் தாண்டியா.
- இன்சுலின், கணையத்தில் சுரக்கிறது.
- பெரு நாட்டின் தலைநகரத்தின் பெயர் லிமா.
- முந்திரி உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு இந்தியா.
- சுமத்ரா தீவில் மலரும் ராப்லி சியா ஆர்னல்டை என்ற பூத்தான், உலகிலேயே மிகப்பெரிய பூவாகும்.
- மாலைதீவில் விளையும்லொடாய் சியா என்ற இரட்டைப் பனங் கொட்டை தான், உலகிலேயே மிகப்பெரிய விதை யாகும்.

## பூநாரை



வளைந்த அலகும் இளஞ்சிவப்பு நிற உடலும் கொண்ட கரைப் பறவை இது. உப்புத்தன்மை அதிகமுள்ள ஏரிகளில் கடும் வெப்பத்தையும் தாங்கிப் பிழைக்கும். இவை கூடுகட்டி, முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. இவற்றின் கூடு சேற்று மண்ணைக் குவித்து ஏற்படுத்தப்படுகின்றது. இனச்சேர்க்கை முடிந்து, முட்டையிட்ட பின்னர் ஆண், பெண் பூநாரைகள் இரண்டுமே ஒன்று முட்டைகளை மாறி ஒன்று அடைகாக்கும். பல்லாயிரம் பூநாரைகள் ஒன்றாகக் கூடி இருப்பது இவற்றின் தனித்தன்மை. இதுவே இவற்றுக்கு பாதுகாப்பும் அளிக்கின்றது. நீண்ட கால்களையும் நீண்ட கழுத்தையும் நீட்டியபடி பூநாரைகள் கூட்டம் கூட்டமாகப் பறந்து செல்வது ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும். கால்களால் சேற்றுநீரைக் கிளறியவுடன், வளைந்த அலகைக் கொண்டு நீரை அள்ளும் பூநாரை, அதன் அலகினுள் இருக்கும் வடிகட்டும் அமைப்பைக் கொண்டு தனது இரையை மட்டும் எடுத்துக்கொள்கிறது. பூநாரையின் உணவில் மிதவை உயிரிகள், முட்டைப்புழுக்கள், சிறு மீன்கள் ஆகியவை அடங்கும். பூநாரைகள் உண்ணும் கூனிறால் போன்ற ஒரு வகை கிரத்தேசிய உயிரினம் தான் இவற்றின் இளஞ்சிவப்பு நிறத்துக்கு காரணமாகும்.


## கல்லூரி வாழ்க்கை

வீட்டில் இருந்த காலத்தை விட
பள்ளி சென்ற காலமே என்
கண் முன்னே இன்று கண்ணீராய்
கரைந்தோடுகிறது

பள்ளிப் பையை எடுத்து நேரமாகியதால்
பறந்தோடியது பழகி விட்டது ஆனால்
கல்லூரி முடித்ததும் கலங்கியது என்
கண் விழிகள், காரணம் அறியாததால்

போகும் நாள்களை எண்ணி எண்ணித்
தவித்த கைகளை இன்று
எறியத் தோன்றுது என் மனதிலே
ஏங்குகிறேன் மறு ஜென்மத்திற்கு
என் கல்லூரி ஓரமாய்...........

பா.ஜக்சாயினி
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி





# நல்ல
## நட்புக்கான அம்சங்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

**நீங்கள் பாதை தவறினால் அவர்கள் கலங்குவார்கள்**

உங்களது நல்ல நண்பன் நீங்கள் விருப்பப்பட்ட செயலில் பாதை தவறும் போதோ அல்லது உங்கள் கவனம் சிதறும் போதோ கலங்கக் கூடியவர்களாக இருப்பார்கள். அவர்கள் உங்களுக்கு ஒருபோதும் இல்லை என்று சொல்லமாட்டார்கள். நீங்கள் பிரச்சினையிலோ அல்லது உதவி தேவைப்படும் சூழலிலோ இருந்தால், உங்கள் நல்ல நண்பன் உங்களுக்கு உதவமாட்டேன் என்று சொல்லமாட்டார் என்பது உங்களுக்கு நன்றாகவே தெரியும். இறுதியில் பிரச்சினை சிறியதோ அல்லது பெரியதோ, அவர்கள் உங்களுடன் நிச்சயம் இருப்பார்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும்.

**பணக் கஷ்டமா?**

நல்ல நட்பின் இன்னொரு அருமையான அம்சம், ஒருமுறை அல்ல எத்தனை முறை நிதி நெருக்கடி ஏற்பட்டாலும் அதைச் சரிக் கட்ட நீங்கள் [illegible]

**உங்களின் திறமையை வெளிப்படுத்த உதவும் நல்ல நட்பு**

நல்ல மனிதர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம் என்பார்கள். அதில் ஒரு நல்ல நண்பனும் அடக்கம். நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவர்கள் உங்களின் நல்ல குணங்களையும், திறமையையும் வெளி கொணர்வார்கள் என்பதில் சந்தேக மில்லை.

**உங்களை எடைபோட முயற்சிக்க மாட்டார்கள்**

நல்ல நண்பர்கள் எப்போதும் உங்களை எடைபோட முயலமாட்டார்கள். உங்கள் வாழ்க்கையில் சில பேரிடம் மட்டுமே நீங்கள் இந்த அம்சத்தைக் காண முடியும். கண்டிப்பாக உங்கள் நண்பன் அதில் ஒருவராக இருப்பார்.

நீங்கள் சொல்வது அத்தனையையும் காது கொடுத்துக் கேட்கத் தயாராக இருப்பார்கள். நீங்கள் சொல்வது எவ்வளவு கொடுமையான, முற்றிலும் பயனற்ற விஷயமாக இருந்தாலும் சரி, உங்கள்நல்லநண்பன்அதைப் பொறுமையாகக் கேட்பார். என்ன? நல்ல நட்பு எப்படி இருக்க வேண் டும் என்பதைத் தெரிந்து கொண்டீர்களா? பிறகென்ன கூடா நட்பு கேடாய் முடியும் என்பதையும் மனதில் கொண்டு நல்ல நண்பர்களை இனம் காணுங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு.கவுக்குள் வலுக்கிறது மஹிந்தவுக்கு ஆதரவு

## பெரும் சிக்கலில் மைத்திரி

கொழும்பு, ஜூன் 20
ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணியின் சார்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராகக் களமிறக்க முடியாது என அதன் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால திட்டவட்டமாக அறிவித்த பின்னரும்கூட, மஹிந்த வேண்டும்" என மேற்படி கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங் காளிக் கட்சிகள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவதால் இது விடயத்தில் ஜனா திபதிக்குப் பெரும் நெருக்கடி ஏற் பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரமுகர்களை கடந்த செவ்வாயன்று சந்தித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடினார். இதன்போது, மஹிந்தவை பிரதமர் வேட்பாளராகக் களமிறக்கவேண்டும் என சு.கவிலுள்ள மஹிந்தவின் விசுவாசிகள் வலியுறுத்தினர். இதனை ஏற்பதற்கு ஜனாதிபதி மறுத்துவிட்டார்.

இதனையடுத்து மைத்திரியையும், மஹிந்தவையும் ஐக்கியப்படுத்துவதற்காக அறுவரடங்கிய குழுவொன்று அமைக்கப்பட்டது. எம்.பிக்களான சுசில் பிரேமஜயந்த, அநுர பிரியதர்ஜன யாப்பா, ஜோன் செனவிரத்ன, குமார் வெல்கம, டிலான் பெரேரா, டி.பி.ஏக்கநாயக்க ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

இதில் குமார் வெல்கம, டி.பி.ஏக்கநாயக்க, டிலான் பெரேரா ஆகியோர் மஹிந்தவை பிரதமர் வேட்பாளராக்க வேண்டும் எனப் பகிரங்கமாக வலியுறுத்தி வருபவர்களாவர். அத்துடன், சுசில் பிரேமஜயந்தவும், அநுர பிரியதர்ஜஜஷன யாப்பாவும் மஹிந்த சார்பு போக்கையே கடைப்பிடித்து வருகின்றனர். எனவே, இக்குழு நியமனத்துக்கு சு.கவிலுள்ள சிலர் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவராகச் செயற்படும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உறுதியான முடிவை மீறியும், மஹிந்தவை பிரதமர் வேட்பாளராக்க வேண்டும் என மேற்படி கூட்டுக்குள் கருத்து வலுத்துவருவதானது ஜனாதிபதிக்குச் சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில், கொழும்பில் நேற்று முன் தினம் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாடுகளின்போதும் மஹிந்தவுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பப்பட்டுள்ளது. மஹிந்த ஆதரவு அணி உறுப்பினர்களால் அபயராம விகாரையில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டின்போது, மஹிந்ததான் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யின் பிரதமர் வேட்பாளராக வேண்டும் என இடித்துரைக்கப்பட்டுள்ளது.

அதேபோல் என்.எம். பெரேரா மத்திய நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலும் மஹிந்தவையே பிரதமர் வேட்பாளராக நிறுத்தவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. இதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., ஜனநாயக மக்கள் காங்கிரஸ் ஆகியனவும் கலந்துகொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின்போது, முன்னாள் ஜனாதிபதியை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு அனுமதிக்கப் போவதில்லை என ஜனாதிபதி அறிவித்துவிட்டார் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் முக்கிய கட்சிகள் மஹிந்த பக்கம் நிற்பதாலும், சு.கவில் போட்டியிடுவதற்கு மஹிந்தவுக்கு வாய்ப்பு வழங்கப்படாத நிலை ஏற்பட்டுள்ளதாலும், தென்னிலங்கை அரசியல் களத்தில் விரைவில் மூன்றாம் அரசியல் கூட்டணியொன்று அமையும் என எதிர்வு கூறப்படுகிறது. இதற்கான சாத்தியக் கூறுகள் பிரகாசமாகவே தென்படு கின்றன.

இவ்வாறு அமையும் கூட்ட ணிக்கு மஹிந்த தலைமை தாங்கக்கூடிய சந்தர்ப்பம் அதிகமாகவே இருக்கிறது. தனது மகனான நாமல் எம்.பியின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு, மாற்று அணியில் மஹிந்த களமிறங்கமாட்டார் என சிலர் சுட்டிக்காட்டுகின்றனர். எனினும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் உட்பட மஹிந்தவுக்கு நெருக்கமான பலரும் அவர் மூன்றாம் கூட்டணியில் பிரதமர் வேட்பாளராகக் களமிறங்குவதை விரும்புகின்றனர்.

மஹிந்த தலைமையில் மூன்றாம் கூட்டணியயான்று உதயமாகினால் அது சுதந்திரக் கட்சியின் வாக்குவங்கியில் தாக்கத்தைச் செலுத்தக்கூடும் என்பதால், இது விடயம் பற்றி ஜனாதிபதி ஆழமாகச் சிந்தித்து வருவதாகவும், நிலைமையைச் சமாளிப்பதற்காக சுதந் திரக் கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்களுடன் அவர் பேச்சு நடத்திவருவதாகவும் அரசியல் வட்டாரங்களிலிருந்து அறிய முடிகிறது.

சமல் ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராகக் களமிறக்கினால் மஹிந்தவை கட்டுப்படுத்த முடியும் என சு.கவில் நடுநிலைப்போக்கைக் கடைப்பிடிக்கும் ஒருசில உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட யோசனையையும் ஜனாதிபதி நிராகரித்துள்ளார். ராஜபக்ஷ குடும்பத்தில் உறுப்பினர் ஒருவர் பிரதமர் வேட்பாளராகக் களமிறங்குவதை அவர் விரும்பவில்லை என்றே கூறப்படுகிறது. இவ்வாறானதொரு சூழலாலேயே ஜனாதிபதிக்கு தற்போது பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவை ஒருபுறமிருக்க, 20ஆவது திருத்தச்சட்டத்தை அனைத்துத் தரப்பினரின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றல், பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடித்தல் உள்ளிட்ட விவகாரத்தாலும் ஜனாதிபதிக்கு அரசியல் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. எது எப்படியிருந்தபோதிலும், மஹிந்தவை பிரதமர் வேட்பாளராகக் களமிறக்குவதற்கு ஜனாதிபதி அனுமதிக்கமாட்டார் என்றே அரசியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (த)

## பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படாது

### போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 20
வருடாந்த பஸ் கட்டணத் திருத்தம் ஒவ்வொரு ஜூலை மாதமும் மேற்கொள்ளப்படும். இந்நிலையில், எதிர்வரும் ஜூலை மாதம் பஸ் கட்டணங்களை அதிகரிக்காமல் இருப்பதற்கு பஸ் உரிமையாளர்கள் ஒத்துழைத்துள்ளதாக உள்நாட்டு போக்குவரத்து அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

கடந்த வருடத்தை விட இவ்வருடம் பஸ் சேவையை நடத்துவதற்கான செலவு 0.03 சதவீதத்தின் அடிப்படையில் குறைந்துள்ளமையினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஒரு கிலோ மீற்றர் சேவையை நடத்த ரூபா 89.97 இப்பொழுது, செலவாகின்றது. கடந்த வருடம் பஸ் கட்டணங்கள் அதிகரித்த போது இந்தசெலவு ரூபா 89.99 ஆக இருந்தது.

எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்படவில்லை. அத்துடன், குத்தகை வட்டி, திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்புச் செலவுகளும் குறைந்துள்ளன. எனவே, பஸ் கட்டணங்களைத் தற்போது அதிகரிக்க வேண்டிய தேவை இல்லை எனவும் அவர் கூறினார்.

பஸ் உரிமையாளர் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகப் போக்குவரத்து அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார மேலும் தெரிவித்தார். (த)

### அரசு

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, புலம்பெயர்ந்தோரைச் சந்தித்துள்ளார். புலம்பெயர் தமிழர்களுடன் அரசு நடத்திய பேச்சு சிறந்த நகர்வாகும். விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் வெளிநாடுகளில் பல அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன.

அரச தரப்பு இவற்றுடன் பேச்சு நடத்தியுள்ளது. இவற்றை நாம் வெளியிலிருந்து கவனித்து வருகிறோம். நாம் இந்த பேச்சுக்களில் பங்கேற்கவில்லை.

இதேவேளை, புதிய அரசு பதவிக்கு வந்த பின்னர், எந்த முகாமும் அகற்றப்படவில்லை. இராணுவம் பயன்படுத்திய ஆயிரம் ஏக்கர் காணிகள் மக்களிடம் கையளிக்கப்பட்டதே இந்த அரசில் நடந்தது, என்றும் அவர் தெரிவித்தார். (த-5)

### எனக்குப்

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் நேற்று மதியம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
அதிகாரங்கள் மூன்று விதமாகப் பகிரப்பட்டுள்ளது. மத்திக்குரிய அதிகாரங்கள், மாகாணங்களுக்கு உரிய அதிகாரங்கள், இரண்டும் இணைந்த அதிகாரங்கள் என்று மூன்றாகப் பகிரப்பட்டுள்ளன. இதில் மத்திக்கு உரிய அதிகாரங்களின் கீழ் உள்ள விடயங்களுக்கு முன்மொழிவுகளை நாடாளுமன்ற உறுப்பினர்களே சமர்ப்பிக்க முடியும்.

மாகாணத்துக்கு உரித்தான விடயங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்மொழிவைச் சமர்ப்பித்தாலும், அந்த நிதி மாகாண சபைக்குத் தான் நேரடியாக வழங்கப்படும்.

மேலும், முதலமைச்சர் எழுதியுள்ள பதில் கடிதத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்ததைப் போன்று ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது நிலைப்பாடுகளைத் தெரியப்படுத்தப்படுத்த வேண்டும் என்று கேட்டிருந்தார். அதனடிப்படையில், நான் எந்தப் பணத்தையும் பெற்றுக் கொள்ளவில்லை. அதேபோன்று கூட்டமைப்பில் வேறு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவ்வாறு வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை – என்றார். (த-5)

### மின்னல்

நீதிமன்றில் முற்படுத்துமாறு பருத்தித்துறை நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பான உத்தரவு நீதிபதி கணேசராஜாவால் வடமராட்சிக்குப் பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர், நெல்லியடி, பருத்தித்துறை பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு தொடர்பான புகைப்படங்கள் பொறுப்பு வாய்ந்த அதிகாரியினால் மன்றுக்கு அனுப்பப்பட்ட நிலையிலேயே இந்த உத்தரவு நீதிமன்றால் விடுக்கப்பட்டுள்ளது

இந்தக் குழு காலை 7 மணி தொடக்கம் 7.30 மணி வரையும், பிற்பகல் 3 மணி தொடக்கம் 3.30 வரை யும் சந்தியில் ஒன்று கூடி வீதியால் செல்லும் பெண்களுடன் சேட்டை விடுவதாக மன்றுக்கு புகைப்பட ஆதாரங்களுடன் பொறுப்பு வாய்ந்த அதிகாரியினால் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டை அடுத்தே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.
(த-109-173)

### தேர்தலில்

அத்துடன், நாடாளுமன்றத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது, அதற்கு உறுப்பினர்களின் பங்களிப்பு எவ்வாறு அமையவேண்டும், இது விடயத்தில் தொகுதி அமைப்பாளர்களின் கடப்பாடு, பரப்புரை வியூகம் உட்பட முக்கிய சில விடயங்கள் சம்பந்தமாகச் செயற்குழுக் கூட்டத்தில் விரிவாகக் கலந்துரை யாடப்பட்டுள்ளது.

அத்துடன் பொதுத் தேர்தலுக்கு முன்னர் கட்சியின் மாநாட்டை பெருமெடுப்புடன் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டதுடன், வேட்புமனு குழுவுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரம் கட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, உடனடியாக நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு மீளவும் வலியுறுத்தியுள்ளது. ஐ.தே.க. உறுப்பினர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை யைத் தோற்கடிப்பது பற்றியும் நேற்றைய செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் இருக்கும்போது, அது பிரதான கட்சியாக இருந்தபோதிலும், கூட்டணி அமைத்து தனது கட்சியின் சின்னத்தில் அல்லாது பொதுச் சின்னமான வெற்றிலை சின்னத்திலேயே அது தேர்தல்களை எதிர்கொண்டுவந்தது.

எனவே, தற்போதைய ஆட்சியில் பிரதான பங்கை வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியும் இம்முறை கூட்டணி அமைத்து ஜனாதிபதித் தேர்தலில்போல் அன்னம் சின்னத்தில் களமிறங்கும் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்நிலையிலேயே மேற்படி சர்ச்சைக்கு ஐ.தே.க. நேற்று முற்றுப்புள்ளி வைத் துள்ளது.

அதாவது, தனது கட்சியின் சின்னமான யானை சின்னத்தில் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவோடு அது களமிறங்க வுள்ளது.

தனது கட்சியுடன் இணைந்து போட்டியிட விரும்பும் கட்சிகளை அது இணைத்துக் கொள்ளவுள்ளது. ஜனநாயக மக்கள் முன்னணி உள்ளிட்ட கட்சிகள் ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டியலின் கீழேயே நாடாளு மன்றத் தேர்தலை எதிர் கொள்ளவுள்ளன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், மலையக மக் கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம் ஆகிய கட்சிகளும் ஐ.தே.க. பட்டியலின்கீழ் களமிறங்கவுள்ளன.

2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கூட்டணி அமைத்து களமிறங்கிய ஐக்கிய தேசியக் கட்சி, அதன்பின்னர் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தனித்துக் களமிறங்கியது குறிப்பிடத்தக்கது. (த-சி)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 18 . 12 . 1951



விண்ணில் 01 . 07 . 2014

திருமதி
பூமணிசெல்லப்பா
திதி: சதுர்த்தி

தாயே நீ மறைந்து தெய்வமானாய்
அம்மா எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எங்கள்
நெஞ்சை விட்டு எப்போதும் நீங்காது

"சிங்ககிரி", அலவோடை வீதி
இணுவில் மேற்கு
குடும்பத்தினர்.

புதுக்குடியிருப்பு கோம்பாவில் நாகதம்பிரான் ஆலய கட்டட நிதி வளர்ச்சிக்காக நடத்தப்பட்ட அதிஸ்டலாபச்சீட்டிழுப்பில் பரிசு பெறுவோர் விபரம்.

| பரிசு | பெயர் | முகவரி | சீட்டை இல |
|---|---|---|---|
| முதலாம் பரிசு | ஒளிக்குமரன் பமாடம் | புதுக்குடியிருப்பு | 884 |
| 2 ஆம் பரிசு | சி.கஸ்சா | 4 ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு | 157 |
| 3 ஆம் பரிசு | ஞா.சிரிக்ஷன் | 7ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு | 2314 |
| 4 ஆம் பரிசு | மோகனராசா-புகழ் | சிவநகர், புதுக்குடியிருப்பு | 2883 |
| 5 ஆம் பரிசு | சி.முரளி | வள்ளிபுனம் | 974 |
| 6 ஆம் பரிசு | ச.செல்வரத்தினம் | 4ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு | 101 |
| 7 ஆம் பரிசு | ச.சாலினி | மு/ சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை | 1274 |
| 8 ஆம் பரிசு | பா.திருசிகா | தொ.பே.இல 077 510 2757 | 1025 |
| 9 ஆம் பரிசு | சி.அரங்கன் | புதுக்குடியிருப்பு | 2337 |
| 10 ஆம் பரிசு | கல்பனா | இரணைப்பாலை | 928 |
| 11 ஆம் பரிசு | தியாகராசா | தொ.பே.இல 077 556 5198 | 734 |
| 12 ஆம் பரிசு | செ.கஜந்தன் | - | 2991 |
| 13 ஆம் பரிசு | சி.குசாந்தன் | தீப்பிலி, புதுக்குடியிருப்பு | 459 |

பரிசுக்குரியவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

ஆலய பரிபாலன சபை
கோம்பாவில், நாகதம்பிரான் ஆலயம், புதுக்குடியிருப்பு.

(c 16333)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு: ★ 14 . 05 . 1997

இறப்பு: ★ 19 . 06 . 2015

**சிவராசா தனுசியன்**

கல்வளை சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசா தனுசியன் நேற்று (19.06.2015) வெள்ளிக்கிழமை அகால மரணம் அடைந்தார்.

அன்னார் சிவராசா-யோகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும், சிந்துயா, சிந்துயன், தனுசியா ஆகியோரின் அன்புச் சகோதரனும் S.M. அன்வர், பாலச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.06.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது வீட்டில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சண்டிலிப்பாய் சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்வளை, சண்டிலிப்பாய்,
மகேஸ்வரன் - 0779835705 (61238)(19.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## தாமோதரம்பிள்ளை முத்துக்குமாரு



வட்டு மேற்கு வட்டுக்கோட் டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை முத்துக்குமாரு 18.06.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சறோஜினி தேவியின் அன்பு கணவரும், சிசுபாலன், குபேரன், சிறீதரன், திருக்குமரன், காலஞ்சென்றவர்களான ஐங்கரன், சிவபாலன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கீதாரமணி, நிரஞ்சனா, ஜேந்தா, வினோதினி, தயாளினி ஆகியோரின் அன்பு மாமனாரும் தாமோதினி, கிசாந், சகானா, விதுஷன், அபிஷா, வைஷ்ணவி, அட்சயா, ஜிவிஷன், கிரிஷன், கவிஷனா, திருவரங்கன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.06.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திரர் கோவிலடி
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை. (c 16330)

தகவல் :-
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

## சுப்பையா இராமையா பத்தர்



யாழ். சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் 98, சங்கமித்தை மாவத்தை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா இராமையா பத்தர் கடந்த 17.06.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா பத்தர்- அஞ்சம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான லெட்சுமண ஆச்சாரி- முல்லையம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலவல்லியின் பாசமிகு கணவரும், அமுதா, விஜயா, புனிதா, சிவகுமார், நந்தகுமார், கலா, உதயகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவானந்தன், துரைரட்ணம், முருகானந்தன், மாலினி, கலைவாணி, ஸ்ரீதரன், வசந்தி ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற துரைச்சாமி பத்தர் மற்றும் கந்தையா பத்தர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அன்னலட்சுமி, காலஞ்சென்ற பக்கீர்சாமி ஆச்சாரி காலஞ்சென்ற வேணுகோபால் ஆச்சாரி மற்றும் அம்புஜம், கெங்காதரன் ஆச்சாரி, இராஜேஸ்வரி, ஜெகநாதன் ஆச்சாரி, மகேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.06.2015) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

87, சிவன் வடக்கு வீதி,
யாழ்ப்பாணம். 0777113091 (61237)(10.6)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

# சிறுமிகள் துஷ்பிரயோகம் கைதானார் குடும்பஸ்தர்

தெல்லிப்பளை, ஜூன் 20

தெல்லிப்பளை கிழக்கு சூத்தாம்பிளம் பகுதியில் சகோதரிகளான 14 வயது, 13 வயது சிறுமிகள் இருவரைத் துஷ்பிரயோகம் செய்ததாகக் குற்றம் சாட்டிக் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் குறித்துத் தெரிய வருவதாவது:-

தாய்,தந்தையுடன் இந்த இரண்டு சிறுமிகளும் தமது திருமணமான மூத்த சகோதரியின் வீட்டில் வசித்து வந்துள்ளனர். இதன்போது சிறுமிகள் இருவரையும் அவர்களது சகோதரியின் கணவர் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகின்றது. இது 3 மாதங்களாக நடைபெற்றுள்ளது.

இதனால் 14 வயதுச் சிறுமி 2 மாதமாகப் பாடசாலை செல்லவில்லை. 13 வயதுச் சிறுமி பாடசாலை சென்றுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக அவர்கள் தாய்க்கு தெரியப்படுத்தியபோது, தாய் அதனைத் தனது மூத்த மகளிடம் தெரிவித்துவிட்டு இரு பிள்ளைகளுடன் வேறு வீடுக்குச் சென்று விட்டார்.

இந்த நேரத்தில் தமது சகோதரிக்கு குழந்தை பிறந்தமையால் இரண்டு சிறுமிகளும் அங்கு சென்று வந்துள்ளனர். இதன்போதும் சகோதரியின் கணவர் அவர்களைத் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகின்றது.

14 வயதுச் சிறுமி பாடசாலை செல்லாதமை குறித்து ஆசிரியர்கள் விசாரித்தபோது 13 வயதுச் சிறுமி ஆசிரியருக்கு எல்லா விடயத்தையும் கூறியுள்ளார். ஆசிரியர் இது குறித்து அதிபர் மூலம் தெல்லிப்பளைப் பொலிஸாருக்கும், கிராம அலுவலருக்கும் தெரியப்படுத்தினார்.

இதனையடுத்துப் பொலிஸார் சந்தேக நபரை நேற்றுக் கைது செய்தனர். அத்துடன் இரண்டு சிறுமிகளும் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (த-36)

## 16 வயது மாணவன் கொலை: பொலிஸார் மூவருக்கு சிறை

கொழும்பு, ஜூன் 20

1991ஆம் ஆண்டு 16 வயது மாணவன் ஒருவனைக் கொலை செய்தனர் என்று குற்றச்சாட்டப்பட்ட வழக்கில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட பொலிஸார் மூவருக்குப் பாணந்துறை மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இஸட் ரசீம், 8 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்ததுடன் தலா 25 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்துள்ளார்.

இங்கிரிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்த ரொஷான் டி சில்வா மற்றும் கான்ஸ்டபிள்களான முதியன்சலாகே ஜயசேன மற்றும் சிங்கள விருதலாகனே தீப்தி சாந்த ஆகிய இருவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (த)

# தேசிய அரசு அமைவதையே விரும்புகிறார்கள் தமிழர்கள்

## கூறுகிறது ட்ரான்ஸ்பரன்சி இன்ரநஷனல்

கொழும்பு, ஜூன் 20

தற்போது நாடாளுமன்றம் கலைக்கப்படுவதை, வடக்கு – கிழக்கு மாகாணங்களிலுள்ள 60 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்கள் விரும்பவில்லை. அத்துடன் நாடாளுமன்றத்தில் தேசிய அரசு அமைவதையே அவர்கள் விரும்புகின்றனர். இவ்வாறு நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை வெளியிட்டுள்ளது ட்ரான்ஸ்பரன்சி இன்ரநசனல் அமைப்பு.

குறித்த அமைப்பினால், 18 வயதிற்கு மேற்பட்ட பல்வேறு தரப்பினரிடமிருந்து கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன. அவ்வாறு பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் தனது ஆய்வு முடிவை, ட்ரான்ஸ்பரன்சி இன்ரநசனல் அமைப்பு வெளியிட்டுள்ளது.

ஒட்டு மொத்த இலங்கையில், 49 சத வீதமான மக்கள் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்த வேண்டும் என்று கூறியுள்ளனர். 26 வீதமான மக்கள் எல்லா கட்சிகளும் இணைந்த தேசிய அரசு அமைக்கப்பட வேண்டும் என்றும், 25 வீதமான மக்கள், நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு முன்னர் 20 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்றத்தை உடனடியாக கலைக்க வேண்டும் என்பதற்கு சப்ரகமுவ மாகாணத்தில் ஆக கூடிய ஆதரவு காணப்படுகிறது. அங்கு 82 வீதமானோர் நாடாளுமன்றம் உடனடியாக கலைக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளனர். தென் மாகாணத்தில் 69 வீதமானோரும், வ[illegible] மத்திய மற்றும் மத்திய மாகாணங்களில் 56 வீதமானோரும், மேல் மாகாணத்தில் 54 வீதமானோரும், வடமேல் மாகாணத்தில் 53 வீதமானோரும், ஊவா மாகாணத்தில் 34 வீதமானோரும் உடனடியாக நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் ஆகக் குறைந்தளவாக 24 வீதமானோர் மட்டுமே நாடாளுமன்றக் கலைப்புக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். கிழக்கு மாகாணத்தில், 38 வீதமானோர் உடனடியாக நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளனர்.

அதேவேளை அனைத்துக் கட்சிகளையும் உள்ளடங்கிய தேசிய அரசை அமைக்க வேண்டும் என்று வடக்கு மாகாணத்திலேயே அதிகளவானோர் விருப்பம் வெளியிட்டுள்ளனர். இங்கு 46 வீதமானோர் தேசிய அரசு அமைக்க வேண்டும் என்று கூறியுள்ளனர்.

அதேவேளை, கிழக்கு, ஊவா, மத்திய மாகாணங்களில் தேசிய அரசு அமைக்க வேண்டும் என்று 31 வீதமானோர் கருத்து வெளியிட்டுள்ளனர். (த-5)

## மரண அறிவித்தல்



**திருமதி திலகரத்தினம் சீவரட்ணம்**

அரசடி வீதி, வடலியடைப்பு பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகரத்தினம் சீவரட்ணம் 18.06.2015 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா-கண்ணாம்பிகை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சீவரட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-கைராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற துரைரட்ணம் மற்றும் ஞானேஸ்வரி , இராஜேஸ்வரி, சுலோசனாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தேவறஞ்சினி, தில்லைக்குமார் (லண்டன்), பிறேமறஞ்சினி (ஜேர்மனி), கலாறஞ்சினி, வரதகுமார் (சுவிஸ்), சிவறஞ்சினி, திலகறஞ்சினி, செந்தில்குமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஸ்ரீதரன், றஞ்சினி, சுதாகரன், வரதவித்துவான், துளசிகா, உதயச்சந்திரன், கல்யாணி ஆகியோரின் மாமியும், தபோதினி, சஜீவன், சாம்பவி, அஜீபன், அர்ஜூன், விதுஷா, தரணிகா, அஜிதா, அஜந்தன், அஜானா, சுபாங்கன், சஞ்செயன் ஆகியோரின் பேர்த்தியும், கௌஷிகியின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.06.2015 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி, வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. (61233)(10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## மலசலக்கூடக் குழிக்குள் வீழ்ந்து நால்வர் உயிரிழப்பு

ரம்புக்கனை மீதெனிய பகுதியில் மலசலக் கூடக்குழிக்குள் வீழ்ந்து நால்வர் உயிரிழந் துள்ளனர்.

மலசலக்கூடக் குழிக்குள் நேற்று முற்பகல் வீழ்ந்த பெண்ணொருவரைக் காப்பாற்றுவதற்காக ஏனைய மூவரும் முயற்சித்த சந்தர்ப்பத்தில் விஷவாயுக் கசிவு ஏற்பட்டதால் அவர்களும் மயங்கி வீழ்ந்து மரணமடைந்துள்ளனர்.

நிருபமா ஹரினி குமாரி ( வயது- 34), சரத் காமினி எதிரிசிங்க (வயது-44), ஆனந்த பிரேமசிறி (வயது-38), சுனில் ஜயரத்ன (வயது-55) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியை நாம் சந்திக்கவேயில்லை

## ராஜிதவின் கருத்தை மறுக்கிறார் யாப்பா

கொழும்பு, ஜூன் 20
சிறிலங்கா சுதந்திரக் கட்சியினால் நியமிக்கப்பட்ட அறுவர் அடங்கிய குழு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இதுவரை சந்திக்கவில்லை என்று தெரிவித்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அநுர பிரியதர்ஷன யாப்பா, அமைச்சர் ராஜித சேனாரத்னவின் கருத்தை மறுத்துள்ளார்.

அத்துடன், சிறிலங்கா சுதந்திரக் கட்சியினால் நியமிக்கப்பட்ட குழு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இன்னும் சந்திக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியினால் நியமிக்கப்பட்ட அறுவர் அடங்கிய குழு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை முதன்முறையாக நேற்று வெள்ளிக்கிழமை சந்திப்பதற்கே திட்டமிட்டிருந்தது என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

அறுவர் அடங்கிய இந்தக் குழுவினர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, கடந்த புதன்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்தியதாகவும் அதன்போது, எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவைப் பிரதமர் வேட்பாளர் நிறுத்த வேண்டும். இல்லையேல் தேசியப் பட்டியல் ஊடாக மஹிந்தவை நாடாளுமன்ற உறுப்பினர் ஆக்கவேண்டும், சிறிலங்கா சுதந்திர கட்சியின் சார்பில் அவருக்கு வேட்பு மனு வழங்க வேண்டும் என்று கோரியதாவும், அந்தக் கோரிக்கையை முழுமையாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்துவிட்டார் என்றும் அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (த)

# சீனாவை சார்ந்திருப்பதை குறைக்கின்றது இலங்கை

கொழும்பு, ஜூன் 20
சீனாவை சார்ந்திருக்கும் வெளிநாட்டு கொள்கையை இலங்கை மதிப்பாய்வு செய்யவும் ஏனைய நாடுகளுடனான உறவுகளை மேலும் வளர்த்துக்கொள்ளவும் உள்ளதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெரிவித்தார்.

சீனா உட்பட சகல நாடுகளுடனும் உறவுகளை வலுப்படுத்தும் சம நிலையான இராஜதந்திரக் கொள்கைகளை இலங்கை முன்னெடுக்கவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்கு பயணம் செய்துள்ள அமைச்சர் மங்கள சமரவீர, என்எச்கே வேல்ட் நியூஸ்க்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

2009இல் இலங்கைக்கு உதவி வழங்குவதில் சீனா, ஜப்பானை முந்தியிருந்தது என அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த அரசின் கீழ் ஊழல்கள் அதிகம் காணப்பட்டமைக்குச் சீன உதவி வழிவகுத்தது.

கொழும்பு துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்தை இலங்கை நிறுத்தி வைத்து, அதனை மதிப்பாய்வு செய்து வருகின்றது. இந்தச் செயற்றிட்டம் சரியான செயன்முறைகளை கடைப்பிடித்ததா என்பது கேள்விக்குறியாகும் என அவர் கூறினார்.

இரண்டாம் உலகப் போரின் சாம்பலிலிருந்து ஜப்பான் புத்துயிர் பெற்று அபிவிருத்தியடைந்து, உலகின் சக்தி மிக்க நாடுகளில் ஒன்றாகியுள்ளது. ஜப்பானிடமிருந்து இலங்கை படிக்க வேண்டிய பல விடயங்கள் உள்ளன என அவர் கூறினார்.

இலங்கையின் உறுதியான நட்பு நாடாகவுள்ள ஜப்பான், இலங்கைக்கு மேலும் உதவிகளையும் வெளிநாட்டு நேரடி முதலீட்டையும் வழங்க வேண்டுமென அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார். (த)

# மைத்திரியுடன் சு.க குழு நேற்று சந்தித்துப் பேச்சு

கொழும்பு, ஜூன் 20
மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான மோதலை தீர்ப்பதற்காக நியமிக்கப்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட குழுவுக்கும், ஜனாதிபதி மைத்திரிக்கும் இடையில் நேற்று முதலாவது பேச்சு நடத்தப்பட்டது. ஜனாதிபதியுடனான பேச்சு வெற்றிகரமாக இடம்பெற்றது என குழுவின் தலைவர் ஜோன் செனவிரட்ன தெரிவித்தார்.

இதேவேளை, கட்சியை ஒற்றுமைப்படுத்தும் நடவடிக்கையின் அடுத்தகட்டமாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் விரைவில் பேச்சு நடத்தவும் இந்தக் குழு தீர்மானித்துள்ளது.

எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான ஜோன் செனவிரட்ன தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அநுர பிரியதர்ஷன யாப்பா, சு.கவின் ஊடகப் பேச்சாளர் டிலான் பெரேரா, குமார வெல்கம, டி.பீ.ஏக்கநாயக்க ஆகிய எம்.பிக்கள் இந்தப் பேச்சில் பங்கேற்றுள்ளனர்.

சுமார் 45 நிமிடங்கள் இடம் பெற்ற இந்தப் பேச்சு தொடர்பில் கருத்து வெளியிட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் டிலான் பெரேரா,

மிகவும் சிறந்ததொரு கலந்துரையாடல் இடம்பெற்றது. கட்சியை ஒன்றிணைத்து செயற்படுவதற்கு இந்தக் கலந் துரையாடலின் ஊடாக நல்ல ஆரம்பம் கிடைத்துள்ளது. அடுத்து வரும் நாள்களில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஏனைய பங்காளிக் கட்சிகளுடனும் பேச்சு நடத்தவுள்ளோம். இதனூடாக கட்சியை ஒன்றிணைக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்க்கின்றோம்.

எமது குழு முதன்முறையாக ஜனாதிபதியைச் சந்தித்துள்ளது. எமக்கு முன்னே சில சவால்கள் இருக்கின்றன. இதற்கு ஜனாதிபதியின் ஆலோசனை, வழிகாட்டல் முதலானவற்றை இன்றைய (நேற்று) சந்திப்பில் பெற்றுக்கொண்டோம் என்றார்.

**கேள்வி:** முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக நியமிக்கமுடியாது. வேட்புமனுவும் வழங்க முடியாது என அமைச்சர் ராஜித சேனாரத்ன வெளியிட்ட கருத்துத் தொடர்பில் ஜனாதிபதி என்ன கூறினார்?

**பதில்:** நாம் இன்றுதான் ஜனாதிபதியைச் சந்தித்தோம். அப்படியிருக்கையில் அமைச்சர் ராஜித எப்படி அவ்வாறானதொரு கருத்தைக் கூறமுடியும்? ராஜித ஒரு பொய்க்காரர் ஆகிவிட்டார் என்பது இதிலிருந்தே நன்றாகத் தெரிகின்றது" என்றார்.

இதேவேளை, அமைச்சர் ராஜிதவின் கருத்துத் தொடர்பில் வினவியபோது கருத்து வெளி யிட்ட இந்தக் குழுவின் தலைவர் டபிள்யூ.டி.ஜே.செனவிரத்ன,

நாம் இன்றுதான் ஜனாதிபதியைச் சந்தித்தோம். தாம் அவ்வாறானதொரு கருத்தை வெளியிடவில்லை என ஜனாதிபதி தெரிவித்தார். அமைச்சர் ராஜித பொய்க்காரர் என்பது இதிலிருந்து தெரிகின்றது" என்றார்.

இதேவேளை, ஜனாதிபதி யுடனான பேச்சு சுமுகமாக முடி வடைந்தது என்றும் தெரிவித்தார். (த)

# வெலே சுதாவிடம் பணம் வாங்கிய நடிகை உதயங்கி

போதைப்பொருள் கடத்தல் மன்னனான வெலே சுதாவிடம் திரைப்பட மற்றும் நாடக நடிகை உதயங்கி குலதுங்க பணம் பெற்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து நடிகை உதயங்கி குலதுங்கவின் வங்கிக் கணக்கை முடக்குமாறு கோரி கொழும்பு மேல் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் பிரதியைச் சமர்ப்பிக்குமாறு இரகசியப் பொலிஸாருக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தனது வங்கிக் கணக்கை முடக்கும் நீதிமன்ற உத்தரவை இரத்து செய்யுமாறு கோரி உதயங்கி குலதுங்க தாக்கல்செய்துள்ள மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரபல போதைப்பொருள் வர்த்தகர் வெலே சுதாவுடன் உதயங்கி பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பைப் பேணியதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

வெலே சுதாவின் தொலைபேசியை சோதனை செய்தபோது இந்தத் தகவல் வெளியானது என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

அதன்படி, உதயங்கியின் வங்கிக் கணக்கில் நான்கு தடவைகள் தலா ஒரு இலட்சம் என நான்கு இலட்சம் ரூபா வெலே சுதாவால் வைப்புச்செய்யப்பட்டுள்ளதாகவும் உதயங்கியின் பிறந்த தினத்திற்கு 50,000 ரூபா பரிசு வழங்கப்பட்டுள்ளதாகவும் இரகசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் உதயங்கி தனது சகோதரி ஒருவரின் வங்கிக் கணக்கில் 100 இலட்சம் ரூபா வைப்பிலிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், உதயங்கி சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத் தரணி இந்தக் குற்றச்சாட்டுகளை நிராகரித்ததுடன், உதயங்கியின் வங்கிக் கணக்கு முடக்க உத்தரவை இரத்து செய்யு மாறும் கோரிக்கை விடுத்தார். அதன்படி, வங்கிக் கணக்கை முடக்க மேல் நீதிமன்றம் பிறப் பித்த உத்தரவின் பிரதியைச் சமர்ப்பிக்குமாறு இரகசியப் பொலிஸாருக்கு உத்தரவிட்ட கொழும்பு நீதிவான் நீதிமன்றம், வழக்கை ஜூலை 3 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது. (த)

# தேசிய அடையாள அட்டைக்கான வயதெல்லை 15 ஆகக் குறைப்பு

கொழும்பு, ஜூன் 20
எதிர்வரும் காலங்களில் 15 வயது பூர்த்தியான அனைவருக்கும் தேசிய அடையாள அட்டையை வழங்குவதற்கு தீர் மானிக்கப்பட்டுள்ளது" என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க தகவல் வெளியிட்டுள்ளார்.

இதுவரை காலமும் 18 வயதைப் பூர்த்திசெய்தவர்களுக்கே தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டு வந்தது.

எனினும், இந்த நடைமுறையில் மாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அரசு அறிவித்துள்ளது.

இதற்கமைய 16 வயதைப் பூர்த்திசெய்யும் சகல இலங்கைப் பிரஜைகளும் தேசிய ஆட்பதிவுத் திணைக்களத்தில் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பம் செய்ய முடியும்.

அத்துடன் 18 வயதைப் பூர்த்திசெய்து தேசிய அடையாள அட்டையை வைத்திருக்கும் அனைவரையும் ஆட்பதிவுத் திணைக்களம் மீள் பதிவு செய்து தரவுப்பட்டியல் ஒன்றைப் பேணத் தீர்மானித்துள்ளது. (த)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**விற்பனைப் பிரதிநிதி தேவை**
பல்தேசிய நிறுவனம் ஒன்றுக்கு யாழ். மாவட்டத்திலுள்ள விற்பனை நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கு ஆள் தேவை.
தொடர்புகளுக்கு: 077 3000 299 (61226) (10.6.3)

**வேலையாள்கள் தேவை**
கட்டட நிர்மாணத்துறையில் அனுபவம் மிக்க மேசன், கூலியாள்கள் தேவை.
தொடர்பு : இல.54, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 7875
077 959 1223 (61212) (3,6,11)

**தொழில்நுட்ப உத்தியோகத்தர் தேவை**
கட்டட நிர்மாணத்துறையில் அனுபவம் உள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தேவை.
* கட்டட நிர்மாணத்துறையில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றி ஓய்வுபெற்றவரும் விரும்பத்தக்கது.
* சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு:
இல.54, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (61224) (10.6.3)
021 221 7875, 0779591223

**நேரக்கணிப்பாளர் தேவை**
நேரக்கணிப்பாளர் கடமைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. க.பொ.த சாதாரண தரத்திற்கு தோற்றிய 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் தங்கள் விண்ணப்பத்தை எதிர்வரும் 30.06.2015 இற்கு முன்னதாக காரியாலயத்திற்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.
அனுப்ப வேண்டிய முகவரி:-
யாழ் பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையம்,
இல.260/22, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(61231) தலைவர்.

**அலுவலக உதவியாளர் தேவை**
கட்டட நிர்மாணத்துறை சார்ந்த நிறுவனம் ஒன்றிற்கு அலுவலக உதவியாளர் (பெண்) தேவை.
தங்களுடைய சுயவிவரக்கோவையைக் கீழ்வரும் முகவரிக்கு (25.06.2015) இற்கு முன் அனுப்பி வைக்கவும்.
தொடர்பு : இல.54, கச்சேரி நல்லூர் வீதி. யாழ்ப்பாணம்.
T.P : 021 221 7875
077 959 1223 (61207) (3,6,11)

**ARE YOU LOOKING TO**
Build your confidence?
Grow as a leader?
Improve your communication & public speaking skills?
Excel at an Interview
TOASTMASTERS INTERNATIONAL
**Visit a Toastmasters club – it will change your life.**
Opportunity has come closer to you... Join us at
Medical Faculty (Lecture Hall-1)
University of Jaffna, Thirunelvely
on 21st of June, 2015 Sunday, at 5.30pm
Contact Nos: 0772908020; 0776365807
A community service project of JTMC-where leaders are made

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.பல்கலை

என்று யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம், யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் ஆகியன கோரிக்கை விடுத்துள்ளன.

இதனை வலியுறுத்தி இரண்டு சங்கங்களும் நேற்றுப் பல்கலைக்கழகப் பிரதான வாயிலில் கவன வீர்ப்பில் ஈடுபட்டன. அதில் ஏராளமானோர் பங்குகொண்டு கோரிக்கையை வலியுறுத்தினர். அதனைத் தொடர்ந்து சங்கங்களின் பிரதிநிதிகள் கருத் துத் தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:-

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த சில ஆண்டுகளில் நிலவிய மிகமோசமான அரசியற் கலாசாரத்தினால் இந்த நிலை ஏற்பட்டிருந்தது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது சிறந்ததொரு பேரவையை நியமித்ததன் மூலம் யாழ். பல்கலைக்கழகத்தை மீண்டும் சரியானபாதையில் கொண்டுசெல்வதற்கான மிகமுக்கியமான பணியை நிறைவு செய்துள்ளது.

சுயாதிபத்தியமுள்ள பல்கலைக் கழகமொன்றின் அதியுயர் நிர்வாக பீடமான பேரவை என்ற வகையில், அடுத்த கட்டப் பணிகளைப் புதிதாக நியமிக்கப்பட்ட பேரவை ஆற்றுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கருதியிருந்தால் அது ஏற்புடையதேயாகும்.

புதிய பேரவை பொறுப்பேற்று இரு மாதங்களாகியுள்ளதால் அடுத்த கட்ட நகர்வுக்கான கால அவகாசம் பேரவைக்குக் கிடைத்துள்ளதாகவும் முழுமையான விசாரணையை மீள வலியுறுத்துவதற்கு இந்தத் தருணம் பொருத்தமுடையதாகவும் நாம் கருதுகிறோம்.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம், நியமன முறைகேடுகள் தொடர்பாகவும், யாழ். பல்கலைக் கழக ஊழியர் சங்கம் நியமன மற்றும் நிதிமுறைகேடுகள் தொடர்பாகவும் முறைப்பாடுகளைப் பேரவையிடம் சமர்ப்பித்துள்ளன.

கடந்த மாத பேரவைக் கூட்டத்தில், பல்கலைக்கழக நிர்வாகத்தின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களின் குறைகளைத் தீர்க்கும் முகமாக குறைகேள் குழு அமைப்பதென தீர்மானிக்கப்பட்டதாக அறிந்தோம். இந்தக் குழு அவ்வப்போது தோன்றும் ஊழியர்களின் பிரச்சினைகளுக்குப் பொருத்தமான ஆலோசனைகளை வழங்குவதற்கு ஏற்றதாக இருக்கும் என்று நாம் நம்புகின்றோம். எனினும், கடந்த சில ஆண்டுகளில் யாழ்.பல்கலைக்கழகத்தில் நிலவிய மிக மோசமான அரசியற் கலாசாரத்தினால் பல்கலைக்கழக கற்கை மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளில் ஏற்பட்ட சீரழிவுகளின் அளவுகளைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்குத் தனியான ஒரு குழு தேவை என்பது உறுதியான கருத்தாகும்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட சீரழிவுகளுக்கு அரசியல் தலையீடுகள் மட்டும் காரணமல்ல. இதற்கு உடந்தையாக துணைவேந்தரும், பதிவாளரும் சில பீடாதிபதிகளும், சில நிர்வாக அதிகாரிகளும் செயற்பாட்டார்கள் என்பதை தாங்கள் அறிந்திருப்பீர்கள்.

இதனால் விசாரணைக் குழுவைத் தெரிவு செய்யும் பணி பல்கலைக் கழகப் பேரவையின் உள்வாரி உறுப்பினர்களின் பங்கில்லாமல் நிறைவேற்றப்பட வேண்டும். பல்கலைக் கழக பேரவைக்கு தகுதி வாய்ந்தவர்கள் நியமிக்கப்பட்டபோது நாம் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். ஆனால் கடந்தகால முறைகேடுகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் எவ்வித விசாரணைக்கும் முகம் கொடுக்காமல் மீண்டும் தங்கள் பழையபாணி செயற்பாடு களை செயற்படுத்த முனைவது போல் நாம் உணர்கிறோம் என்று சங்கங்கள் மேலும் கோரியுள்ளன. (த-4)

## மாவை-முதலமை

மாவை. சேனாதிராசா, இது தொடர்பில் முதலமைச்சருக்கும் நேரில் நேற்று விளக்கமளித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். அலுவலகத்தில் நேற்று மதியம் பத்திரிகையாளர் சந்திப்பு இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தனது விளக்கத்தைத் தெரிவித்தார்.

இன்று காலை (நேற்று) வடக்கு மாகாண முதலமைச்சர் சுவிவிக்னேஸ்வரனை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினேன். இதன்போது, முதலமைச்சர் வடக்கு மாகாண அதிகாரத்துக்கு உட்பட்ட விடயங்களில் தமக்குத் தெரியாமல் நிதி பெறப்பட்டமையையே தான் தெரிவித்தாக என்னிடம் தெரிவித்தார். அத்துடன்,கூட்டமைப்புடன் ஒற்றுமையாக உறுதியாகச் செயற்படத் தயாராக இருப்பதாக பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவிக்குமாறும் அவர் என்னைக் கேட்டுக் கொண்டார்.

மேலும், முதலமைச்சர் நேற்று (நேற்று முன்தினம்) அனுப்பிய பதில் கடிதத்துக்கு நான் வழங்கிய பதில் கடிதத்தை ஊடகங்களிடம் வழங்கப் போவதையும் அவரிடம் குறிப்பிட்டேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா அனுப்பிய கடிதத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப் படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி அரசால் வழங்கப்படவில்லை. இதனால் கடந்த ஏப்ரல் மாதம் பிரதமருடன் நடந்த சந்திப்பில், திக்கம் வடிசாலையைச் செயற்படுத்துவதற்கு அந்த மக்கள் நிதி கேட்கின்றனர். அதற்குத் தேவையான நிதியை 2.5 மில்லியன் ரூபாவை ஒதுக்குமாறு பிரதமரிடம் கேட்டோம். அதற்கு அவர் இணங்கி ஒதுக்கினார்.

அந்த நிதியைத் தவிர வேறு எந்த நிதியும், எம்மால் கோரப்பட்டிருக்கவில்லை. மேலும் திக்கம் வடிசாலைக்குரிய பனை அபிவிருத்திச் சபை விடயம் மாகாணத்துக்கு உரியது அல்ல. அது மத்திய அரசுக்குரியது. இருப்பினும் பனை அபிவிருத்திச் சபை மாகாணத்துக்கு வழங்கப்பட வேண்டும் என்று நாம் வாதாடி வருகின்றோம்.

மேலும், வலி.வடக்கில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு உதவிகள் செய்யப்படவில்லை. உதவிகள் வழங்குவதற்கு நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று பிரதமரிடம் கேட்டிருந்தோம். நானும், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் இதனைக் கோரியிருந்தோம்.

காங்கேசன்துறை துறைமுகம், பலாலி விமானத் தளம் ஆகியவற்றின் அபிவிருத்திக்கு இந்திய அரசிடம் நாம் நிதி உதவி கோரியிருந்தோம். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரின் அத்தியாவசிய கடமைகளைப் பட்டியலிட முடியும்.

இவ்வாறானதொரு நிலையில், நான் அரசிடமிருந்து பணம் பெற்றதாக இணையத் தளங்களில் வெளியான செய்தி எனது 50 வருட வாழ்க்கையை களங்கத்துக்கு உள்ளாக்கியுள்ளது. நாங்கள் எந்த அரசிடமிருந்தோ, அரசு ஆட்களிடமிருந்தோ ஒரு சதத்தைக் கூடப் பெற்றிருக்கவில்லை.

ஏதோ தெற்குக்கு அழைத்து எங்களுடைய சட்டைப்பைக்குள் பெரும் நிதியை வைத்து விட்டது போலச் செய்திகள் வருகின்றன. இது பற்றி நாம் பதில் கூறும் பொறுப்புடையவர்கள். நாம் எல்லோருக்கும் கூட்டுப் பொறுப்பு உண்டு. இத்தகைய முரண்பாடுகள் இனி எப்போதும் எழாமல் இருக்க வேண்டும். ஒரு பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஒன்று பட்டு உழைப்போம் என்று - முதலமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (த-5)

## வல்லைச்

தில் நேற்று இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி செந்தூரன் கருத்துத் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்துக்கு ஏதாவது வந்தால் அது உடனடியாக வடமராட்சிக்கு வருவதில்லை. வல்லைப் பாலத்தை தாண்டி வரக் காலம் எடுக்கும். ஆனால் தற்போது குற்றச் செயல்கள் வடமராட்சிப் பிரதேசத்துக்கு உடனேயே வந்துள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து வடமராட்சிக்கு வரும் வாகனங்களை, வல்லைச் சந்தியில் சோதனை செய்ய வேண்டும். இதற்காக வல்லைச் சந்தியில் பொலிஸ் போஸ்ட் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதன் பின்னர் அவர் கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

இதன் பின்னர் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிக்கையில், வைத்தியர் கேட்டுக் கொண்டது போல், வல்லைச் சந்தியில் பொலிஸ் சோதனைச் சாவடி உடனடியாக அமைக்கப்படும். அதில் 24 மணி நேரமும் வாகனங்களைச் சோதனை செய்ய முடியாது. ஆனாலும், குறிப்பிட நேரத்துக்கு நேரம் வாகனங்களைச் சோதனை செய்ய முடியும் - என்று குறிப்பிட்டார். (த-5)

## மாணவரின்

தெரிவித்தார்.

அத்துடன் யாழ்.மாவட்ட அரச அதிபரும் இதே போன்ற விடயத்தைச் சுட்டிக்காட்டி, பாடசாலை அதிபர்களுக்கும் சமூகப் பொறுப்பு இருக்கின்றது என்று அழுத்தமாகக் குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சிவில் சமூகப் பாதுகாப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்தக் கருத்து முன்வைக்கப்பட்டது.

உளசமூகஉத்தியோகத்தர் கே.கௌதமன் குறிப்பிடுகையில்,

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் மாணவர்கள் போதைப் பொருள் பாவிப்பது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதில் சிரமங்களை எதிர்கொள்கின்றோம். பாடசாலை அதிபர்கள் இந்த விடயங்களில் ஒத்துழைப்பதற்குப் பின்னடிக்கின்றார்கள். போதைப் பொருள் விடயத்தில் ஒரு கட்டத்திற்கு மேல் பொலிஸார் தான் விசாரணை செய்ய முடியும். அவர்களுக்கும் பாடசாலை அதிபர்கள் ஒத்துழைக்க விரும்புகின்றார்கள் இல்லை.

பாடசாலைகள் எங்களுடன் ஒத்துழைத்தால்தான் இந்த விடயத்தை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும். மேலும், 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்குப் புகையிலைப் பொருள்களை வர்த்தகர்கள் விற்பனை செய்கின்றனர். அத்துடன் லேபிள் இல்லாத பாக்குகளும் விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவிக்கையில், பாடசாலைகளுக்கு அருகில் போதைப் பொருள் விற்பனை தொடர்பில் மாவட்ட செயலகத்தின் இரகசியத் தகவல் வெளியில் கசிந்திருந்தது. அதனடிப்படையில் அதில் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த சில பாடசாலைகளின் அதிபர்கள் எங்களுடன் பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகத் தெரிவித்திருந்தனர்.

சிலர் எங்களுடன் முரண்பட்டிருந்தனர். அதிபர்களுக்கும் சமூகப் பொறுப்பு இருக்கின்றது. நான் தப்பினால் காணும் என்று செயற்பட முடியாது. அவ்வாறுதான் இங்கு செயற்படப் பார்க்கின்றனர். இந்த தவறான - எதிர்மறையான - மனநிலைதான் இங்கு காணப்படுகின்றது.

பாடசாலைச் சுற்றாடலில் நடக்கின்ற விடயங்களையும் அதிபர்கள் அவதானிக்க வேண்டும். ஒத்துழைக்க வேண்டும் - என்றார். (த-5)

## ஊர்காவற்றுறை

வேறு பொலிஸாரை இந்த விடயத்தை செயற்படுத்த அனுமதிக்க வேண்டும்.

இவ்வாறு சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில், வேலணைப் பிரதேச செயலாளர் திருமதி எஸ்.மஞ்சுளா தேவி பகிரங்கமாகக் குற்றம் சுமத்தினார்.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர், மண்கும்பானில் அமைக்கப்பட்டு வரும் யாத்திரிகர் மடத்தின் முன்பாக மணல் ஏற்றிய டிப்பர் நின்றிருந்தது. குறித்த டிப்பர் தொடர்பில் அங்கிருந்தவர்களிடம் விசாரித்தபோது அவர்கள் தெரியாது என்று குறிப்பிட்டனர். பின்னர், அது தொடர்பில் விசாரித்தபோது புளியங்கூடலைச் சேர்ந்த ஒருவரே மணல் ஏற்றினார் என்பது தெரியவந்தது.

இது தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினேன். அவர்கள் குறித்த நபரைக் கைது செய்யவில்லை. டிப்பரை நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லுமாறு பொலிஸார் எனக்குத் தெரிவித்தனர். அதற்கு எமக்குப் பண ஏற்பாடுகள் இல்லை. இதனால் நான் அதனைப் பிரதேச செயலகத்துக்கு கொண்டு வந்தேன்.

இதே போன்று சில தினங்களுக்கு முன்னர், மணல் அகழ்வு தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினேன். பொலிஸார் வந்திருந்து, மணல் கொள்ளையர்கள் மணல் அள்ளிச் சென்ற பின்னர் பின்னால் கலைப்பது போன்று கலைத்து அவர்களை விட்டு விட்டார்கள். நாம் மணல் கொள்ளையர்களையும், பொலிஸாரையும் அவதானிக்க வேண்டியிருக்கின்றது. பொலிஸார் குற்றவாளிகளைக் கைது செய்வது போன்று நடிக்கின்றனர் என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டியதுடன், எமக்கு ஊர்காவற்றுறைப் பொலிஸாரில் நம்பிக்கையில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள வேறு பொலிஸாரை இந்த விடயத்தில் ஈடுபடுத்துமாறும் கேட்டார்.

இதன்போது, பொலிஸார், பிரதேச செயலாளரைச் சந்திக்க முடியவில்லை. இனி அவ்வாறு நடக்காது. எங்களுடன் நேரடியாகத் தொடர்பை ஏற்படுத்துங்கள். கீழ்நிலைப் பொலிஸாருடன் பேசவேண்டாம் என்று கூறினர். இதன்போது அரச அதிபரும், பொலிஸார் இந்த விடயத்தில் கவனம் எடுத்துச் செயற்படுவார்கள் என்று தெரிவித்தார்.

(த-5)

## 18 நாள்களுக்குள்

நீங்கள் பல நாள்கள் கஷ்டப்பட்டு உழைத்த பணம், அதன் மூலமாகச் சேமித்த நகைகளைச் சில நிமிடங்களில் திருட்டுப்போக, கொள்ளை போக அனுமதிக்க முடியாது. அவ்வாறான திருட்டுக்களை எப்படித் தடுக்கலாம் என்பது பற்றி உங்கள் குடும்பத்தினருடன் கலந்துரையாடுங்கள். அதுபற்றிச் சிந்தியுங்கள். உங்கள் பெறுமதியான பொருள்களைப் பாதுகாப்பாக வைக்க முயற்சி எடுங்கள். இயன்றளவு சி.சி.ரி.வி கமரா உள்ளிட்ட கருவிகளைப் பொருத்துங்கள்.

எதுவித உதவியாக இருந்தாலும் பொலிஸாரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட பகுதிகளில் ஒரு லட்சத்து 10 ஆயிரம் மக்கள் உள்ளனர். ஆனால் பொலிஸார் 300 பேர் தான் உள்ளனர். சகல திருட்டுக்களையும் பிடிக்க முடியாது என்றாலும் மிக அதிக அளவு முயற்சியைப் பொலிஸார் எடுப்பர். அதற்குப் பொலிஸாருக்கு மக்கள் தகவல்களை வழங்க வேண்டும். தங்கள் பகுதிகளில் இடம்பெறும் குற்றச் செயல்கள் பற்றிய தகவல்களை மக்கள் தந்தால்தான் மேலதிக நடவடிக்கைகளைப் பொலிஸார் எடுக்க முடியும்.

உங்கள் வீடு உள்ள இடங்களில் அல்லது ஏனைய இடங்களில் யாராவது சந்தேகத்துக்கு இடமாக நடமாடினால் அது பற்றிப் பொலிஸாருக்கு அறிவியுங்கள்.

பிள்ளைகள் தொடர்பில் மிக அவதானமாக இருக்கவும். உங்கள் பிள்ளைகளின் நடத்தை, கதை, உரையாடல்கள், செயற்பாடுகள் தொடர்பில் பெற்றோர் கவனம் செலுத்த வேண்டும். சந்தேகத்துக்கு இடமான முறையில் அவர்கள் நடந்துகொண்டால் பொலிஸாரிடம் அதுபற்றிப் பேசுங்கள்.

குற்றச் செயல்கள் இவ்வளவுக்கு அதிகரிக்கக் கைத்தொலைபேசியும் காரணமாகிவிட்டது. முகப் புத்தகம், இணையப் பாவனை மாணவர்களைக் கெட்டுப்போகுமளவுக்கு இருத்தல் கூடாது. பெற்றோர் அதனைக் கட்டுப்படுத்தவேண்டும். அவ்வாறு தொடர்புள்ள ஒரு மாணவி ஒருவருடன் ஓடிவிட்டார். அவரைக் காணவில்லை என்று பொலிஸில் முறைப்பாடு வந்த பின்னர் தேடுதல் நடத்தி வவுனியா ஓமந்தையில் வைத்து அந்த மாணவியை மீட்டோம். அதனையும் ஒரு உதாரணமாகக் கொள்ள வேண்டியது பெற்றோர் கடமை. உங்கள் பிள்ளைகளைவிடப் பக்கத்து வீட்டுப் பிள்ளைகள் பற்றியும் சிந்தியுங்கள். அவர்கள் நல்லவர்களாக இருப்பார்கள் என்றில்லை தானே.

அவ்வாறு ஒரு பிள்ளை இளவயதிலேயே திருமணம் செய்துவிட்டால் அவரின் கல்வி, வாழ்க்கை, எதிர்காலம் அனைத்தும் பாதித்துவிடும்-என்றார்.

யாழ்.நகரில் ஒரு மாத காலத்தில் போக்குவரத்துப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும் என்றும் வூட்லர் தெரிவித்தார்.

யாழ்.நகர் குப்பை உள்ளிட்டவற்றால் நாறிப் போயுள்ளது. மூக்கைப் பொத்தியபடியே செல்ல வேண்டியுள்ளது. ஆண்கள் எப்படி மோட்டார் சைக்கிள் ஓடுவது என்று தெரியாமல் ஓடுகிறார்கள். உரிய விதிமுறைகளைப் பின்பற்று கிறார்களில்லை. அவர்கள் அனைவருக்கும் எதிராக வழக்குத் தொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று அவர் மேலும் கூறினார்.

(த-4)

## வீடுகளில்

வீதிகளில் நின்று மது அருந்துவது தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக் கப்பட்டிருந்தன. இதற்குப் பதிலளிக்கும் விதத்தில் கருத்துத் தெரிவிக் கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

சந்திகள், வீதிகளில் நின்று மது பாவிப்பதாக இங்கு பலர் கூறினர். யாழ்ப்பாணத்தில் நல்ல கலாசாரம் இருக்கின்றது. வீடுகளில் முழுமையாகக் குடி தடை செய்யப்பட்டுள்ளது. வீட்டில் போய் குடிக்க முடியாது. அதனால்தான் வீதிகளில் நின்று குடிக்கின்றார்கள். கலாசாரப் பிரச்சினையாலேயே வீதிகளில் குடிக்கின்றார்கள். பணம் இருப்பவர்கள் ஹோட்டல்கள் - விடுதிகளுக்குச் சென்று குடிக் கின்றார்கள். அன்றாடம் கூலி வேலை செய்பவர்கள் வீதிகளிலும் - சந்திகளிலும் நின்று குடிக்கின் றார்கள். நான் வீட்டில் வைத்துக் குடிக்குமாறு கூறவில்லை. இங்கு கலாசாரத்தின் காரணமாகத்தான் வீதிகளில்நின்றுகுடிக்கின்றார்கள் என்பதைக் கூறுகின்றேன் - என்றார்.

(த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டைக் கட்டியெழுப்ப வர வேண்டும் மஹிந்த

***பிரசன்ன ரணதுங்க கூறுகின்றார்***

நாட்டின் பொருளாதரத்தையும் தேசிய பாதுகாப்பையும் மீளவும் கட்டிய மைக்க மஹிந்த ராஜபக்ஷவை அரசியலில் இணைத்துக்கொண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி பயணிக்க வேண்டும் என மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் இவ் வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டில் பொருளாதாரம் வீழ்ச்சி ய டைந்துள்ளது. தேசிய பாதுகாப் புக் குறித்து கேள்வி எழுப்பப்படுகின்றது. நாடு அரசியல் வங்கு ரோத்து அடைந் துள்ளது. ஆகவே, இவற்றை மீளக்கட்டி யெழுப்பவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்த வும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவை மீண்டும் அரசிய லில் இணைத் துக்கொண்டு செயற் பட வேண்டும் [illegible]பதே எமது கோரிக் கையாகும்.

தற்போதைய அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ள சிறுபான்மைக் கட்சி கள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து வருகின்றன. தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு ஒரு கோரிக்கையை முன்வைத்துள்ளது. சிறிலங்கா முஸ் லிம் காங்கிரஸ் இன்னொரு வகை யான கோரிக்கையை முன் வைத் துள்ளது.

அதேபோல மக்கள் விடுதலை முன் னணி மற்றும் சரத் பொன் சேகா அணி வேறு வகையான கோரிக் கைகளை முன்வைத்துக் கொண்டு இருக்கும் நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு கிடைத்த 58 இலட்சம் வாக்குகளும் வீழ்ச்சி யடைந்து கட்சி தோல்வியடையும் நிலை காணப்படுகின்றது. ஆகவே, [illegible]ண்டும் சிறிலங்கா சுதந்தரக் கட்சி தலைமையிலான அரசை ஏற்ப டுத்து வதன் ஊடாக நாட்டை மீளக் கட்டிய மைக்க முடியும் என்று கூறி யுள்ளார். (த)

# மஹிந்தவும் நிமலும் ஆட்சிபீடமேறுவர்

***பந்துல குணவர்த்தன நம்பிக்கை***

கொழும்பு, ஜூன் 20

எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறி பால டி சில்வா, முன்னாள் ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய இருவரும் பிரதமர்களாக ஆட்சிபீட மேறுவர்" – என முன்னாள் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று முன் தினம் தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை யூடாக தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அப்பதவியி லிருந்து விரட்டியடிக்கப்பட்டதன் பின்னர் அடுத்துவரும், தற்காலிக அரசின் பிரதமராக எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா பதவி வகிப்பார். இதையடுத்து இடம் பெறும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட்பாளராகப் போட்டி யிடும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்று பிரதமரா வார் என்றும் தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியிலுள்ள அபயராம விகாரையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே பந்துல மேற் கண்ட தகவலை வெளியிட்டார். (த)

# மது பாவனையால் வடக்கில் அரசுக்கு அதிக வருமானம்

## கூறுகிறார் ஜனாதிபதி மைத்திரிபால

கொழும்பு, ஜூன் 20

வடக்கு மாகாணத்திலிருந்தே மதுப் பாவனை மூலமான அதிக வருமா னம் அரசுக்கு கிடைப்பதாக, ஜனா திபதி மைத்திரிபால சிறிசேனா தெரி வித்துள்ளார்.

காலி ரிச்மண்ட் கல்லூரியில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகை யிலேயே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலை மாணவர்களைப் போதைப் பொருளில் இருந்து காப்பாற்றுவ தற்கான விரிவான தேசிய திட்ட மொன்றை நடைமுறைப்படுத்த வுள்ளோம்.

மேலும், மதுப் பாவனை மூலம் வடக்கிலிருந்தே அரசுக்கு அதிக



பணம் கிடைக்கின்றது. புங்குடுதீவு மாணவியின் கொலைச் சம்பவத்தின் பின்னர் இதுபற்றி பலரும் முக் கிய கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

அத்துடன், திரைப்படங்களில் காண் பிக்கப்படும் காட்சிகள் மதுப் பாவனை விடயத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன. மனிதப் பண் புள்ள சமூகமொன்றை உருவாக்கு வதற்கான பொறுப்பு எமக் குண்டு –என்றார். (த–5)

# ஊடகவியலாளர்களுக்கும் சுதந்திரம் வழங்கவேண்டும்

## ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 20

தற்போதைய அரசால் மக்க ளுக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரம் ஊடக வியலாளர்களுக்கும், கலை ஞர்க ளுக்கும் வழங்கப்படவேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் மற்றும் கலை ஞர்கள் தொழில் செய்யும் நிறுவ னங்களின் உரிமையாளர்கள் எத்த கைய கருத்தியல்களை அல்லது தொலைநோக்கைக் கொண்டிருந் தபோதும் ஊடகவியலாளர்களும் கலைஞர்களும் சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் பணியாற்றுவ தற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரி வித்தார்.

கொழும்பு தாமரைத்தடாக மண்டபத் தில் நடைபெற்ற ரய்கம்' விருது வழங் கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரி வித்தார்.

மேற்படி விருதுகள் 2014ஆம் ஆண் டில் இலங்கை தொலைக் காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப் பான சிறந்த தொலைக்காட்சி நாடகங் கள், நிகழ்ச்சிகளுக்காக வழங் கப்பட்டன.

சமூகத்தில் சுதந்திரத்தையும் உரிமை க ளையும் தாபிக்கவேண் டியது அர சின் பொறுப்பு என்ற வகை யில் அரச ஊடகங்கள் அரசியல் சார்பற்றவை யாக இருக்கவேண் டியது அவசியமா கும் என ஜனாதிபதி தெரிவித் தார்.

சமூகத்திற்குத் தேவையான அறிவு, ஞானத்தை ஒரு நிறுவனத் தில் சுதந் திரமாகப் பணியாற்றுவதன் ஊடாகவே அடைந்து கொள்ள முடியு மென வும் அவர் தெரிவித்தார். (த–சி)

# தேவையற்ற கைதிகளை வீட்டுக்கு அனுப்புங்கள்

## சிறைச்சாலைகள் ஆணையாளருக்கு சொலிஸிட்டர் ஜெனரல் ஆலோசனை

கொழும்பு, ஜூன் 20

சிறைச்சாலைகளில் அர்த்தமில்லா மல் ஒப்புக்கு அடைத்து வைத்திருக் கும் கைதிகளை விடுதலை செய்வ தற்கு நடவடிக்கை எடுக்குமாறு சொலி ஸிட்டர் ஜெனரல் சுகத கம்லத் சிறைச் சாலைகள் ஆணையாளர் நாயகத் துக்கு ஆலோசனை வழங்கியுள் ளதாகத் தெரியவருகின் றது.

இதற்கான நடவடிக்கைகள் ஒரு மாத காலத்துக்குள் பூர்த்தியாக வேண்டுமெனவும் தற்சமயம் சிறை களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி களின் எண்ணிக்கை, அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதற்கான காரணங்கள், சிறையில் கழித்த காலம் உட்பட சகல விவரங்களை யும் தனக்கு அறிவிக்குமாறும் சொலி ஸிட்டர் ஜெனரல் சிறைச்சாலை களின் ஆணையாளர் நாயகத்துக்கு அறிவித்துள்ளதாகத் தெரியவரு கின்றது.

இந்த அறிக்கை தனக்குக் கிடைத்த பின் இந்த விடயத்தைக் கவனிப்ப தற்கு நியமிக்கப்படும் குழு மாதம் ஒருமுறை சிறைச்சாலைகளுக்கு பயணம் செய்து கைதிகள் பற்றிய பரிந்துரைகளை முன்வைக்கும் என வும், அந்தக் குழுவில் சட்ட உதவி ஆணைக்குழுவின் அதிகாரிகள், சட்டத்தரணிகள், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம், பிரதம நீதிவான் ஆகியோர் இடம்பெறுவர் எனவும் சொலிஸிட்டர் ஜெனரல் தெரிவித்திருக்கிறார்.

இந்தக் குழுவின் பயணத்தைத் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டி ருக்கும் கைதிகளில் விடுதலை செய் யப் படக்கூடியவர்கள், பிணை வழங் கப்படக்கூடியவர்கள் ஆகியோர் பற் றிய முடிவுகள் உடனுக்குடன் எடுக்கப் பட்டு அது தொடர்பில் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களுக்கு பரிந்துரை வழங் கப்படும் எனவும் அவர் கூறினார்.

சிறைச்சாலைகள் சட்டங்களின் படி நீதிவான் ஒருவர் தனது அதிகார எல்லைக்குட்பட்ட சிறைச்சாலைக ளுக்கு மாதம் ஒருமுறை விஜயம் செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ள தாகவும் சொலிஸிட்டர் ஜெனரல் சுட்டிக்காட்டினார். (த)

# 20 மீது ஓகஸ்ட் 7 இல் விவாதம் சாத்தியம்

கொழும்பு, ஜூன் 20

புதிய தேர்தல் சீர்திருத்தம் உள்ள டங்கிய 20ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் உடனடியாகச் சமர்ப்பிக்கப்படாது எனவும், ஓகஸ்ட் முதல் வாரத்திலேயே அதன்மீது விவாதம் நடத்தப்படக்கூடிய சூழ்நிலை காணப்படுகிறது எனவும் முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா தெரி வித்தார்.

அத்துடன், சிறிலங்கா சுதந்திரக் கட் சியைப் பிளவுபடுத்தி ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத்தும் நடவடிக் கையை முன்னெடுக்கவேண்டாம் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா வுக்கும் அவர் கோரிக்கை விடுத்தார்.

பொரளையிலுள்ள என்.எம்.பெரேரா நிலையத்தில் இடம்பெற்ற சோஷ லிஸ மக்கள் முன்னணியின் ஏற்பாட் டில் இடம்பெற்ற சிறுபான்மைக் கட் சிகளின் ஊடகவியலாளர் சந்திப் பில் கலந்துகொண்டு கருத்துத் தெரி விக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:–

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பரிந் துரைகளுக்கு அமைவாக கொண் டுவரப்படவுள்ள 20ஆவது திருத்தச் சட்டமானது எமது கொள்கைக ளுக்கு ஏற்பவே நிறைவேற்றப்பட வேண்டும்.

255 ஆசனங்களுக்கு மேற் படாத வாறு ஒவ்வொரு தேர்தல் தொகு திகளுக்கு ஒரு உறுப்பினர் என்ற அடிப்படையில் சிறு, சிறுபான்மைக் கட்சிகளுக்குப் பாதிப்பு ஏற்படா தவாறு இதனைச் செய்யவேண்டி உள்ளது.

தற்போது நிலவுகின்ற பிரச்சினைக ளுக்கு மத்தியில் ஓகஸ்ட் முதல் வாரத்திலேயே 20 ஐ நாடாளுமன் றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளத்தக்கதாக இருக்கும். பிரச் சினைகள், சட்டச்சிக்கல்கள் தொடர் பில் நீதிமன்றம் செல்லவேண்டிய நிலையும் ஏற்படும், கட்சித் தலை வர்களுக்கிடையில் பேச்சு இடம் பெறவேண்டும் இவை போன்ற பல்வேறு விடயங்களை முன்னெ டுக்கவேண்டியுள்ளது.

இவ்வாறான நிலையில், குறுகிய காலத்துக்குள் 20ஐ நாடாளுமன் றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள முடியாதுபோகும் என எதிர்பார்க்கின்றோம்.

அதேவேளை, அரசு 20ஐ நிறை வேற்றவேண்டும் என்ற உண்மை யான நிலைப்பாட்டில் இருக்குமா யின் சிறு, சிறுபான்மைக் கட்சிக ளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு அக்கட்சிகளின் யோச னைகளை அதற்குள் உள்வாங்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி, சிறுபான் மைப் பலத்தைக்கொண்ட இந்த அர சானது பிரதமருக்கு எதிராக கொண் டுவரப்படவுள்ள நம்பிக்கையில் லாப் பிரேரணையைத் தடுப்பதற் கான ஆயுதமாக 20ஐ பயன்படுத்த முயற்சிக்கின்றது. அந்த முயற் சியை விரைவில் தோல்வியடை யச் செய்வோம்.

வாக்குறுதியை மீறி 20ஐ நிறை வேற்றுவதைத் தடுக்கும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி செயற்பட்டு வருகின்றது. அவ்வாறெனில், நாடா ளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசை ஸ்தா பித்து அதன் பின்னர் நாங்கள் அதனை நிறைவேற்றிக்கொள் வோம்– எனத் தெரிவித்தார். (த)

# 20 ஆவது திருத்தச் சட்ட வர்த்தமானி அறிவித்தலை உடன் திரும்ப பெறுக

## அரசுக்கு எதிராக சிறிய, சிறுபான்மையின கட்சிகள் போர்க்கொடி

கொழும்பு, ஜூன் 20

அரசமைப்பின் 20ஆவது திருத் தச் சட்ட வரைவை சிறு கட்சிகளும், சிறுபான்மையினக் கட்சிகளும் முழு மையாக எதிர்க்கத் தீர்மானித் துள் ளன என்று ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித் தார்.

அத்துடன் பூரண ஒத்திசைவு இல் லாமல் அரச வர்த்தமானியில் பிரசு ரித்த 20ஆவது திருத்தச் சட்ட வரைவை உடனடியாக மீளப்பெற வேண்டும் என்றும் அவர் வலியுறுத் தினார்.

சிறு கட்சிகளும், சிறுபான்மையி னக் கட்சிகளும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தாருஸ்ஸ லாம்' தலைமையகத்தில் நடத்திய அவசர கூட்டத் திலேயே மேற்படி தீர் மானங்கள் எடுக்கப்பட்டன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது:–

அரசமைப்பின் 20ஆவது திருத் தச் சட்ட வரைவை நாங்கள் முழுமை யாக எதிர்க்கத் தீர்மானித்திருக் கின் றோம். பூரண ஒத்திசைவு இல்லா மல் அதனை அரச வர்த்தமானியில் பிரசுரித்து எங்களுடைய அடிப் படை ஜனநாயக உரிமையை பறித் திருப்பதை நாங்கள் கண்டிப்பது மாத்திரமல்ல உடனடியாக அந்த வர்த்தமானி அறிவித்தலை மீளப் பெறவேண்டும் என நாங்கள் எல் லோரும் அரசிடம் வலியுறுத்தி யிருக்கின்றோம்.

இதனடிப்படையில் எங்கள் போராட் டத்தை ஜனாதிபதியோடும் பிரதம ரோடும் கதைத்த பிற்பாடு நாட்டு மக்கள் மத்தியில் முன் னெடுத்து செல்லவதற்காக நாங்கள் எல்லோ ரும் தயாராகி வருகின் றோம்.

நாங்கள் கோரியிருந்த இரட்டை வாக்குச் சீட்டு முறைமை [illegible]ழு மையாக நிராகரிக்கப்பட்டுள்ளது. எந்த அடிப்படையும் இல்லாத [illegible]ரு கட்சி கள் மாத்திரம் ஆட்சி செ[illegible]யும் வகை யில் ஒரு தலைப்பட்ச[illegible]ன இந்தத் தேர்தல் முறைமை [illegible]டர் பாக நாங்கள் பொதுமக்களு[illegible]ப் பூரண தெளிவை வழங்க இ[illegible]கி றோம் –என்றார்.

இந்தக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா [illegible]ஸ் லிம் காங்கிரஸின் பொதுச் செ[illegible]ா ளரும் இராஜாங்க அமைச் ச[illegible]ன எம்.ரி.ஹசனலி, ஜே.வி.பியின் [illegible]ல வர் அநுர குமார திஸாநா[illegible], ஐக்கிய தேசியக் கட்சியின் தே[illegible]ப் பட்டியல் நாடாளுமன்ற உறு[illegible]ர் ஆர்.யோகராஜன், தமிழ் முற்[illegible]க் குக் கூட்டணியின் தலை[illegible]ம் ஜனநாயக மக்கள் முன்னண[illegible]ன் தலைவருமான மனோ கணே[illegible]ன், தேசிய ஐக்கிய முன்னணியின் [illegible]ல வர் அஸாத் ஸாலி, ஜனநாயக [illegible]ய மக்கள் காங்கிரஸின் தல[illegible]ர் நல்லையா குமர குருபரன், [illegible]ய சோஷலிஸக் கட்சியின் தல[illegible]ர் சிறிதுங்க ஜயசூரிய, ஈழ[illegible]ன் ஜனநாயகக் கட்சியின் தல[illegible]ர் டக்ளஸ் தேவா னந்தா உட்ப[illegible]ர் கலந்து கொண்டனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.தங்கராசா ஞாபகார்த்த உதைபந்தாட்டத்தொடர் விண்ணொளி, நண்பர்கள் அடுத்த சுற்றுக்குள்

முல்லைத்தீவு, ஜூன் 20
அமரர் இ.தங்கராசா ஞாபகார்த்தமாக உதைபந்தாட்டத் தொடரில் விண்ணொளி அணியும் நண்பர்கள் அணியும் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு தகுதியாகின.

**விண்ணொளி எதிர் பாரதிதாசன்**
வித்தியானந்தாக் கல்லூரியின் மறைந்த அதிபர் அமரர் இ.தங்கராசாவின் நினைவாக உதைபந்தாட்டத் தொடர் ஒன்றை குறித்த கல்லூரியின் பழையமாணவர்கள் அமைப்பு நடத்தி வருகிறது. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் மாமூலை விண்ணொளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மந்துவில் பாரதிதாசன் அணி மோதிக் கொண்டது. ஆட்டம் ஆரம்பித்து இரண்டாவது நிமிடத்திலேயே விண்ணொளி வீரர் சயந்தன் தனக்குக் கிடைத்த பந்தை மிகவும் நுட்பமான முறையில் கோலாக்க விண்ணொளியின் ஆதிக்கம் ஆரம்பமானது.
பழிதீர்ப்பதற்காக பாரதிதாசன் வீரர்கள் பலமுறை முயன்ற போதிலும் எவையும் பயனளிக்கவில்லை. மாறாக 25ஆவது நிமிடத்தில் விண்ணொளி வீரர் வினோதன் தமது அணிக்கான இரண்டாவது கோலை பதிவுசெய்ய விண்ணொளியின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியானது. ஆட்டம் முடியும்வரை விண்ணொளியின் ஆதிக்கம் அசைக்க முடியாத இடம்பிடிக்க முடிவில் விண்ணொளி 2:0 என்ற அடிப்படையில் அபார வெற்றிபெற்றது.

**உதயசூரியன் எதிர் நண்பர்கள்**
தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் வட்டுவாகல் உதயசூரியன் அணியை எதிர்த்து உடையார்கட்டு நண்பர்கள் அணி மோதுவதற்கு தயாராக இருந்தபோதும் வட்டுவாகல் உதயசூரியன் அணியினர் குறித்த நேரத்தில் ஆட்டத்துக்கு சமுகமளிக்கத் தவறிய காரணத்தினால் நண்பர்கள் அணிக்கு வெற்றி என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. (ம-102)

# ஜி.பி.எஸ். விளையாட்டுக் கழகத் துடுப்பாட்டத்தொடர் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 20
கல்வியங்காடு ஞானபாஸ்கரரோதய சங்க (ஜி.பி.எஸ்.) விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் துடுப்பாட்டத் தொடர் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு குறித்த கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.
அணிக்கு 9 பேர் பங்குபற்றும் 12 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இந்தத் தொடரில், ஒரு பந்து வீச்சாளர் ஆகக் கூடுதலாக 3 பந்துப் பரிமாற்றங்கள் மட்டுமே வீச முடியும். பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள், 0773322243 அல்லது 0773839120 என்ற தொடர்பு எண்ணுடன் தொடர்பு கொள்ள முடியும். (ம-5)

# அரையிறுதியில் சொலிட்



யாழ்ப்பாணம், ஜூன் 20
இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் ஏவ்.ஏ.கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத் தொடரின் காலிறுதியாட்டம் ஒன்றில் அநுராதபுரம் சொலிட் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
கடந்த புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மன்னார் நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பணங்கட்டுகொட்டு சென்.ஜோசப் அணியை எதிர்த்து அநுராதபுரம் சொலிட் அணி மோதிக் கொண்டது. இதில் அநுராதபுரம் சொலிட் அணி 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதிபெற்றது. (ம-23)

# கோஹ்லியின் அணுகுமுறை சரியானதே

பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் கோஹ்லி ஐந்து பந்து வீச்சாளர்களுடன் களமிறங்கியது தொடர்பாக டோனி திருப்தி தெரிவித்துள்ளார்.
தலைமைத்துவம் தொடர்பாக டோனி தெரிவித்ததாவது:- 'அணித்தலைமையைப் பொறுத்தவரை இயல்பாக இருக்க முயன்றாலும்- ஒவ்வொரு தனிநபரும் வித்தியாசமானவர்கள்- அவர்களின் செயல்களும் தானாகவே வித்தியாசமானதாக அமைகிறது. இந்த வகையில் கோஹ்லியும் வித்தியாசமானவரே. பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் கோஹ்லி ஐந்து பந்து வீச்சாளர்களுடன் களமிறங்கியதை தவறு என்று ஒருபோதிலும் தெரிவிக்க மாட்டேன். அவரின் அணுகுமுறையை நானும் ஏற்றுக்கொள்கிறேன். நான் ஒரு அணுகுமுறையைப் பின்பற்றி அதில் வெற்றி கண்டால் அதைத்தான் கோஹ்லியும் பின்பற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. அவரது சுதந்திரச் செயற்பாட்டுக்கு இடமளிக்க வேண்டும். அப்பொழுதான் பிறரின் ஆளுமைகளையும் அறிந்துகொள்ள முடியும்.'- என்றார். (ம)



கோஹ்லி

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 20
யாழ்.மாவட்ட தாச்சிச் சங்க தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் மின்னொளியில் நடந்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புதுமட வைகறை அணியை எதிர்த்து நவாலி தென்றல் அணி மோதவுள்ளது. (ம-23)

**தங்கராசா ஞாபகார்த்த தொடர்**
வித்தியானந்தாக் கல்லூரியின் மறைந்த அதிபர் அமரர் தங்கராசாவின் ஞாபகார்த்த உதைபந்தாட்டத் தொடர் குறித்த கல்லூரியின் மைதானத்தில் நடைபெற்று வருகிறது.
இந்தத் தொடரில் இன்று நடைபெறும் ஆட்டங்களாக காலை 8 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் முள்ளியவளை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்புக்குளம் அலையோசை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மு.ப. 10 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் முள்ளிவாய்க்கால் செல்வா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனந்தபுரம் ஆனந்தா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ம-102)



# அறிவொளியிடம் வீழ்ந்தது அண்ணா

யாழ்ப்பாணம், ஜூன் 20
யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் மின்னொளியில் நடந்தும் தாச்சித் தொடர் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் பண்டத்தரிப்பு அறிவொளி அணியை எதிர்த்து இணுவில் அண்ணா அணி மோதிக்கொண்டது. இதில் பண்டத்தரிப்பு அறிவொளி அணி 9:7 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

# ஜோண் காப்பெட் விளையாட்டு விழாவில் தமிழ் மாணவர்கள் வலுவான ஆதிக்கம்



அனித்தா



டிலானி



கலைமகள்



மதுசனன்

ஜோன் காப்பெட்டின் நினைவாக 85ஆவது தடவையாக நடைபெறும் விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான கோலூன்றிப் பாய்தல் தொடர் நேற்று வெள்ளிக்கிழமை தியகம விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

**20 வயதுப் பிரிவு**
குறித்த தொடரின் 20வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றி பாய்தல் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி மாணவி அனித்தா புதிய சாதனை படைத்துள்ளார். கடந்த ஆண்டு இடம்பெற்ற ஜோன் காப்பெட் விளையாட்டு விழாவில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி பவித்திரா 3மீற்றர் உயரத்தை எட்டி நிகழ்த்திய சாதனையை நடப்பு ஆண்டில் இடம்பெற்ற போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி அனித்தா 3.2மீற்றர் உயரத்தை எட்டி முறியடித் துள்ளார்.

**17 வயதுப்பிரிவு**
17வயதுப்பிரிவு பெண்களுக்கான கோல் ஊன்றிப்பாய்தல் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி மாணவி [illegible] 2.[illegible]மீற்றர் உயரத்தினை எட்டி தங்கப்பதக்கத்தை கைப்பற்றிய அதேநேரம் குறித்த பாடசாலையின் மற்றொரு மாணவி கலைமகள் 2.5மீற்றர் உயரத்தினை எட்டி வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.
குறித்த விளையாட்டு விழாவின் உயரம்பாய்தல் பிரிவில் (16 வயதுப் பிரிவு) யாழ். மத்திய கல்லூரி மாணவன் மதுசனன் 1.76மீற்றர் உயரத்துக்கு பாய்ந்து தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-23)

# இந்தியர்கள் என்னை மன்னிக்கவில்லை

உலகக்கிண்ணத் தொடரில் சச்சினை ஆட்டமிழக்கச் செய்ததுக்காக இந்தியர்கள் இன்னும் என்னை மன்னிக்கவில்லை என்று மெக்ராத் தெரிவித்துள்ளார்.
இந்தியா, ஆஸ்திரேலியா போட்டி என்றாலே அனல் பறக்கும். அதிலும் உலகின் மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரனான சச்சினும் மிகச்சிறந்த பந்து வீச்சாளரான மெக்ராத்தும் மோதிக் கொண்டால் கேட்கவே வேண்டாம். ஆஸ்திரேலியாவிற்கு எதிராக சச்சின் அதிக ஓட்டங்கள் குவித்திருந்தாலும் மெக்ராத்திற்கு எதிராக கொஞ்சம் திணறவே செய்துள்ளார்.
இந்த நிலையில் இந்தியாவில் நடைபெற்ற நிகழ்ச்சி தொடர்பாக மெக்ராத் தெரிவித்ததாவது '2003ஆம் ஆண்டு ஜோகன்னஸ்பார்க்கில் நடந்த உலகக் கிண்ணத் தொடரின் இறுதி ஆட்டத்தில் சச்சின் என்னுடைய பந்தை பவுண்டரிக்கு விரட்டினார். அதற்கு அடுத்த பந்திலேயே நான் அவருக்கு பவுன்சர் வீசி ஆட்டமிழக்கச்செய்தேன். அதற்காக இந்தியர்கள் இன்னும் என்னை மன்னிக்கவில்லை' என்று தெரிவித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்தில் ஐந்து புதுமுகங்கள்




நியூஸிலாந்து – இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஒரேயொரு 'ரி–20' ஆட்டத்துக்கான இங்கிலாந்து அணியில் 5 புதுமுக வீரர்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர்.
23ஆம் திகதி ஆரம்பமாகும் குறித்த ஆட்டத்துக்கான இங்கிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இதில் 5 புதுமுக வீரர்கள் இடம்பெற்றுள்ளார்கள். சாம் பில்லிங்ஸ், ஜேம்ஸ் வின்ஸ், டேவிட் வில்லெ, மார்க் வுட், டாப்லே ஆகியோரே அவ்வாறு இடம்பிடித்த புதுமுக வீரர்களாவார்கள். (ம)

# பாகிஸ்தான் பலவீனம் ஆனபோதிலும் ஆட்டம் சமநிலையில் முடியலாம்



இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாள் முடிவில் பாகிஸ்தான் அணி 118–5 என்று தடுமாற்றமான நிலைமையில் உள்ளது. ஆனாலும் ஆட்டத்தில் முதல் நாள் மழை காரணமாக கைவிடப்பட்டதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடையும் போலவே தெரிகிறது.
இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடி ஆட்டத்தின் முதல்நாள் முடிவில் 178–3 என்ற பாதுகாப்பான நிலையில் இருந்தது. சில்வா 80 ஓட்டங்களுடனும் மத்தியூஸ் 10 ஓட்டங்களுடனும் தொடர்ந்து துடுப்பெடுத்தாட களமிறங்கினர். மூன்றாம் நாள் ஆரம்பித்து சில பந்துப்பரிமாற்றங்களிலேயே 19 ஓட்டங்களுடன் மத்தியூஸின் ஆட்டம் ரியாஸினால் முடிவுக்கு வந்தது. மத்தியூஸின் இடத்தை நிரப்பிய சந்திமால் கிட்டத்தட்ட மத்தியூஸின் பெறுபேறிலேயே பவிலியன் திரும்பினார். தற்பொழுது இலங்கை 226–5. ஒரு முனையில் இலக்குகள் சரிந்தாலும் மறுமுனையில் நம்பிக்கையுடன் சதத்தை நோக்கி பயணித்துக்கொண்டிருந்தார் சில்வா. போராட்டத்துக்கு கிடைத்த பயனாக சதமும் கண்டார். ஆனால் மறுமுனையில் இலக்குகள் சரிவது சீரான இடைவெளியில் நடந்து கொண்டே இருந்தது. கௌசால் சில்வாவும் பவிலியன் திரும்ப இலங்கையின் முதல் இன்னிங்ஸ் 300 ஓட்டங்களில் முடிவுக்கு வந்தது.
301 ஓட்டங்களைப் பெற்றால் முன்னிலை பெற்றுவிடலாம் என்ற நோக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணியை பிரசாத் வேகத்தில் மிரட்டினார். வெறும் இரண்டே ஓட்டங்களுடன் ஹபீஸின் ஆட்டம் முடிவுக்கு வர பாகிஸ்தான் 2–1. தனது இரண்டாவது பந்துப்பரிமாற்றத்தில் மற்றொரு ஆரம்ப வீரரையும் அனுப்பத் தவறவில்லை பிரசாத். பாகிஸ்தானின் ஆட்டம் ஆட்டம் கண்டது. ஒருநாள் அணித்தலைவர் டெஸ்ட் ஆட்டத்தில் அணியைக் கைவிட பாகிஸ்தான் 35–3. யுனிஸ்கானும் மிஷ்பாவும் இணைந்து படிப்படியாக பாகிஸ்தானை மீட்கும் நடவடிக்கையில் தீவிரம்காட்ட சரிவில் இருந்து சற்று மீண்டது பாகிஸ்தான். இணைப்பாட்டம் தீவிரமடைந்தால் நிலைமை பிழையாகிவிடும் என்பதை உணர்ந்த பெரேரா யுனிஸ்கானை போல்ட்டாக்கினார். இணைப்பாட்டம் பிரிக்கப்பட்டு சிறிது நேரத்தில் மிஷ்பாவும் ஆட்டமிழந்தார். மொத்தத்தில் மூன்றாம் நாள் முடிவில் பாகிஸ்தான் 118–5.
பந்துவீச்சில் இலங்கை சார்பாக பிரசாத் 2 இலக்குகளையும் பிரதீப், ஹரத், பெரேரா ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றியுள்ளனர். (ம)

# பலன்ஸ், ஹென்றிக்ஸ் நலமாக வீடுதிரும்பினர்


ஹென்றிக்ஸ்

இங்கிலாந்தில் நடைபெற்ற கழகங்களுக்கிடையிலான ரி–20 தொடரில் சகவீரருடன் மோதி காயமடைந்த ஆஸ்திரேலியாவின் ஹென்றிக்ஸ் மருத்துவமனையில் இருந்து வெளியேறியுள்ளார்.
இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் கழகங்களுக்கிடையிலான 'ரி–20' தொடரில் சர்ரே, சசெக்ஸ் அணிகள் மோதிய ஆட்டத்தில் சசெக்ஸ் வீரர் அடித்த பந்தை பிடிக்கச் சென்ற சர்ரே அணியின் ஹென்றிக்ஸ், பலன்ஸ் இருவரும் நேருக்கு நேர் மோதிக்கொண்டனர். நினைவு இழந்ததால் இருவரும் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டனர். இதில் பலன்சின் தலை மற்றும் கன்னத்தில் சில தையல்கள் போட்டபின் வீடு திரும்பினார். முகத்தின் தாடையில் காயம் ஏற்பட்ட ஹென்றிக்ஸிக்கு மட்டும் மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சையளிக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்று இவரும் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். (ம)

# ஆனந்த் ஆறாவது இடத்தில் கார்ல்சன் கடைசி இடத்தில்


ஆனந்த்

நோர்வே செஸ்ஸின் இரண்டாவது சுற்றையும் ஆனந்த் சமநிலைப்படுத்தியுள்ளார். அதேநேரத்தில் நடப்பு சம்பியனான நோர்வேயின் மேக்னஸ் கார்ல்சென் முதல் இரு சுற்றுகளிலும் தோல்வி கண்டுள்ளார்.
முதல் சுற்றில் இத்தாலியின் பேபியானோ கருணாவுடன் சமநிலை செய்த ஆனந்த், 2ஆவது சுற்றில் நெதர்லாந்தின் அனீஷ் கிரியுடன் மீண்டும் சமநிலை செய்துள்ளார்.
தற்போதைய நிலையில் பிரான்ஸின் மேக்ஸைம் வசியெர், அமெரிக்காவின் நாகமுரா, அனீஷ் கிரி, கருணா, பல்கேரியாவின் வெஸலின் ஆகியோர் தலா 1.5 புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளனர். ஆனந்த் ஒரு புள்ளியுடன் 6ஆவது இடத்திலும், ரஷ்யாவின் அலெக்சாண்டர், ஆர்மேனியாவின் லெவோன் ஆரோனியன், நோர்வேயின் ஹேமர் ஆகியோர் தலா 0.5 புள்ளிகளுடன் 7ஆவது இடத்திலும் உள்ளனர். கார்ல்சன் புள்ளி ஏதுமின்றி கடைசி இடத்திலும் உள்ளனர். (ம)

# வேகப்பந்துவீச்சின் சொதப்பலே தோல்விக்கு காரணம்


டோனி

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் ஒருநாள் ஆட்டத்தில் வேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பாக செயற்படவில்லை என்று இந்திய அணித் தலைவர் டோனி குற்றஞ்சாட்டியுள்ளார்.
இந்திய அணி பங்களாதேஷ்ற்கு சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ஒருநாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் மிர்பூரில் நடந்தது. இந்த ஆட்டத்தில் பங்களாதேஷி ன் இமாலய இலக்கை எட்ட முடியாமல் தவித்த இந்திய அணி 79 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது.
தோல்வி தொடர்பாக டோனி தெரிவித்ததாவது 'பங்களாதேஷ் அணி முதலில் இருந்தே நல்ல ஆட்டத்தை வெளிப்படுத்தியது. ஆனால் எங்களுக்கு துடுப்பாட்டம் சாதகமாக அமையவில்லை. பந்துவீச்சை பொறுத்த வரை, வேகப்பந்து வீச்சாளர்கள் தங்களது பணியை சரியாக செய்யவில்லை. சுழற்பந்து வீச்சாளர்கள் நன்றாக வீசினர். வேகப்பந்து வீச்சை பங்களாதேஷ் வீரர்கள் திறம்பட எதிர்க் கொண்டனர். அடுத்த ஆட்டத்தில் வெற்றி பெறுவோம். ஆனால் இந்தத் தோல்வி எங்களுக்கு ஏமாற்றம் அளிக்கிறது' என்று தெரிவித்துள்ளார். (ம)

## வீழ்ந்தார் ஹமில்டன்

ஆஸ்திரேலிய கார் பந்தயத்தின் பயிற்சிப்போட்டி ஒன்றில் மெர்சி டெஸ்அணியின் முன்னணி வீரரான லெவிஸ் ஹமில்டனை, ஜெர்மன் வீரர் நிக்கோ ராஸ்பெர்க் வெற்றி பெற்றுள்ளார்.
உலக கார்பந்தயத் தொடரின் முதல் 7 சுற்றுக்கள் முடிந்த நிலையில் எட்டாவது சுற்றுக்கான பயிற்சியில் ஹாமில்டனை விட அதிவேகமாக காரை செலுத்தி ராஸ்பெர்க் முதலிடம் பிடித்தார். ஹமில்டன் இரண்டாவது இடத்தையும் ரெய்கோன் 3ஆவது இடத்தையும் பிடித்தனர். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டோனிக்கு அபராதம்

## என்னம்மா இப்படிப் பண்றியளேயம்மா!



இந்தியா – பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் மோதல் போக்கை கடைப்பிடித்ததற்காக டோனிக்கு 75 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

டோனி ஒரு ஓட்டமொன்றைப் பெறுவதற்காக ஆடுகளத்தின் மறுமுனையை நோக்கி ஓடும்பொழுது குறுக்கே வந்த பங்களாதேஷ் பந்துவீச்சாளர் ரஹ்மானை மோதித் தள்ளினார். தவறுதலாக நடந்த சம்பவமாக இது இருந்தாலும் தவிர்க்கப்பட வேண்டிய சம்பவம் என்ற காரணத்தினால் டோனிக்கு குறித்த ஓட்டத்துக்கான கட்டணத்தில் இருந்து 75 சதவீதமும், ரஹ்மானுக்கு 50 சதவீதமும் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

டோனி நேர்திசையால் சென்ற காரணத்தினால் அவர் கூடுதல் அவதானமாக இருந்திருக்க வேண்டும் என்பதற்காகவே டோனிக்கு அதிகப்படியான அபராதம் என்று ஐ.சி.சி. தெரிவித்துள்ளது. ஆனால் பந்துவீச்சாளரை தவிர்த்து ஓடியிருந்தால் டோனி ரண்அவுட் ஆகியிருக்கும் சந்தர்ப்பமும் உண்மையில் இருக்கவே செய்தது. (ம)

# சச்சினுக்கு சிக்கல்



பாரத ரத்னா விருதை சச்சின் தான் ஒப்பந்தமாகியுள்ள விளம்பரத்தில் தவறாக பயன்படுத்தியதாக அவர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

கிரிக்கெட்டில் எண்ணிலடங்காத சாதனையைப் படைத்ததற்காக சச்சினுக்கு இந்தியநாட்டின் உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. இதன் மூலம் இந்த விருதை பெற்ற முதல் விளையாட்டு வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

பாரத ரத்னா விருது பெற்றவர்கள் அதை தங்களது தனிப்பட்ட விளம்பரத்துக்காக பயன்படுத்தக்கூடாது என்ற நிலையில், சச்சின் தன்னுடைய விளம்பரத்தில் அதை பயன்படுத்தியதாக வழக்கு தொடரப்பட்டுள்ளது. (ம)

# மைதானத்தில் அளவுக்கு அதிக மோதல்போக்கு நெய்மருக்கு தடை



கோப்பா அமெரிக்க உதைபந்தாட்டத் தொடரில் ஒரு ஆட்டத்தில் விளையாட நெய்மருக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொலம்பியாவுக்கு எதிரான ஆட்டத்தில் பிரேஸில் 1:0 என்று போராடித்தோற்றது மட்டுமல்லாமல் இந்த ஆட்டத்தில் மோசமான நடத்தைக்காக நெய்மருக்கு சிகப்பு அட்டை காண்பிக்கப்பட்டது. இதனையடுத்து தென் அமெரிக்க கால்பந்து கூட்டமைப்பு நெய்மர் விளையாட ஒரு ஆட்டத்துக்குதடை விதித்துள்ளது. ஆனால் மேலும் சில ஆட்டங்களிலும் அவர் தடை செய்யப்படலாம் என்று பிரேஸில் கால்பந்து வட்டாரங்கள்தெரிவிக்கின்றன. இப்போதைக்கு ஒரு ஆட்டத்தில் மட்டும் தடைவிதிக்கப்பட்ட நெய்மர் மேலும் சி[illegible] ஆட்டங்களில் விளையாட தடைவிதிக்கப்படுவது தொடர்பாக இன்று முடிவெடுக்கப்படும் என்று தெரிகிறது. பெரு அணிக்கு எதிராக ஒரு மஞ்சள் அட்டையை வாங்கிய நெய்மர், கொலம்பிய தடுப்பாட்ட வீரர் ஜெய்சன் முரில்லோவிடம் மோதல் போக்கைக் கடைபிடித்ததால் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டது. எனினும் பிரேஸில் கால்பந்து கழகம் தன் தரப்பு வாதங்களை இன்று முன்வைக்க உள்ளதால் இதன் பிறகே இறுதி முடிவு எட்டப்படும். (ம)

# சானியா ஜோடி அதிர்ச்சித் தோல்வி முதல் சுற்றுடன் வெளியேற்றம்



விம்பிள்டன் ரென்னிஸ் தொடருக்கு தயாராகும் வகையில் ஏகான் சர்வதேச ரென்னிஸ் தொடர் இங்கிலாந்தின் பர்மிங்காம் நகரில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் இரட்டையர் பிரிவில் மிர்ஷா ஜோடி முதல் சுற்றிலேயே தோல்வியடைந்து வெளியேறியுள்ளது.

இந்திய– ஆஸ்திரேலிய ஜோடியான சானியா மிர்ஷா – கேசே டெல்லக்வா முதல் சுற்றில் சீன ஜோடிகளான ஜி செங் – யங் ஜன் சான் ஜோடியை எதிர்கொண்டது. தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள சானியா ஜோடி, மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள சீன ஜோடிகளின் சர்வீஸ்களை முறியடிக்க முடியாமல் ஆரம்பம் முதலே தடுமாறியது. இறுதியில் 4:6, 2:6 என்ற செற்கணக்கில் தோல்வியடைந்து வெளியேறியது. (ம)

# லிசிக்கி சாதனையுடன் வெற்றி



விம்பிள்டன் ரென்னிஸ் தொடருக்கு தயாராகும் வகையில் ஏகான் சர்வதேச ரென்னிஸ் தொடர் இங்கிலாந்தின் பர்மிங்காம் நகரில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஜேர்மனியின் லிசிக்கி சுவிஸ்லாந்தின் டென்சிச்சை இலகுவாகத் தோற்கடித்துள்ளதுடன் புதிய சாதனையையும் நிலை நாட்டியுள்ளார்.

தரப்படுத்தலில் 19ஆம் நிலை வீராங்கனையான ஜேர்மனியின் சபினே லிசிக்கி 6:1, 7:6 என்ற நேர் செற் கணக்கில் சுவிற்ஸர்லாந்தின் பெலின்டா டென்சிச்சை தோல்விய டை யச் செய்ததுடன் சவாலான அதிக சர்வீஸ்களை வீசியவர் என்ற சாதனையையும் படைத்துள்ளார்.

அதாவது எதிர் வீராங்கனை தொட முடியாத அளவுக்கு 27 சர்வீஸ்களை விளாசினார். இதன் மூலம் பெண்கள் ரென்னிஸ் வரலாற்றில் ஒரு ஆட்டத்தில் சவாலான அதிக சர் வீஸ்களை விளாசிய வீராங்கனை என்ற சாதனையை படைத்தார். இதற்கு முன்பு அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், எஸ்தோனியா வின் கனேபி ஆகியோர் தலா 24 சவாலான சர்வீஸ்கள் வீசியதே சாதனை யாக இருந்தது எனபது குறிப்பிடத்தக்கது. (ம)


**விற்பனைக்கு**

றெஸ்ரோறன்ற் ஒன்றின் அலுமினியக்கதவு நிலைகள், கண்ணாடிக்கதவுகள், சமையல் பாத்திரங்கள், பில் போடும் டொற்மற்றிக் பிறிண்டர் (Dot matric printer) என்பன மலிவு விற்பனைக்குண்டு.

தொடர்பு - 071 304 4050 (61228) (3,6,11)

**AMT Marketing and Distributors**

விற்பனைப் பிரதிநிதிக்கான நேர்முகத்தேர்வு

மேற்படி எமது நிறுவனத்திற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை. எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நேர்முகத்தேர்வு எமது அலுவலகத்தில் இடம்பெறும். Beverage விற்பனை தொழில் தொடர்பில் முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

இல.341. புங்கன்குளம் சந்தி, கண்டி வீதி, அரியாலை,யாழ்ப்பாணம். (61222) (3,6,11)

**Knowledge Universe**

British College of International Studies

IELTS -Life Skills
IELTS-AC/G
i-Spoken (International)
16 Yrs in Teaching

உங்களுக்கு வசதியான நேரத்தில் சர்வதேச பரீட்சைகளுக்கான மற்றும் தொடர்பாடலுக்கான ஆங்கிலத்தை 16 வருட அனுபவமுள்ள முதுமாணி MBA(London)ஆசிரியரிடம் கற்கலாம்.

Web: http://edu.kugroup.info

KU Education - 0777302882
626,1/1,K.K.S Rd,Jaffna

**வரணி விவசாயிகள் நடத்தும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி**



இடம் : வரணி இயற்றாலை அந்தணத்திடல் (சவாரித்திடல்)
காலம் : 21.06.2015 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் ஒரு மணி

பங்குபற்றுவோருக்கு தங்கம் மற்றும் பெறுமதிமிக்க பரிசில்கள் காத்திருக்கின்றன.
முன்பதிவு: 21.06.2015
பி.ப ஒரு மணிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்.

வரணி விவசாயிகள். (61221)(10.6.3)

**ஏசியன் தளபாடத்தின்** 10ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு

இன்று முதல் மாபெரும் விலைத்தள்ளுபடியும் பரிசுக் குவியலும்

1st Prize - 66400/= Innovex Refrigerator
2nd Prize - 46000/= Innovex 32" LED TV
3rd Prize - 26700/= Washing Machine

மேலும் பத்து அதிஷ்டசாலிகளுக்கு Innovex Stand Fan worth of 4600/=




230, நாவலர் வீதி, (இலுப்பையடி ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்) T.P: 0773583879, 0217916911 0778314201


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.